www.padippakam.com

# கடவுள்களின் அடிமைகள்



மிஸ் காதரின்மேயோ
தமிழில்:- ப. சீனிவாசன்

மருதம் பதிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com

# கடவுள்களின் அடிமைகள்

மிஸ். காதரின் மேயோ
தமிழில்: ப. சீனிவாசன்

நிறுவனர்: திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்

மருதம் பதிப்பகம்
202, கடைவீதி,
ஒரத்தநாடு.

படிப்பகம்

www.padippakam.com

# நூல் விபர அட்டவணை



| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கடவுள்களின் அடிமைகள் |
| ஆசிரியர் | : | மிஸ்காதரின்மேயோ |
| தமிழில் | : | ப. சீனிவாசன் |
| பதிப்பு ஆண்டு | : | மருதம் பதிப்பகம், முதற்பதிப்பு, டிசம்பர் 2000 |
| நூல்வகை | : | வரலாறு |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| தாளின் தன்மை | : | வெள்ளைத் தாள் |
| மொத்த பக்கங்கள் | : | 152 |
| எழுத்து வகை | : | லேசர் 10 புள்ளி |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : | மருதம் பதிப்பகம், 202, கடைவீதி, ஒரத்தநாடு-614 625. |
| கணிப்பொறி அச்சு | : | திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம் மற்றும் புத்தக உருவாக்க மையம் 141.ஜே.டி.காம்ப்ளக்ஸ், ஈஸ்வரி நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்-613 007. போன் : -04362-42764. |
| விலை | : | ரூ. 36/- |



படிப்பகம்

www.padippakam.com

# பதிப்பாளரின் முன்னுரை

1927-ல் வெளியான ஒரு புத்தகம் இந்தியாவில் மட்டுமன்றி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அடிமைப்பட்ட பாரதத்தின் அவ்லமான இருண்ட பகுதியை வெளிச்சம் போட்டுக் காட்டிய அந்தப் புத்தகத்தை ஒரு சாக்கடை இன்ஸ்பெக்டரின் அறிக்கை என்று காந்தியடிகள் வர்ணித்தார்.

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர் அமெரிக்கா சென்று அமெரிக்க மக்களின் அனுதாபத்தையும், உதவிகளையும் பெற்று வருவதை அறிந்த அமெரிக்க வாழ் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் ஒரு கூலி எழுத்தாளரைக் கொண்டு ஒரு புத்தகம் எழுதச் செய்தனர்.

உலகை ஆளும் தகுதி ஆங்கிலம்பேசும் வெள்ளைநிறம் படைத்தவர்களுக்கே உண்டு என்ற வக்கிரமான எண்ணமும், பிறநாடுகள் அடிமைத் தனத்திலிருந்து விடுபடுவதை விரும்பாத வருமான, மிஸ்காதரின் மேயோ என்ற அமெரிக்கப் பெண்மணியினால் எழுதப்பட்ட 'அன்னை இந்தியா' என்ற புத்தகம்தான் அது.

பிலிப்பைன்ஸ் நாட்டினரின் விடுதலை வேட்கைக்கு எதிராக அவர் எழுதிய 'பயத்தின் தீவுகள்' என்ற நூல் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாகவே இப்படியொரு நூல் எழுதும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து மக்களிடையே ஒன்றிப் பழகி விபரங்களை அறியாமலேயே ஆங்கிலேய

படிப்பகம்

www.padippakam.com



அதிகாரிகள் தந்துதவிய ஆவணங்களை மட்டுமே வைத்துக் கொண்டு நூலைப் படைத்து விட்டார் மிஸ்மேயோ.

அன்னை இந்தியாவிலும் சரி அவரால் உருவாக்கப்பட்ட ஏனைய இரண்டு நூல்களிலும் சரி, இந்திய சமுதாய வாழ்வின் அவலங்கள் பூதாகாரமாகச் சித்தரித்துக் காட்டப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், விஷக் கணையாக அவர் பயன்படுத்தியிருப்பது மதப் பிரச்சினையேயாகும். இந்து முஸ்லிம் மக்கள் என்றென்றுமே இணைந்து வாழ்ந்து விடக்கூடாது என்ற குரூரமான சிந்தனையோடு தீவிரமாகச் செயல்பட்டிருக்கிறார் மிஸ்மேயோ.

இந்தியாவில் குடியேறிய பல அந்நிய நாட்டினரும் தங்கட்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவை இங்குள்ள மதவேறுபாடுகள், மன்னர்களிடையே இருந்த விரோத மனப்பான்மை, மக்களிடையே பரவிக் கிடந்த மூடநம்பிக்கைகள் ஆகியவைகளையேயாகும். அவைகளை மிஸ்மேயோவும் தனது நூல்களில் மிகவும் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

நீக்ரோக்களை அடிமைகளாகவும், மிருகங்களைவிடக் கேவலமாகவும் நடத்திய அமெரிக்காவைச் சேர்ந்த மிஸ்மேயோ இங்குள்ள மூட நம்பிக்கையின் அடிமைத் தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட முன்வந்தது வேடிக்கையான விஷயம் தான். 1863-ம் வருஷம் வரை மனிதர்களை விலங்குகள்போல அடிமையாக வாங்கியும் விற்றும் வந்த அமெரிக்க நாட்டுப் பெண்மணிதான் இந்தியாவின் அவலங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கிருஸ்துவமதத்திற்கு எதிராகப் பேசினால் சிந்தித்தால் அவர்களுக்கு கட்டைவிரல் முறுக்காணி, கழுத்துக்குத்து யந்திரம்

படிப்பகம்

www.padippakam.com



'தோட்டியின் மகள்' மற்றும் 'பரண்யந்திரம்' போன்ற கொடூரமான ஆயுதங்கள் மூலமாக சித்திரவதை செய்து வந்த நாட்டின் புத்திரிதான் பாரதத்தின் சாதீய மத அவலங்களைப் படம்பிடித்துக்காட்ட முன் வந்திருக்கிறார். (இதில் 'கழுத்துக் குத்துயந்திரம்' என்பது, ஒரு இரும்பு வளையத்தின் உட்புறத்தில் ஊசிபோல நூற்றுக் கணக்கான ஆணிகள் பதிக்கப்பட்டதாகும். மதவிரோத மாகப் பேசியவர்கள் கழுத்தில் அதனை மாட்டி விடுவார்கள். அதனை மாட்டிக் கொண்டு ஒருவன் நடக்கவோ, உட்காரவோ முயற்சி செய்தால் அந்த வளையத்து ஆணிகள் அவன் கழுத்தை சுருக்சுருக்கென்று குத்தும். சிறிது நேரத்திற்குள்ளாகவே அவன் தொண்டை வீங்கிமூச்சுவிட இயலாமல் திணறி இறந்துவிடுவான். இதைப் போன்றவையே ஏனைய ஆயுதங்களும். (இது குறித்து விபரமாக அறிய அமெரிக்க சிந்தனாவாதியான இங்கர்சாலால் எழுதப்பட்டு, திரு, வெ.சாமிநாத சர்மா அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, மருதம் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள 'மக்கள் உரிமை' என்ற நூலைப்பார்க்கவும்.)

முஸ்லிம் மதத்தின்பேரில் பெரிய ஈடுபாடோ பக்தியோ கொண்டு மிஸ்மேயோ இப்படியெல்லாம் எழுதிவிட வில்லை. இங்குள்ள மக்களிடையே பிரிவினையை வளர்க்கவும், அவர்களிடையே நிரந்தரப் பகைமையை மூட்டிவிடவுமே அவர் மதப் பிரச்சினையை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

பொதுவாகவே இந்திய முஸ்லிம்களும் இந்துக்களும் ஒற்றுமையாய் வாழ்வதை ஆங்கிலேயர்கள் விரும்பவில்லை. முதல் உலகமகா யுத்தம் முடிந்தவுடன் துருக்கியப் பேரரசு சிதைந்தவுடன், துருக்கி சுல்தானது பதவி மீளவேண்டும் என்று அனைத்து முஸ்லிம்களும் ஒன்று திரண்டனர். இந்தியாவில் இந்த விஷயத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து

படிப்பகம்

www.padippakam.com



போராடினர் (கிலாபத் இயக்கம்). அந்த ஒற்றுமையை நீடிக்கவிட பிரிட்டிஷ் அயல்துறை விரும்பவில்லை. எனவே, என்னென்ன சூழ்ச்சிகள் செய்து இரு மதத்தினரிடையேயும் பிளவை உண்டாக்க முடியுமோ, அவ்வளவையும் செய்வதற்கு முனைந்தனர்.

இருநூறு ஆண்டுகளுக்குமேல் நம்மை ஆண்ட பிரிட்டிஷார் போகும் போது நமக்கு நிரந்தரப் பிரச்சினையாக பாகிஸ்தான் என்ற நெருப்பை மூட்டி விட்டுச் செல்லவில்லையா? அந்த நெருப்புத்தானே பெருந்தீயாக எரிந்து இன்றும் நம்மை வாட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தியர்களை பாலுணர்ச்சி மிகுந்தவர்களாகவும், இளமையிலேயே ஆண்மை இழந்து விடுபவர்களுமாக மிஸ்மேயோ சித்தரித்துள்ளார். கன்னியான மிஸ்மேயோ இந்தியர்களின் ஆண்மையை எப்படிப் பரிசோதித்து அறிந்து கொண்டார் என்பது நமக்கு விளங்கவில்லை.

மிஸ்மேயோவின் வக்கிரபுத்திக்கு ஒரு சிறு எடுத்துக் காட்டை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மேயோவின் நூல் உருவாகிக் கொண்டிருந்த சமயத்தில் அவற்றிற்கு விபரம் சேகரித்துத் தந்த ஜே.ஸி. பிரிங்கில் என்ற ஆங்கிலேயர் ஹஷிம், மக்தூன் ஆகிய இரண்டு முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விபரத்தை அவருக்குக் கொடுத்தார். அவர்கள் இருவரும் இந்துப் பெண்களைக் கற்பழித்துக் கொலை செய்வர்கள். முதலாமவர் குற்றத்திற்குப் போதிய சாட்சிகள் இல்லையென்று விடுவிக்கப்பட்டார். ஏனையவருக்கு செஷன்ஸில் மரணதண்டனை விதிக்கப்பட்டும் அப்பீலில் விடுதலை செய்யப்பட்டார். இந்த விபரங்களைப் பெற்றுக் கொண்டமேயோ, மக்தூன்கதை நான் இதை ஓர் இந்து குருவாக

படிப்பகம்

www.padippakam.com



ஆக்கட்டுமா? என்று கேட்டு அப்படியே ஒப்புதலும் பெற்றுள்ளார். இந்துக்களுக்கு எப்படியாவது அவப்பெயர் உண்டாக்க வேண்டுமென்பதிலும் தம்முடைய நோக்கங்களுக்கு ஏற்ப கதைகளைத் திரித்துக் கூறவும் அவர்தயங்கவில்லை. ஹஷிம் என்ற பெயர் லக்ஷ்மன்சிங் என்றும், மக்தூன் என்ற பெயர் கோசுவாமிஜி என்றும் மாற்றப்பட்டது.

மேயோவின் இந்தப் பிரித்தாலும் சூழ்ச்சிக்கு முஸ்லிம்களும் பலியானதுதான் விந்தை. ஜே.எச். ஆதாம் என்னும் காவல்துறை அதிகாரி "புத்தகத்தை (அன்னை இந்தியா) முஸ்லிம்கள் வரவேற்கிறார்கள். புத்தகம் இந்து மதத்திற்கு எதிரான மிகச் சிறந்த தாக்குதல் என்று கருதுகிறார்கள். அதனால் இந்தப் புத்தகத்தை இந்துஸ்தானியில் மொழிபெயர்த்து வெளியிட விரும்புகிறார்கள். வகுப்புவாத கிளர்ச்சி நோக்கத்துடன்தான் புத்தகத்தை மொழிபெயர்க்க அவர்கள் விரும்புவதாக இருந்தபோதிலும் அவர்களை மொழிபெயர்க்க அனுமதிப்பதில் ஏதும் தீங்கு இருப்பதாக நான் எண்ணவில்லை" என்று கடிதம் எழுதியுள்ளார்.

மேயோவின் இரண்டாவது புத்தகமான "கடவுள்களின் அடிமைகள்" தயாராகிக் கொண்டிருந்தபோது அந்தப் புத்தகம் மிகவும் துரதிர்ஷ்ட வசமான விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும் என்று கருதிய இந்திய வைசிராய், இந்திய விவகாரச் செயலாளருக்கு தந்தி அனுப்பி அது குறித்து அபிப்பிராயம் கேட்டார். புத்தகத்தின் முன்பிரதி ஒன்றை வாங்கிப் படித்துப்பார்த்த இந்திய விவகாரச் செயலாளர்,

"முதல் இரண்டுகதைகளில் இந்துக்களுக்கு பாதகமாக அவர்களை முஸ்லிம்களுடன் ஒப்பிடும்போக்கு காணப்

படிப்பகம்

www.padippakam.com



படுகிறது. இது கிளப்பும் விமரிசன அபிப்பிராயங்களில் கசப்பை விளைவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை" என்று தந்திமூலம் பதில் அளித்துள்ளார்.

இந்த இடத்தில் இன்னொரு விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. 1927ல் "முகமது ஒரு தெய்வ அவதாரத்தின் மனிதனுடைய வாழ்க்கைச் சரிதம்" என்ற புத்தகத்தை ஹட்சின்ஸன் கம்பெனியார் வெளியிட்டனர். இஸ்லாம் மதத்தைப் பற்றியோ இந்து மதத்தைப் பற்றியோ ஏதேனும் ஒரு புத்தகம் யாராவது ஒரு ஆசிரியரால் எழுதப்பட்டு வெளிவந்தால் அன்னை இந்தியா புத்தகத்திற்குத் தடை விதிக்கப்படாத காரணத்தால் இந்தப் புத்தகத்திற்குத் தடை விதிப்பதா வேண்டாமா? என்று அரசாங்க இலாக்காவில் சர்ச்சை ஏற்படும். மேலேகண்ட புத்தகம் குறித்து இந்திய அரசாங்க நிறுவனத்தின் இயக்குநரான, டி.பெட்ரிக் என்பவர், "இப்புத்தகம், இப்போதுள்ள அதன் நிலைமையில் முகமதியர்களின் உணர்ச்சிகளை நிச்சயமாக வருத்தும்...... இதைத் தடை செய்தால் ஏதும் நஷ்டம் விளையப்போவதில்லை" என்று ஆலோசனை கூறினார். இந்த ஆலோசனையை வைசிராய் ஏற்றுக் கொண்டு கடற்சுங்க சட்டத்தின் கீழ் புத்தகத்தைத் தடைசெய்தார். ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியை இது நன்கு விளக்குகிறதல்லவா?

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழக நூலகத்தின் கையெழுத்துப் பிரிவு பகுதியிலும் லண்டனிலுள்ள இந்திய அலுவலகப் பொது ஆவண அலுவலகத்திலும், புதுடெல்லியிலுள்ள தேசிய ஆவணப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றிலும் முயன்று தேடி. மிஸ்மேயோவின் அந்தரங்கக் கடிதங்களையும் ஆராய்ந்து மேற்கண்ட விபரங்களை

படிப்பகம்

www.padippakam.com



ஆதாரபூர்வமாக, காசி இந்துப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு மனோரஞ்சன் ஜா தனது ‘காதரின் மேயோவும் இந்தியாவும்,’ என்ற நூலில் விவரித்துள்ளார்.

மேயோவின் முதல் நூலான “அன்னை இந்தியா”வைக் கண்டனம் செய்து சில பாதிரிமார்கள் கட்டுரைகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர். இந்தியா, பர்மா, சிலோன் தேசியக் கிருஸ்துவக் கழகத்தின் செயற்குழு, “மிஸ் மேயோவின் புத்தகத்தில் காணும் இந்தியச் சித்திரம் உண்மைகளுக்குப் புறம்பானது. இந்திய மக்களுக்கு நியாயம் செய்யாதது என்பதை எவ்விதத்தயக்கமுமின்றி வற்புறுத்துகிறோம்” என ஓர் அறிக்கை வெளியிட்டது. மேயோவின் புத்தகத்தில் காணும் வெறுப்பூட்டும் தாக்கு தல்களை வன்மையாகவும், தயக்கமின்றியும் தாம் கண்டிப்பதாக ஏழுபுகழ்பெற்ற அமெரிக்கப் பாதிரிமார்கள் அறிக்கை வெளியிட்டார்கள். இந்தியாவைப் பற்றிய விவரணையில் இவ்வளவு நியாய உணர்வு அற்று அப்பட்டமான மன வெறுப்புடன் ஓர் அமெரிக்கர் எழுதியுள்ளாரே எனத் தாம் அவமான உணர்வு கொள்வதாக அவர்களுடைய அறிக்கை கூறியது. மேலும் ஆம் ஹர்ஸ்டுக் கல்லூரியின் பட்டதாரியும், இந்தியாவில் பதினேழு ஆண்டுக்காலம் சமயத் தொண்டு புரிந்த வருமான ரெவரெண்டு ஆல்டன்ஹெச் கிளார்க் என்பவர் ‘அன்னை இந்தியா’ புத்தகத்தின் அடிப்படைக் கருத்துக்களையும் தீர்மானங்களையும் மறுத்து ஒரு நீண்ட கட்டுரையை ‘அட்லாண்டிக் மந்த்லி’ பத்திரிக்கையில் எழுதினார் என்பதும் சற்று ஆறுதலான விஷயங்கள்.

எல்லையற்ற வஞ்சக உணர்வோடும் வக்கிர புத்தியோடும், நாசகார புத்தியோடும்தான் மிஸ்மேயோ தனது நூல்களை எழுதியுள்ளார் என்பது அனைவருமே உணர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



கொண்ட உண்மைதான். இந்து மதத்தை இழிவு படுத்துவதும், இந்து முஸ்லிம் மதத்தினரிடையே விரோதத்தை மூட்டி விடுவதும் அவரது அடிப்படையான ஆசைகளாக இருந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, இந்தியர்கள் சுதந்திரம் பெறத் தகுதியற்றவர்கள் என்று உலகிற்கு பொய்த் தம்பட்டம் அடிக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட சில பிரிட்டிஷாரின் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுத்துள்ளார்மிஸ்மேயோ என்பதும் தெளிவு. அவரின் கீழ்த்தரமான எண்ணங்கள் உலகம் அறிந்த உண்மைதான். ஆனால் .............

இந்த ஆனால் சற்றுப் பெரிய ஆனால்தான்,

மேயோவின் நோக்கங்களைக் குறை கூறும் நாம், அவரது அவதூறுகளுக்கு அப்பாற்பட்டு இருக்கிறோமா என்பதனையும் ஆராய வேண்டிய கட்டாயத்தில் தானே இன்றும் இருக்கின்றோம். அவலங்களைச் சுட்டிக் காட்டும் மேயோ மீது ஆத்திரப்படும் நாம் அந்த அவலங்களிலிருந்து எந்த அளவுக்கு மாறுபட்டு, வேறுபட்டு, விடுபட்டு இருக்கிறோம். இப்படி நாம் நம்முடைய மனச்சாட்சியை முன்வைத்து எழுப்ப வேண்டிய கேள்விகள் பல இருக்கின்றனவே!

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலைபெற்று ஐம்பத்து மூன்று வருடங்களுக்குப் பிறகு நம்முடைய அரசியல், சமுதாய வாழ்வுமுறை எப்படி இருக்கிறது?

சாதியும் மதமும்தானே நமது அரசியலை ஆக்ரமித்து ஆட்டிப்படைக்கின்றன. ஆன்மீகத் துறைக்கு மட்டுமே பயன்படவேண்டிய அதில் நம்பிக்கையும் நாட்ட முமுடையவர்கள் மட்டுமே ஈடுபடவேண்டிய மதமும் சாதியும் எந்த அளவுக்கு அரசியலில் வேரூன்றி விளையாடி வேதனைகளை விளைவித்துக் கொண்டிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



நாளுக்கொரு சாதிச் சங்கமும், வேளைக்கொரு சாதிச் சண்டையுமாக நமது சமுதாய வாழ்வை எந்த அளவுக்கு சீரழித்துக் கொண்டிருக்கின்றன. தொழில் நீதியாகப் பிறப் பெடுத்த சாதிகள் இன்று பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காரணமாகவும் மனித எண்ணிக்கையில் பெரும்பான்மை சிறுபான்மை காரணமாகவும் ஒருசிலரது பதவி வெறிகாரணமாகவும் சண்டையையும், சச்சரவையும் தானே பெருக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியா முழுவதுமே இந்த அவல நிலைமை தானே தாண்டவ மாடிக் கொண்டிருக்கிறது.

ஆண்டவனை அடைவதற்காக மகான்களாலும், தீர்க்க தரிசிகளாலும் காலத்திற்கேற்ப, தமது சிந்தனைக்கேற்பத் தோற்றுவிக்கப்பட்ட மதங்கள் ஆதிக்க உணர்வு காரணமாகவும், அதிகாரப்போட்டி காரணமாகவும் மக்களைப் பலிவாங்கிக் கொண்டுதானே இருக்கின்றன. மக்களது மன உயர்வுக்காக மனிதத்தை உயர்த்துவதற்காக, மக்களை ஆண்டவனிடம் நெருங்கச் செய்வதற்காகப் படைக்கப்பட்ட மதங்கள் மக்களிடையே வேற்றுமைகளையும், விரோதத்தையும் விதைத்து வளர்த்து அவர்களது கழுத்துக்குக் கத்தி வைத்துக் கொண்டுதனே இருக்கின்றன. போலிச் சாமியார்கள் பற்றியும், அவர்களது லீலா விநோதங்கள் குறித்தும் புதுப்புதுச் செய்திகள் புறப்பட்டுக் கொண்டுதானே இருக்கின்றன. அறியாமை காரணமாகவும் பேராசை காரணமாகவும் அவர்களது ஈனச் செயல்களுக்கு பாமரர் மட்டுமின்றி சமுதாயத்தில் உயர்மட்டத்திலுள்ளவர்களும், படித்தவர்களும் கூடப் பலியாகிக் கொண்டுதானே இருக்கின்றனர்.

பெண்சிசுக் கொலைகளும், பெண்ணடிமைத் தனமும் நம்மைவிட்டு நீங்கி விடவில்லையே! ஜாதகத்தில் தோஷமென்பதற்காகவும், புதையல் எடுப்பதற்காகவும்

படிப்பகம்

www.padippakam.com



நரபலிகள் நடந்து கொண்டுதானே இருக்கின்றன. வரதட்சணைக் கொலைகள் பற்றி செய்திகள் வந்து நம்மை வாட்டிக் கொண்டுதானே இருக்கின்றன. ' ஏழெட்டு வயதே நிரம்பிய பெண்குழந்தைகளுக்குக்கூட கல்யாணம் செய்து வித்திடும் கேவலமான செய்திகளை வாரப்பத்திரிகைகள் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டுதானே இருக்கின்றன. சக மனிதனை விலங்காக நடத்தும் மனப்பான்மையும், சமுதாயத்தின் ஒருபகுதியினரை, உழைக்கும் அந்த வர்க்கத்தை ஒதுக்கியும், புறக்கணித்தும், மிரட்டியும் தானே நாம் வாழ்ந்து வருகிறோம். பல கிராமங்களில் டீக்கடைகளில் இரட்டைக் குவளை முறைதானே இன்னும் அரக்கத்தனமாக அமுலிலிருக்கின்றது. நாம் மனதளவில் வளர்ந்துள்ளோமா? உழைக்க வேண்டும், நமது நாட்டை உயர்த்தவேண்டும் என்ற எண்ணம் நம்மில் எத்தனைபேருக்கு இருக்கிறது? நாட்டில் நாமும் ஓர் அங்கம் நாம் நன்றாக வாழ வேண்டுமானால் நாடும் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எத்தனை பேரிடம் உள்ளது? கடின உழைப்பாலும் கட்டுப்பாடான வாழ்வாலும் நாட்டை உயர்த்தக் கடமைப்பட்டுள்ள நாம் அந்த வகையில் நமது சிந்தனையைப் படரவிட்டுள்ளோமா? “பொழுதெல்லாம் எமது செல்வத்தை அந்நியர் கொள்ளை கொண்டு போவது முறையோ” என்று புலம்பிய பாரதியின் வாக்கு இன்று வேறுவிதமாக செயல்பட்டுக் கொண்டுதானே இருக்கிறது.

நமது நாட்டுப் பணம் அந்நிய நாட்டு வங்கிகளில் எத்தனை ஆயிரம் கோடிகள் முடங்கிக் கிடக்கின்றது என்ற கணக்குயாருக்கேனும் தெரியுமா? தைமூரும், செங்கிஸ்கானும், கஜினி கோரிமுகமதுக்களும் கொள்ளையடித்துக் கொண்டு சென்ற செல்வங்களை விட அதிகமானதொகையல்லவா அந்நிய நாடுகளுக்குப் பயணம் போய்விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



நமது நாட்டு செல்வ வளம் அந்நிய நாட்டினரை வசீகரித்து இங்கு படையெடுத்து வரத் தூண்டியதென்றால் அவர்களை இங்கு நிலைபெறச் செய்து ஆட்சியைப் பிடித்து நம்மை அடிமைகளாக்க வழி வகுத்தது நம்மிடையே குடிகொண்டிருந்த வேற்றுமைகளும், நம்முடைய ஒற்றுமைக் குறைவுமல்லவா காரணங்களாக அமைந்தன.

1926-ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 26ஆம்தேதி அப்போதைய இந்திய வைசிராய் லார்டு ரீடிங் என்பவர் மிஸ்மேயோவுக்கு அளித்தபேட்டியில்,

"இந்தியாவிலிருக்கும் ஒவ்வோர் ஆங்கிலப் போர்வீரனையும் ஒவ்வொரு ஆங்கிலச் சிவில் ஊழியனையும் ........... ஆங்கிலேயே ஆண், பெண், குழந்தை கைக்குழந்தை எல்லோரையும் கணக்கிட்டால் மொத்தம் இரண்டு லட்சம்பேர் தான் இருக்கிறார்கள் என்பது மிகவும் ஆச்சரியமான உண்மை. இந்தியர்கள் ஒற்றுமையுடன் இருந்தால் அவர்கள் எங்களை இரண்டு நிமிஷ நேரத்தில் எச்சமயமும் விரட்டிவிட முடியும்" என்று குறிப்பிட்டார்.

நமது நாடு வளத்தில் குறைந்ததா? மக்கள் உழைக்கும் திறன் அற்றவர்களா? நமது மக்களின் உழைப்பல்லவா பிஜித்தீவுகளையும், ஈழத்தையும் உயர்த்தியது. தென்னாப்பிரிக்காவின் செல்வ வளத்தை உயர்த்தியது. உழைப்புக்கான மக்கள் எங்கெங்கு தேவைப்பட்டார்களோ அங்கெல்லாம் நமது மக்கள் தானே ஓடிச் சென்று உழைத்தனர், அந்த நாட்டை உயர்த்தினர். உலக நாடுகள் அனைத்திலுமே கூலிகளாகக் குடிபெயர்ந்தவர்கள், ஏற்றுமதி செய்யப்பட்டவர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள் அல்லவா?

படிப்பகம்

www.padippakam.com



மூளை பலத்தில் நமது மக்கள் குறைந்தவர்களா? இல்லையே? அமெரிக்காவின் கம்யூட்டர் துறையை ஆக்ரமித்திருப்பவர்கள் நம்மவர்கள் அல்லவா? அயல்நாடுகள் அத்தனையிலும் விஞ்ஞான முன்னேற்றத்தில் நம்மை விட எவ்வளவோ உயர்ந்து விளங்கும் மேலைநாடுகளிலும்கூட நமது நாட்டு மருத்துவர்களுக்கும் பொறியாளர்களுக்கும் பெரும்வரவேற்பு இருப்பது எதைக் காட்டுகிறது!

இவ்வளவு இருந்தும் இன்றும் நமது நிலைமை என்ன? உலகமக்கள் தொகையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் நாம் தனிநபர் வருமானத்தில் 90வது இடத்தில் இருக்கும் அவலத்திற்குக் காரணம் என்ன?

நமது மூடத்தனமான சமூகப் போக்குகளும், கண்மூடித் தனமான குருட்டு நம்பிக்கைகளும், சுயநலமும், பதவிவெறியும் கொண்ட அரசியல் வாதிகளும் விழிப்புணர்வே அற்ற மக்களுமே காரணம்.

மிஸ்மேயோ மட்டுமல்ல நமது நாட்டுச் சிந்தனையாளர்களும் சீர்திருத்த வாதிகளும் கூட அடிக்கடி தமது ஆக்ரோஷக் குரல்கள் மூலம் நமக்கு விழிப்பூட்டவே முயன்றிருக்கிறார்கள். ஆனால் நமது ஆழமான அறியாமை அவர்களது குரலை அலட்சியப்படுத்திவிட்டது.

மிஸ்மேயோவின் புத்தகத்தை காந்தியடிகள் 'ஒரு சாக்கடை ஆய்வாளரின் அறிக்கை' என்று விமரிசித்தது மிகவும் சரியே. ஆனால் அந்த சாக்கடை நமது கழிவுகளைச் சுமந்து கொண்டு புறத்தே ஓடிவிடவில்லை. நமது வீட்டிற்குள்ளேயே புகுந்து நாற்றமடித்து நமது சுகாதாரத்தைப் பாதித்து நோயுண்டாக்கி நம்மை நாசமாக்கிக் கொண்டிருப்பதும் உண்மையல்லவா?

படிப்பகம்

www.padippakam.com



நம்முடைய தாழ்வுகளுக்கு, நாம் அடிமைப்பட்டதற்கு, நாம்தான், நமது பலவீனங்களும் அறியாமையும், மூட நம்பிக்கைகளுமே காரணம் என்பது நன்கு தெரிந்திருந்தும் இன்னும் அவற்றிலிருந்து விடுபடாமல் இருப்பது, விழிப்படையாமல் இருப்பது அறிவீனமல்லவா?

நாடு விடுதலையடைந்து ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் நம்மை விழிப்படையச் செய்து வீறுகொள்ளச் செய்யாமல் நமக்குத் தக்க வழிகாட்டாமல் வழி மாறச் செய்த குற்றம் நமது நாட்டுத் தலைவர்களையே சேரும்.

மதங்களின் உண்மையான உயர்ந்த நோக்கங்களை நமக்கு போதித்து, நம்மை ஆன்மீகத்தில் சமரச நோக்கத்தோடு உயர்த்தக் கடமைப்பட்ட மடங்களும், மடாலயங்களும் பிற மத அமைப்புகளும், தமது கடமையைச் செய்யத் தவறி விட்டன என்றே கூறவேண்டும்.

மதமாற்றம் குறித்துப் பேசுகிறோம். அதற்காகக் கவலைப்படுகிறோம். கண்டனம் செய்கிறோம். ஆனால் மக்கள் எதனால் மதம் மாற ஒப்புக்கொள்கிறார்கள் என்பதனைச் சற்றாவது ஆழ்ந்து சிந்தித்தோமா? நமது மதத்தைப் பற்றிய அறிவை, அவைகளின் உண்மைத் தத்துவங்களை நாம் மக்களுக்குப் போதித்திருக்கிறோமா? பிறவியினால் நிர்ப்பந்திக்கப்பட்ட தீண்டாமையும், வறுமையும் மட்டுமல்ல நமது மதத்தைப் பற்றிய அறியாமையும், மதமாற்றத்திற்குக் காரணமாக உள்ளது என்பதை நாம் எப்போது உணர்ந்து கொள்ளப்போகிறோம்? அர்த்தமற்ற சம்பிரதாயங்களும் ஆடம்பரமான சடங்குகளுமே மதக்கோட்பாடுகள் என்று நினைத்திருக்கும் மக்களுக்கு நாம் எப்போது விழிப்பூட்டப் போகிறோம்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உபநிஷத்துக்களின் மூலமாக கடவுள் எங்கும் நிறைந்தவர் என்று

படிப்பகம்

www.padippakam.com



பிரகடனப்படுத்தப்பட்டதை நமது மக்களுக்கு எப்பொழுது எடுத்து விளக்கப் போகிறோம்? திருமூலரும், வள்ளலாரும், ராமகிருஷ்ண பரமஹம்சரும், விவேகானந்தரும் நமக்குத் தந்துள்ளஆன்மீக பொக்கிஷத்தை நமது நாட்டுப் பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் எப்போது விளக்கிக்காட்டப் போகிறோம்?

சமுதாய வாழ்விற்காக, தனிமனித பாதுகாப்பிற்காக, உருவான சாதிகளின் தேவை தற்போது இல்லை என்பதனை நமக்கு அறிவுறுத்தி இன ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியவர்கள் தமது சொந்தலாபத்திற்காக சாதி வெறிக்கு நம்மைப்பலி வாங்கி வருவதை உணர்ந்து கொள்ளாதது நமது குற்றமே.

மிஸ்மேயோவின் இந்தப் புத்தகத்தில் காணப்படும் சகல விதமான சமுதாய அவலங்களும் உடன் கட்டை ஏறுவது உட்பட இன்றளவும் நீடிப்பது நாம் மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயமே!

உடன் கட்டை ஏறுவது தற்போது கிடையாது என்று யாரும் வாதிட்டு விட முடியாது. அண்மையில்கூட ஒரு வட மாநிலத்தில் திருமதி ரூப்கன்வார் என்ற பெண்மணி உடன் கட்டை ஏறியதும், அவர் தெய்வமாக மதிக்கப்பட்டு, அவர் உடன் கட்டை ஏறிய இடம் வழிபாட்டுத் தல்மாக மாறியதும் நாம் அறிந்த விஷயம்தானே! இவ்வளவு படிப்பறிவும், விஞ்ஞான முன்னேற்றமும் தகவல், போக்குவரத்து சாதனங்கள் பெருகிய நிலையும், தவிர சட்டபூர்வமாகவே உடன்கட்டை ஏறுவது தடுக்கப் பட்டிருந்தும்கூட இதுபோன்ற சம்பவங்கள் நடந்து கொண்டுதானே இருக்கின்றன. நமக்குத் தெரிந்தது இவ்வளவென்றால் தெரியாதது எவ்வளவோ!

படிப்பகம்

www.padippakam.com



நாம் இனியும் நன்கு சிந்தித்து நம்மை மாற்றிக் கொண்டு, முன்னேற்றப் பாதையில் நடைபோட முனையாவிட்டால், மேலும் மேலும் மிஸ்மேயோக்கள் வந்து நமது அவலங்களை உலகிற்கு அம்பலப்படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள்.

இந்தப் புத்தகம் எழுதப்பட்டு கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டு ஆகியும், புத்தகத்தில் காணப்படும் சமுதாய அவலங்களிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை என்பது எவ்வளவு வேதனையான விஷயம்

புத்தகத்தைப் படித்த பிறகு இந்த வேதனையும், வெட்கமும் படிப்பவரது நெஞ்சில் பரவி, இந்த அவலங்களை அழிக்க ஒரு அடியாவது முன் எடுத்து வைக்கவேண்டும் என்பதே எமது அவா. அந்த அவாவின் விளைவாகவே இந்தப் புத்தகத்தை வெளியிட முன் வந்தோம்.

புத்தகத்தை அருமையாக மொழிபெயர்த்துள்ள நண்பர். ப.சீனிவாசன் எமது பெருமதிப்பிற்கு உரியவர். புத்தகத்தை அவர் மொழி பெயர்த்திருக்கிறார் என்பதனை விட மூல நூலின் கருத்துச் சிதையாமல் தமிழில் தந்துள்ளார் என்பது பொருந்தும். அவருக்கு எமது உளமார்ந்த நன்றி.

புத்தகம் அழகாகவும் சிறப்பாகவும் உருவாக ஒத்துழைத்த அனைவருக்கும் எம் நன்றி.

அன்புடன்

மருதம் பதிப்பகம் — பா. சந்திரசேகர்

ஒரத்தநாடு — பதிப்பாளர்



படிப்பகம்

www.padippakam.com

## மொழிபெயர்ப்பாளர் பேசுகிறார்....

புத்தாயிரமாண்டின் தொடக்கத்திற்கு இன்னும் சில நாட்களே இருக்கும் இவ்வேளையில் மிஸ் காதரின் மேயோவின் கடவுள்களின் அடிமைகள் என்ற இப்புத்தகம் தமிழில் வெளியிடப் படுகிறது. இத்தமிழ் வெளியீட்டிற்கு ஒரு நோக்கமும் உண்டு.

பொதுவாக ஒரு தொழிலோ, வணிகமோ தொடங்கப் பட்டு செயல்பட்டு வரும்போது குறிப்பிட்ட காலத்திற்குப்பின் இலாப-நட்டக் கணக்குப்பார்ப்பது நடைமுறையில் உள்ள வழக்கமாகும். இன்று-ஒரு நூற்றாண்டைக் கடக்க இருக்கும் இந்த நேரத்திலும் ஒரு இலாப-நட்டக் கணக்கைப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

ஐரோப்பியர்களின் வருகையினாலும்-அவர்களால் இங்கு இறக்குமதி செய்யப்பட்ட அறிவியல் கண்டு பிடிப்புகளின் விளைவாகவும், காலமறிந்து கூவிய சேவல்களான நம்நாட்டு அயோத்திதாசர் தொடங்கி பெரியார் ஈ.வெ.ரா. வரையிலான அறிஞர் பெருமக்களின் இடைவிடாத பிரச்சாரத்தின் பலனாக, போராட்டங்களின் விளைவாக, கடந்த பல நூற்றாண்டுகளாக நாம் நம்பிவந்த மூடநம்பிக்கை விலங்குகள் பல நம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றிருக்கின்றன. எனினும் நாம் அம்மூடநம்பிக்கை விலங்குகளை முற்றிலும் முறித்துச் சுதந்திர சிந்தனை வானில் சிறகடிக்கத் தொடங்கிவிட்டோம் என்று மார்தட்டிக் கொள்ள இயலாமல், இந்த நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். இந்த இலாப-நட்டக் கணக்கைப் (சிந்தித்துப்) பார்க்கவேண்டிய நாம் நம்முன் நாள்தோறும் தோன்றிவரும் புனித ஆசிரமங்களும், (போலிச்) சாமியார்களும்,

படிப்பகம்

www.padippakam.com



புதிய புதிய கடவுள்களும், அக்கடவுள்களின் குரலாக அருள்வாக்குக் கூறிவரும் அடியார்களும், தங்கள் தங்கள் கடவுளைக் காப்பாற்றுவதற்காக(?) புனிதப்போர்(?) புரிந்து வரும் மதப்பற்றாளர்(?)களும் இந்த நாட்டு மக்களை மடமை இருளில் மூழ்கடித்து வருவது கண்டு திகைத்தும் நிற்கிறோம்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதிகளில் (1925-26) நமது நாட்டில் சுற்றுப்பயணம் செய்த ஒரு அமெரிக்கப் பெண்மணி தாம் இந்தியாவில் கண்டதையும் கேட்டதையும் விறுவிறுப்பான முறையில் வெளிப்படுத்தி மூன்று புத்தகங்களை எழுதினார். அவை ‘அன்னை இந்தியா’ ‘கடவுள்களின் அடிமைகள்’ மற்றும் ‘தொகுப்பு இரண்டு’ என்ற மகுடமிட்டு வெளியிடப்பட்டன. இப்புத்தகங்கள் முறையே 1927, 1929, 1931 ஆண்டுகளில் வெளிவந்தன.

வெளிவந்த உடனேயே இப்புத்தகங்கள் கடும் கண்டனத்திற்கு உள்ளாகின. ‘குப்பைக்காரி’ என்றும் ‘பூதகி’ என்றும் ‘மாயக்காரி’ என்றும் ‘பன்னாடை’ என்றும் ‘நாடோடிச்சி’ என்றும் அந்த அமெரிக்கப் பெண்மணி-மிஸ். காதரின் மேயோ-வருணிக்கப்பட்டார். இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடி வந்த அறிஞர் பலரும், அவரைத் தூற்றினர். கண்டனக் கணைகளும் நாலாத் திக்கிலிருந்தும், அவரை நோக்கிக் குவிந்தன. குறிப்பாக ‘அன்னை இந்தியா’ நூலுக்குக் கிடைத்த மரியாதை (?) சொல்லில் அடங்காது, என்றே கூறலாம்.

அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள், ‘இந்த நூல், ஒரு சாக்கடை இன்ஸ்பெக்டரின் ஆராய்ச்சி,’ என்று கண்டனம் செய்தார்.

படிப்பகம்

www.padippakam.com



"ஜெனரல் டயர் துப்பாக்கிக் குண்டுகளால் இந்தியர் மனதைப் புண்படுத்தி உலகப் பிரசித்திப் பெற்றார். மிஸ்மேயோ, அன்னை இந்தியா என்ற புத்தகத்தால் இந்தியர் மனதைப் புண்படுத்தி உலகப் பிரசித்தி பெறுகிறார்." என்று தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பி. வரதராஜுலு அவர்கள் வழி மொழிந்தார்.

மிஸ். காதரின் மேயோவின் இப்புத்தகங்களை எதிர்த்து அக்காலத்திலேயே பல கண்டன அறிக்கைகளும், சில மறுப்புப் புத்தகங்களும் வெளியிடப்பட்டன.

'அன்னை இந்தியா' நூலைக் கண்டித்து, சர். எஸ்.ஸி சட்டர்ஜி, சர்.டேக்பகதூர் சாப்ரு, சர்.சிமான்லால் சதாவத், ஸ்ரீ சச்சிதானந்த சின்ஹா. சர்.எம்.எம் பௌனகிரி, பாரிஸ்டர்.டியூப், ஸ்ரீகாமத், சர்.முகமது ராபிக், ஸ்ரீ.எஸ்.என். மல்லிக், டாக்டர் பராஞ்சியை ஆகிய அறிஞர்கள்,

"...... 1925-26-ல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த ஒரு அமெரிக்கப் பெண்மணி, அன்னை இந்தியா என்னும் பெயரால் ஒருநூல் வெளியிட்டிருப்பதை நாங்கள் பார்த்தோம். இந்தியர்களையும், இந்திய ஆசாரங்களையும், இந்திய ஒழுக்கங்களையும், கேவலமாகத் தூற்றியிருக்கும் இந்நூலைப் போல் வேறு ஒரு நூலை நாங்கள் இதுகாறும் பார்த்ததேயில்லை...... இந்தியாவில் உள்ள 32 கோடி மக்களும் உயிர்ப்பற்ற எலும்புக் கூடுகள் என்றும், ஆசாரமற்றவர்கள் என்றும், பொய்யர்கள் என்றும், மேயோ கூறுகிறார்....... இந்தியர்கள் விடுதலை வேண்டிக் கிளர்ச்சி செய்து வரும் இந்த சமயத்தில் மேயோ, இவ்வாறு ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருப்பது மிகவும் குறும்புத்தனமாகும்.... என்ற உள்ளடக்கத்துடன் ஒரு கண்டன அறிக்கையைத் தயாரித்தனர். மேயோவின் 'அன்னை இந்தியாவை' பாராட்டி, ஒரு நீண்ட

படிப்பகம்

www.padippakam.com



விமரிசனத்தை வெளியிட்ட "லண்டன் டைம்ஸ்" பத்திரிக்கைக்கு இவ்வறிக்கையை அவர்கள் அனுப்பி வைத்தனர். ஆனால் 'லண்டன் டைம்ஸ்' அவ்வறிக்கையை வெளியிட மறுத்து தனது பத்திரிக்கை தர்மத்தை (?) நிலைநாட்டியது. இந்நிகழ்ச்சி ஒன்றே ஆங்கிலேயே அரசும், அதன் ஆதரவாளர்களும், இப்புத்தகம் வெளியிடப்பட்டதன் நோக்கத்தை, இவ்வாறான செயல்பாடுகள் விளைவாக அம்பலப்படுத்திக் கொண்டன.

மேயோவின் அன்னை இந்தியாவைக் கண்டித்து அக்காலத்திலேயே பல புத்தகங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றுள் சில.

1. மிஸ். மேயோவின் அன்னை இந்தியா ஒரு பதில்
   - கே. நடராஜன் (சென்னை - 1928)

2. அன்னை இந்தியாவை ஆதரித்து ஓர் ஆங்கிலேயன் பேசுகிறான் - எர்னஸ்ட் வுட் (சென்னை - 1929)

3. துயருறும் இந்தியா - பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் (கல்கத்தா - 1928)

4. சகோதரி இந்தியா - உலகப் பிரஜை (பம்பாய் - 1928)

5. இந்தியப் பிதா - ஸி.எஸ். ரங்கய்யர் (லண்டன் - 1928)

6. இந்தியா அதன் இயல்பு - அன்னை இந்தியாவுக்கு ஒரு பதில் - ஜே.ஏ. சாப்மன் (ஆக்ஸ்ஃபோர்டு - 1928)

படிப்பகம்

www.padippakam.com



7. அன்னை இந்தியாவின் புதல்வனின் பதில்கள் - தான் கோபால் முகர்ஜி (நியூயார்க் - 1928)

ஸி.எஸ். ரங்கய்யர் எழுதிய 'இந்தியப் பிதா' தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு 1928-ல் கே.எஸ். முத்தையா கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.

ஏறத்தாழ இதே காலகட்டத்தில் பாரதி புகழ் பரப்பிய முன்னோடி, அக்ரகாரத்தின் அதிசயம் என்று அறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட வ.ரா. அவர்கள் அன்னை இந்தியாவுக்கு எதிராக "மாயா மேயோ" என்ற (400 பக்கங்களுக்கு மேல் உள்ள) தமிழ் நூலை எழுதி வெளியிட்டார். மிஸ். காதரின் மேயோவுக்குச் சரியான பதிலடியாக மாயா மேயோ விளங்கியது. கண்டனக் குரல் அனைத்தும் இந்திய தேசபக்தர்களின் - சுதந்திரப் போராட்ட வீரர்களின் இந்திய நாட்டின் நண்பர்களின் குரலாக ஏகோபித்து ஒலித்தன.

ஆனால் அதே காலகட்டத்தில் தமிழகத்தின் சமூக சீர்திருத்தவாதிகள், மேயோவின் உள்நோக்கம் பற்றி அய்யமுற்றாலும், அவரின் புத்தகங்களில் சுட்டிக் காட்டப் பட்டுள்ள குற்றச்சாட்டுகளைத் திருத்திக் கொள்ள வேண்டியது அவசியமா? இல்லையா? என்ற கேள்விக் கணைகளை எழுப்பினார். அக்கால கட்டத்தில் நடைமுறையிலிருந்த தீண்டாமை, குழந்தை மணம், கைம்மைக் (விதவைக்) கொடுமை இன்னும் பிற மூடத்தனங்களை எதிர்த்துப் போராடிய தமிழகச் சீர்திருத்த வாதிகளுக்கு மேயோவின் புத்தகங்கள் நல்ல ஆயுதங்களாகவே பயன்பட்டன.

தமிழகத்தின் தன்னிகரற்றத் தலைவரான பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் வெளியிட்ட 'மேயோ கூற்று மெய்யா

படிப்பகம்

www.padippakam.com



பொய்யா?' என்ற புத்தகம் (1930) மேயோவின் அன்னை இந்தியாவிற்கு ஒரு ஆதரவுக் குரலாக விளங்கினாலும், நம்மை நாமே சுயவிமர்சனம் செய்து கொள்ள ஒருதூண்டு கோலாகவும் இருந்தது என்று கூறினால் அது மிகையல்ல. இந்நூலை எழுதிய கோவை. அ. அய்யாமுத்து அவர்கள் சிறந்த காங்கிரஸ் தொண்டர். தீண்டாமையை எதிர்த்து நடைபெற்ற புகழ்மிக்க வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். இக்காலகட்டத்தில் கதர் இயக்கத்தின் போர்வாளாய் இயங்கி வந்தார். இந்நூல் பெரியாரின் குடியரசுப் பதிப்பகத்தின் 11வது வெளியீடாகும். திரு. அய்யாமுத்து அவர்களின் நூலிற்குப் பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் எழுதிய முகவுரையின் சில பகுதிகளையாவது நாம் அறிய வேண்டுவது அவசியம் என்றே கருதுகிறோம்.

...... எனவே இத்தகைய ஒரு உறுதியும், வீரமும், சுயமரியாதை உணர்ச்சியும் கொண்ட ஒரு இளைஞர் (கோவை அ. அய்யாமுத்து) இந்தியர்களில் சிறப்பாய் இந்துக்கள் என்பவர்களில் அரசியல் தலைவர்கள், தொண்டர்கள் என்பவர்களாலும், தூற்றி இழித்துரைக்கப்பட்டு வரும் ஒரு புத்தகமாகிய மிஸ். மேயோவின் "அன்னை இந்தியா" என்னும் புத்தகத்தைப் பற்றி ஆராய்ந்து பார்த்து அவற்றில் உள்ள விஷயங்கள் பெரிதும் உண்மை என்று எடுத்துக்காட்டும் மாதிரியில் "மேயோ கூற்று மெய்யா பொய்யா?" என்று ஒரு புத்தகம் எழுதுவானேன் என்னும் விஷயம் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது மிக்க அவசியமானதாகும்.

........ அதாவது நாங்கள் மேயோவின் "அன்னை இந்தியா" என்னும் புத்தகத்தைப் பற்றி, அது எழுதப்பட்ட நோக்கத்தின் விஷயத்தில் சிறிது ஐயுற்றாலும் கூட, அதில் கண்ட பெரும்பான்மையான விஷயங்களை உண்மையென்று ஒப்புக் கொள்வதில் சிறிதும் சந்தேகமோ பயமோ உடையவர்கள் அல்ல

படிப்பகம்

www.padippakam.com



என்பதைப் பொது ஜனங்களுக்கு முதலில் தெரிவித்துக் கொண்டு மற்றபடி இப்புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கத்தை விவரிக்கிறேன். சாதாரணமாக ஒரு இந்திய மனிதன் மிஸ்.மேயோ புத்தகத்தில் இந்தியர்களைப் பற்றிக் கூறியிருக்கும் குறைகளை அடியோடு மறைத்தும், மறுத்துப் பேசியும், அவ்வம்மையை சில இழிமொழிகளால் வைதும் விட்டுச் சும்மா இருந்து விடுவதினால் தனது நாட்டிற்கும், சமூகத்திற்கும் செய்ய வேண்டிய கடமையைச் செய்து வீரனாகி விடுவானா? அல்லது அப்புத்தகத்தில் உள்ள குறைகளில் உண்மையானவற்றைத் தைரியமாய் ஒப்புக்கொண்டு அவைகளை இந்திய மக்களுக்கு நன்றாய் விளக்கிக் காட்டி அக்குறைகளை ஒழிக்க முற்படுவன் உண்மையாகத் தனது நாட்டிற்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டிய தொண்டை செய்த வீரனாவானா? என்பதே இப்பொழுது யோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயமாகும்.......

('மேயோ கூற்று மெய்யா பொய்யா?' நூலுக்குப் பெரியார் ஈ.வெ.ரா. வின் முகவுரையிலிருந்து சில பகுதிகள்)

இவ்வாறாக மிஸ். மேயோவின் புத்தகங்களைத் தத்தமது நோக்கத்தில் ஆதரித்தும் கண்டித்தும் பலகருத்துக்கள் அக்காலத்திலேயே வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், அப்புத்தகங்களை மிஸ் மேயோ எழுதியதன் உள்நோக்கத்தை மிகச் சரியான ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவதற்காக, நாம் சுமார் நாற்பது ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அக்காலத்தில் மிஸ். மேயோவை ஆதரித்தவர்களும், எதிர்த்தவர்களும், ஏதோவொரு உள்நோக்கத்துடனேயே இம்மூன்று புத்தகங்களும் எழுதப்பட்டன என்று யூகிக்கத் தவறவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



மிஸ். மேயோவின் உள்நோக்கம் என்ன வென்பதை 1969 - 70 காலகட்டத்தில், டாக்டர். மனோரஞ்சன் ஜா அவர்கள் ஆராய்ந்து உருவாக்கிய காதரின் மேயோவும் இந்தியாவும் என்ற நூல் தெளிவாக அம்பலப் படுத்தியது. டாக்டர். ஜா. அவர்கள், அமெரிக்க யேல் பல்கலைக்கழகத்தின் நூலகத்தின் வரலாற்றுக் கையெழுத்துப் படிகள் பிரிவிலும், இலண்டனிலுள்ள இந்திய அலுவலகம் பொது ஆவண காப்பகத்திலும் செய்த ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இப்புத்தகம் மிஸ்.மேயோவின் அக்கறை சமூக சீர்திருத்தத்தி ன்பாற்பட்டதன்று என்பதையும், இந்திய மக்களை இழிவு படுத்துவதற்காகவே என்பதையும், இந்திய நாகரிகம், மக்கள் வாழ்க்கை நெறிமுறைகளை இழிவு படுத்தவும், இந்தியர்களுக்குச் சுதந்திரம் தருவதில் நியாயம் ஏதுமில்லை என்று நிலைநாட்டவும், அன்றைய இந்திய ஆட்சியாளர்களாலும், பிரிட்டிஷ் இராஜதந்திரிகளாலும் கூலிக்கு அமர்த்தப்பட்ட எழுத்தாளரே, மிஸ் மேயோ என்பதையும் வெளிச்சமிட்டுக் காட்டியது. அக்காலத்திய மேயோ எதிர்ப்பாளர்களின் யூகங்கள் அனைத்தும் கலப்படமில்லாத உண்மைகள்தான் என்பதை டாக்டர். ஜா. அவர்கள் வலுவான சான்றுகளின் அடிப்படையில் 1970ல் நிரூபித்துக் காட்டினார்.

மிஸ் மேயோவின் நூல்களுக்கு இப்படிப்பட்டதொரு வரலாற்றுப் பின்னணி இருந்தபோதிலும், நம்மைப் பற்றி அப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுளை, இன்று சுதந்திர இந்தியாவில் வாழும் நாம் எந்த அளவிற்கு மாற்றி இருக்கிறோம் அல்லது மாறியிருக்கிறோம் என்று சுய பரிசோதனை செய்து கொள்வதற்காகவே இந்தக் கடவுள்களின் அடிமைகள் ஐ மொழி பெயர்த்து வெளியிடுகிறோம். இந்த நூலின் முந்தைய தமிழ்மொழி பெயர்ப்பு 1929ஆம் ஆண்டு

படிப்பகம்

www.padippakam.com



வெளியிடப்பட்டதாக அறிய முடிகிறது. எனினும் கால இடைவெளியையும், மொழி வளர்ச்சிக் கூறுகளையும் கருத்தில் கொண்டதாலேயே இன்று மற்றுமொரு தமிழ்மொழி பெயர்ப்புத் தேவையாயிற்று.

மொழி பெயர்ப்பதற்காக மூல நூலைக் கொடுத்துதவியது மட்டுமல்லாது, என்னை அவ்வப்போது ஊக்கப்படுத்தியும், அரிய ஆலோசனைகள் பல கூறியும், இப்பணியைச் சிறப்புற முடிக்க உதவியவர், மருதம் பதிப்பக உரிமையாளரும் எனது கெழுதகை நண்பருமான திரு. பா. சந்திரசேகர் அவர்களாவார். அவரின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாவிட்டால் இப்பணி செம்மையாக நிறைவேறியிருக்காது. இம்மொழி பெயர்ப்பே அவர் செய்தது தான் என்று கூறினால் கூட அது மிகையாகாது. அவர் செய்த உதவிகளுக்கும், இந்நூலை செம்மையாய் வெளியிட்டமைக்கும் எனது மனங்கனிந்த நன்றிகள் பல.

நம்மிடையே இன்றும் காணப்படும், சாதிவெறியை, மதவெறியை பெண்ணடிமைத் தனத்தை, மூடநம்பிக்கைகளை அழித்தொழிக்கும் சிந்தனையைத் தோற்றுவிக்குமானால், இக்கடவுள்களின் அடிமைகள்-ஐ வெளியிட்டதற்கான நோக்கம் நிறைவேறியதாகவே நாங்கள் பெருமிதம் கொள்வோம். இம்முன்னுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள எங்களின் நோக்கம் இதுவேயாகும்.

இதுவரையில் கழிந்த நூற்றாண்டுகள் எவ்வாறாயினும் போகட்டும். இனிவரும் இருபத்தியோராம் நூற்றாண்டின் புத்தாயிரம் ஆண்டில் மனித நேயத்துடன், எல்லோரும் இந்தியர்கள் என்ற உணர்வுடன், மூடநம்பிக்கைகளற்ற புதிய சமுதாயமாக மலர்வோம் வாருங்கள்!

05.12.2000 அன்புடன்

திருச்சிராப்பள்ளி.19 **ப. சீனிவாசன்**

படிப்பகம்

www.padippakam.com

# தொடக்கம்

அறையின் ஜன்னலுக்கு வெளியே மெத்தெனச் செழித்து வளர்ந்த பசும்புல்தரை. புல்தரைக்கு அப்பால் தங்கம்போல் ஒளிரும் மஞ்சள் வண்ணப்பூக்கள். அதற்குமப்பால் வயிரம் பாய்ந்த மரக்கூட்டம். அதனிடையே ஓரங்களில் புதர்கள் அடர்ந்த சாலை. மேலே வெள்ளி வண்ணம் பூசிய பாய்மரப் படகுகளைப் போல உலாவும் மேகங்கள்.

அறைக்குள் பலதலைமுறைகளாக வசித்து பெருமை சேர்த்தவர்களால் உறைந்த ஆனந்தமான உணர்ச்சி. அங்கு சூரிய வெளிச்சமும் நல்ல காற்றும் இயல்பாகப் பரவியிருந்தன. அறைக்குள் எல்லையற்ற அமைதி குடிகொண்டிருந்தது.

அறையின் சுவர்கள் மரவேலைப்பாடுகள் நிறைந்ததாகவும், சுத்தமாக வெள்ளையடிக்கப்பட்டும் இருந்தது. ஆங்காங்கே பூச்செடிகள் அடங்கிய தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு நாற்காலியில் தலை கொக்குபோல நரைத்த, கம்பீரமான, உற்சாகம் நிரம்பிய, ஊதா நிற அங்கி அணிந்த வீட்டின் உரிமையாளர் அமர்ந்திருந்தார். அவருக்கு இருபுறமும் இரண்டு ஜெர்மானிய வேட்டை நாய்களும், அவரது காலடியில் அயர்லாந்து தேசத்து டெரியர் நாய்க்குட்டிகள் சிலவும் உட்கார்ந்திருந்தன. அவர் அந்த ஜெர்மானிய நாய்களைத் தன் கைகளால் தடவிக் கொடுத்து 'இவைதான் எனது தீண்டப்படாதவர்கள்' என்று புன்னகையுடன் கூறினார். அவர்தான் 23 ஆண்டுகாலம் சென்னைப் பட்டினத்தில் மதகுருவாக இருந்து ஓய்வு பெற்றவரும், தற்போதும் இந்தியர்களுக்கும், தீண்டப்படாதவர்களுக்குமாக ஊக்கத்துடன் உழைத்து வரும் ஹென்றி வைட் ஹெட் என்பவராகும்.

படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் இருவரும் அப்போது நான் எழுதிய 'அன்னை இந்தியா' என்ற நூலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அவர் முன்னொரு சமயம் லண்டனில் ஒரு பொதுக் கூட்டத்தில் அந்நூலைப் பற்றிப் பேசியதையே மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்.

நான் அவரிடம், அவர் கூறுவதை அப்படியே எழுதித் தருமாறும், அதை எனது நூலின் பயன்படுத்திக் கொள்வதாகவும் கூறியதை ஏற்றுக்கொண்டு அவர் எழுதிய கடிதத்தை அப்படியே கீழே தருகிறேன்.

சல்ஹாம் நிலையம்,
பாங்கு போர்ன்
ஜூன் 2, 1928

அருமை மிஸ் மேயோவுக்கு,

உன்னுடைய 'அன்னை இந்தியா' என்ற நூல் என் மனதில் எத்தகைய உணர்ச்சியைத் தோற்றுவித்தது என்று கூறுகின்றேன். உனது நூல் புதிதாக எது ஒன்றையும் எனக்குத் தெரிவிக்கவில்லை. சுமார் நாற்பதாண்டுக் காலம் இந்தியாவில் எனக் கேற்பட்ட அனுபவங்கள் மூலமே நீ எழுதியுள்ள சமூகக் கேடுகளையும், பழக்க வழக்கங்களின் கேடுகளையும் நான் அறிவேன். இவைகளைப் பற்றி அறுபது எழுபதாண்டுகளாக இந்தியாவில் பேசப்பட்டும் வருகிறது. சீர்திருத்த ஆர்வமுடைய இந்திய, ஐரோப்பிய சமூகத்தினர் இவற்றிற்குப் பரிகாரம் தேடமுயன்று வருகின்றனர். என்றாலும் முற்றிலும் பலன் கிடைக்கவில்லை.

ஆனால் 'அன்னை இந்தியா' படித்த பிறகு எனக்கு, இந்தியர்களை அவர்களது கொடுமையான இரக்கமற்ற

படிப்பகம்

www.padippakam.com



கேடுகளை அவர்கள் நன்கு உணரும்படி நான் இன்னும் அதிகமாக முயற்சி செய்து விழிப்பூட்டியிருக்க வேண்டுமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

நீ கூறும் கெடுதல்கள் அனைத்தும் இந்து மதத்தில் வேரூன்றிவிட்டவையாகும். கிருஸ்தவ மதப் பிரச்சாரமே எனது தொழிலானதால் நான் பழங்களைப் பறித்து வீசிவிடுவதைவிட மரத்தின் வேரையே வெட்டி வீழ்த்தி விடுவதே மேல் என்று கருதினேன். எனது கருத்து தவறாகவும் இருக்கலாம். கடவுளை அடைய, அனைவரும் செய்த தவறை எண்ணி வருந்தவேண்டு மென்று புனிதர் ஜான் பாப்டிஸ்ட் அறைகூவல் விடுத்தாரன்றோ!

உனது நூலில் ஒரு குற்றம் இருக்கிறது. நீ சுட்டிக்காட்டும் அனைத்துக் கேடுகளும் இந்துமதம் சார்ந்தது என்று நீ கூறினாலும் அதனை நீ ஆழமாக வற்புறுத்தவில்லை.

தீமைகள் அனைத்தும் மதத்தால் அனுமதிக்கப்பட்டவை என்று இந்தியர்கள் நம்புவதால்தான் சமூக சீர்திருத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைகின்றன.

விபச்சாரத்தை எடுத்துக் கொள்வோம். மேல்நாட்டவர்கள் இந்தியர்களைவிட தூய்மையானவர்கள் என்று நான் கருதவில்லை. ஆனால் நமது மதம் நேர்மைக்கும் தூய்மைக்கும் உறைவிடமாகத் திகழ்கிறது. இங்கிலாந்தில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் சர்ச்சிலோ, செயிண்ட் பால் சர்ச்சிலோ, பாதிரிகளுக்கும், வழிபட வருபவர்களின் உபயோகத்திற்குமாக விபச்சாரிகளை நியமித்திருந்தால் நமது நிலைமை என்னவாகியிருக்கும் என்று யோசித்துப் பார். சீர்திருத்தம் செய்ய வருபவர்களால் என்ன பயன் கிடைத்துவிடும்?

படிப்பகம்

www.padippakam.com



பல நூறு வருடங்களாக கடவுளுக்கு மணமுடிக்கப் பட்டு, சிறுமிகளும், மாதர்களும் தேவதாசிகள் என்ற பெயருடன் தென்னிந்தியக் கோயில்களில் வாழ்ந்து வருகின்றனர். இது குறித்து உனது நூலில் ஒரு அத்தியாயத்தில் எழுதியிருக்கிறாய். நீ கூறியிருப்பது வருந்தத்தக்க உண்மையே. மத அனுமதியின் அடிப்படையில் விபச்சாரம் ஒரு தொழிலாக நடப்பது தவிர இது வேறு என்ன?

உனது நூலைப் படித்தவர்களில் பலரும் என்னிடம் "இதற்கு என்ன செய்யலாம்? இதற்கு மாற்றே இல்லையா" என்று கேட்கின்றனர். உனது நூல் ஒன்றுமே செய்யமுடியாது என்பது போன்ற ஒரு உணர்ச்சியையே தோற்றுவிக்கிறது. எனக்கு அதில் உடன்பாடில்லை. எழுபது ஆண்டுகளுக்கு மேலாக கிருஸ்துவ மதம் லட்சக்கணக்கான தீண்டப்படாத மக்களை கடைநிலையிலிருந்தும், அடிமைத் தனத்திலிருந்தும் விடுவித்து அவர்களுக்கு மங்கல நல்வாழ்வை அளித்து வருகிறது. இது ஒன்றே நீ கூறும் தீமை இருளில் ஆழ்ந்து கிடப்போர்களுக்கு காட்டப்படும் நம்பிக்கை ஒளியாகும். தீண்டப்படாதவர்களுக்கு நன்மை இழைத்துவந்த, இழைத்து வரும் கிருஸ்துவபெருமான் எல்லோரும் நன்மை தருவார். இந்தியா கடைத்தேற இது ஒன்றே மார்க்கம்;

உண்மையுள்
ஹென்றி வைட்ஹெட்,
பிஷப்.

நான் பிஷப் கூறுவதை ஒப்புக்கொள்கிறேன். மேலும் கருமமே கண்ணாகச் செயல்படும், பிரதிபலன் எதிர்பாராத தான் கூறுபனவற்றில் அசையாத நம்பிக்கை கொண்ட கிருஸ்துவர்களின் பிரச்சாரத்தால் இந்தியாவில் தீண்டப்படாத மக்கள் மட்டுமல்ல. அனைத்துத் தரப்பினருமே

www.padippakam.com



கிருஸ்துவமதத்தைத் தழுவுவார்கள் என்று கூறுகிறேன். இவர் கூறுவதை ஏற்றுக் கொண்டு இப்போது, 'அன்னை இந்தியாவில்' கூறிய ஒரு விஷயத்தைப் பல மடங்கு வலியுறுத்திக் கூறுவேன்.

பிரிட்டிஷாரின் ஆட்சியில் உள்ள இந்தியர்களில் பெரும்பான்மையான மக்கள் இந்துக்கள். 'இந்துக்களில் பெரும்பான்மையோர் வைதீக நம்பிக்கையுடையவர்கள்' வைதீக இந்துமதத்தின் தொடர்புகளும், கொள்கைகளுமே இந்து சமூகத்தின் மாபெரும் தீமைகளாகும்.

இந்தியாவில் காணப்படும் கொடுமைகளும், தீமைகளும் தவறுகளும் நமது மேனாடுகளிலும் காணலாம். ஆனால் அவைகளை நமது கிருஸ்துவ மதம் அங்கீகரிக்கவில்லை. நமது அரசாங்கமோ, நமது தலைவர்களோ, நாமோ இவைகளைப் போற்றியதோ, ஆதரித்ததோ கிடையாது.

புகழ்பெற்ற சர் சுரேந்திர நாத் பானர்ஜி என்பவர் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கூறியதாவது:-

"இந்தியாவின் சமூக வாழ்வு மிகவும் அசாத்தியமான சிக்கலான நிலைமையில் இருக்கிறது என்பதனை மறைத்துப் பயனில்லை.

இந்தியாவின் சமூக வாழ்வு ஒவ்வொன்றும் மதரீதியாகவே பின்னிக் கிடக்கின்றன. ஆதலால் சமூக சீர்திருத்தம் செய்ய வருபவர்களால் தெய்வீகமாகக் கருதப்படும் சமூகக்கெடுதல்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெற இயலவில்லை."

படிப்பகம்

www.padippakam.com



இதுபற்றி தெளிவு பெற விரும்புபவர்கள், இந்தியா சட்ட சபையில் பாலிய விவாகம் பற்றி நடத்த விவாதங்களை ஆராய்ந்து பார்த்தல் நலம். பாலிய விவாகத்தினால் தங்கள் சமூகம் நாளுக்கு நாள் அழிபடுகின்றது என்றும் பலம் குன்றுகிறது என்றும் சிலர் கூறினார்கள். வேறு சிலரோ பாலிய விவாகம் போன்ற வைதீகக் கொள்கைகளைத் தீவிரமாக மாற்றுவதால் இந்துமதம் முற்றிலுமாக பாதிக்கப்படும் என்றும் கூறினார்கள்.

பதினெட்டு மாதங்களாக இந்தியாவில் உள்ள கற்றறிந்தவர்கள் தங்கள் சமூகத்தில் உள்ள தீமைகளைப் பற்றி யோசிக்கிறார்கள். இது அமெரிக்கர்களும், பிற மேனாட்டவர்களும் இந்து சமூகத்தைப் பற்றி ஊன்றிக் கவனித்து உரைத்து வருவதின் காரணமாகவே என்பதனை மறுக்கமுடியாது.

இந்திய தேசியத் தலைவர்கள், தங்கள் சமூகத்தினரின் பழக்க வழக்கங்களை மேனாட்டவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்பதனை உணர்ந்து தீவிரமான வழிகளில் இறங்கிச் செயல்படுகிறார்கள் என்பது உண்மைதான். இத்தகைய காரணங்களால்தான் மேனாட்டார்கள் இந்தியாவின் பண்டைய நாகரிகத்தைப் பாராட்ட மறுக்கிறார்கள் என்பதனையும் அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள். இந்தியாவில் சமூக சீர்திருத்தம் ஒன்றே கொள்கை என சுயநலம் பாராமல் தீவிரமாக உழைக்கும் சமூக சீர்திருத்தவாதிகளும் உள்ளனர். மேனாட்டார்கள் இவர்கள் சமூகத்தைப் பற்றி எழுதுவதும் பேசுவதும், தமக்கு உதவியும், ஊக்கமும் அளிப்பன என்பதனையும் இவர்கள் உணர்ந்தே உள்ளனர்.

ஆதலால் இந்துக்களின் சமூக ஊழல்களைப் பற்றி எடுத்துக் கூறும்போது அதற்குத் தடையோ, மறுப்போ

படிப்பகம்

www.padippakam.com



கூறுபவர்கள் இந்துக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கும் பகைவர்கள் என்றே கூறல் வேண்டும்.

பாலிய விவாகங்களும், பெண்களை மிருகத்திற்குச் சமமாக நடத்துவதும், விதவைகளை விதவைகளாகவே கடைசி வரை வாழச் செய்யும், கொடுமையும், தேவதாசி முறையும், தீண்டாமையும், மிருகவதைகளும் இந்து மத சட்டங்களாக இருக்கும் வரை தங்களது செய்கைக்கு இவர்கள் எவ்வளவுதான் உயர்வான நோக்கங்கள் கூறி புனிதம் கற்பித்தாலும் கூட, இச்சமூகம் நாளுக்கு நாள் அழிந்து போகும் கதியைத்தான் அடையும் என்பது உறுதி.

இந்நூலில் காணப்படும் பன்னிரெண்டு கட்டுரைகளும் கதைகளைப் போல எழுதப்பட்டிருந்தாலும் அவைகள் கதைகள் அல்ல. பலரது வாழ்க்கையிலிருந்து எடுத்துக் கூறப்பட்ட உண்மை நிகழ்ச்சிகளே அவை. இதில் காணப்படும் ஒவ்வொரு விஷயமும் தற்போது வாழ்ந்து வரும்பலர் அளித்த நேர்முகமான, கலப்பில்லாத உண்மை சம்பவங்களாகும். இவை கடந்து போன காலத்து நிகழ்ச்சிகளல்ல, தற்போதைய நிகழ்வுகளே! ஒவ்வொரு சம்பவமும் இந்தியாவில் நடக்கும் ஆயிரமாயிரம் சம்பவங்களுக்கு உதாரணமாய்த் திகழ்பவையாகும். இக்கட்டுரைகள் 'அன்னை இந்தியா' நூலில் உள்ளவை போன்றே. இந்து மதத்தின் அழிவிற்கு ஆதாரமாகக் காணப்படும் சமூக, மத, தீமைகளை வலியுறுத்திக் கூறும் பொருட்டே எழுதப்பட்டவை. இவை சற்றும் அரசியல் தொடர்பற்றவை.

பன்னிரெண்டு கட்டுரைகளும் பெண்களின் நிலைமையை விவரிப்பனவே. ஆனால் இவை எல்லா இந்துக் குடும்பங்களுக்கும் பொதுவானவையல்ல. இத்தகைய தீமைகள்

படிப்பகம்

www.padippakam.com



சற்றும் இல்லாத அறிவாளிகள் அடங்கிய முன்னேற்றமுடைய குடும்பங்கள் பல இந்தியாவில் உள்ளன. ஆனாலும், இந்து சமூகத்தில் உள்ள உயர்ந்த, தாழ்ந்த, செல்வமிக்க, எளிய, குடும்பங்களின் நிலையை இவை எடுத்துக் காட்டுகின்றன. சில விஷயங்கள் சில பகுதிகளில் மட்டுமே காணப்பட்டாலும், வேறு சில, குறிப்பிட்ட வகுப்பினரிடையே மட்டும் காணப்பட்டாலும் கூட, இவைகளின் அடிப்படையாகக் காணப்படும் அறியாமை, இரக்கமின்மை, ஆகியவற்றை வலியுறுத்துவனவேயாகும். அண்மையில் ஒரு இந்து நூலாசிரியர் கூறிய வண்ணம், நான் இதில் இந்து சமூகத்தின் இருண்ட பகுதியை மட்டுமே காண்பித்துள்ளேன். எனது கருத்து மனிதர்களை முகஸ்துதி செய்வதல்ல, சமூகத் தீமைகளை அவர்கள் உணரும்படி செய்வதேயாகும்.

வேறு பல உண்மையான விஷயங்களை எழுதி எனது நூலை படிப்பவர்களுக்கு இனிமை படைப்பதாக அளிக்க முடியும். பல நூலாசிரியர்கள் இவ்வகையில் ஏற்கனவே பல நூல்களைப் படைத்துள்ளனர். இந்து மதத்தின் உயரிய நோக்கங்களை, நுண்ணிய அழகை விளக்கும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் எனது இரண்டாவது நூலான இது அச்சமூகத்தில் உள்ள பரிதாபகரமான கொடுமைகளை விளக்கிக் காட்டியுள்ளது.

:- மிஸ் காதரின் மேயோ

படிப்பகம்

www.padippakam.com

# 1

(உண்மையாய் நடந்த ஒரு சம்பவத்தை, சம்பந்தபட்டவர்களின் பெயர்களை மாற்றி இக்கட்டுரை எழுதப்பட்டது. இதில் காணப்படும் மேற்கோள்கள் இந்தியாவில் உள்ள தங்களது சமூகத்தீமைகளை நன்கு உணர்ந்த இந்துக்களின் மனவெளிப்பாடுகளேயாகும்.)

*தன் குடும்ப அனுபவத்திலிருந்து விதவைகளின் நிலைமை பற்றி நன்கு அறியாத மனிதனே கிடையாது. ஒரு விதவையின் வாழ்நாள், துன்பம், கொடுமை, மலினம், சஞ்சலம் முதலிய தீமைகள் நிறைந்ததாகும். குமாரகங்காநந்த சின்ஹா*

*இந்திய சட்டசபை வாதங்கள்*
*1927 செப்டம்பர், 15, 4414ம் பக்கம்.*

"ஒரு குழந்தை தன்னுடைய ஏழு வயதுவரை எப்படி வளர்ந்தது என்பது தெரியக்கூடுமானால், இறுதிவரை அக்குழந்தையின் நடவடிக்கைகள் எப்படி அமையும் என்பதனை நான் கூறிவிடுவேன்" என்றார் ஒரு அறிஞர்.

கமலாதேவி வடபாஞ்சாலத்தில் பிறந்தவள். வடபாஞ்சாலக் காற்றிற்கே வீரத்தை விதைக்கும் வல்லமையுண்டு. அவள் பிறந்த ஊர் ராணுவப் பயிற்சி பெற்ற ஒரு முஸ்லிம் சிற்றரசனது ஆளுகையில் இருந்தது. அவனுடைய விளக்கமுடியாத மனப்போக்கை அனுசரித்தே உதவி கமிஷனரும் செயல்பட்டு வந்தார். ஊர் உதவி கமிஷனரின் முயற்சியால் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் விளங்கியது. ஒரு இந்துப் பெண்ணாக இருந்தாலும் தன்னை யொத்த வயதுடைய முஸ்லிம் சிறுவர்களுடனேயே வெட்டவெளியில் விளையாடி வந்தாள். பாஞ்சாலநாட்டு

படிப்பகம்

www.padippakam.com



வெப்பமும், காற்றின் ஆற்றலும் கமலாதேவியின் மனதிலும் உடலிலும் உரமேற்றி வந்தன.

"அவள் ஒரு பையனைப் போலவே இருக்கிறாள். அவளது துறுதுறுப்பு எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. உரியகாலம் வரும்வரை அவள் நம்முடனேயே வசிக்க கடவுள் அருளவேண்டும்" என்று கமலா தேவியின் தந்தை கூறுவதுண்டு. அவளது தாயும் தனது கணவனது ஆவலை ஆமோதிப்பதுண்டு.

கமலாதேவிக்கு இரண்டு வயது நிறைவதற்குள்ளாகவே அவளுக்கு மணம் முடித்துவிட அவளது தந்தை விரும்பினார். அவர்கள் வசித்த ஊர் முஸ்லிம்கள் நிறைந்த ஊராதலால் வெளியிடங்களில் மாப்பிள்ளை தேடத்தொடங்கினார். தமது குலத்திற்குத் தாழ்ந்த குலத்தில் மணம் செய்வித்தால் ஆத்மா நரகத்திற்குச் செல்லநேரிடும் என்ற அச்சத்தில், தனது குலத்திற்கு நிகரான ஆனால், மற்ற எல்லா வகைகளிலும் தரம் தாழ்ந்த ஒரு குடும்பத்தில் அவளை மணம் செய்து கொடுத்தார். தக்க பிராயம் வரும்வரை, அவளது பன்னிரண்டாவது வயது வரையாவது அவள் என்னுடன் இருக்கட்டும் என்று தன்னுடைய முழு அன்பையும் செலுத்தி அவளை வளர்த்து வரலானார்.

கமலாதேவி எட்டு வயது முடியும் முன்பே வயதுக்கு வந்து விட்டாள்.

ஒருநாள் கமலாதேவியின் கணவன் வீட்டிலிருந்து ஒரு ஆள் வந்து அவளது கணவனது உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவள் தற்போது கணவனுடன் சேரவேண்டும் என்றும் கூறி அவளை அழைத்துச் செல்லவேண்டும் என்று கூறினான்.

படிப்பகம்

www.padippakam.com



'கமலா சின்னஞ்சிறு குழந்தைதானே' என்று தாய் தயங்கினாலும், அவள் கணவன் அழைக்கும்போது அவளை அனுப்பிவிடுவதுதான் முறை என்று கூறி பிரிவுத் துயரால் வேதனைப் பட்டாலும் தந்தையார் வழியனுப்பி வைத்தார். தெற்குத் திசையில் வெகுதூரத்தில் இருந்த கணவன் வீட்டை அடைந்தாள் கமலாதேவி. அவளது இளம்பிராய உடல் சேர்க்கைக் கூட காப்பாற்ற இயலாது ஒரே வாரத்தில் அவள் கணவன் அவளை விதவையாக்கிவிட்டு இறந்துபோனான். ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தின் விதவையானாள் கமலாதேவி.

பலதலைமுறைகளாக நேரடியான சந்ததிகளும், கிளைச் சந்ததிகளுமாக, பதினேழு நாத்திமார்களும், வீட்டுத் தலைவியான மாமியாரும் கொண்ட குடும்பத்தில் அனைவரது ஏச்சுக்கும் ஏவல்களுக்கும் அடிமையானாள் கமலாதேவி.

"பேயே! பிசாசே! எமலோகத்திலிருந்து வந்த மூதேவி முண்டையே! நீ கொடும் பாவியாக இருந்திருக்காவிட்டால் இன்றைக்கும் என்மகன் சிங்கம்போல இருந்திருப்பானே! ஏழேழு ஜென்மத்திலும் நீ செய்த பாவம்தான் என் மகனை பலி வாங்கிவிட்டது. உனக்கு என்றைக்குமே விடிமோட்சம் கிடையாது. உன் இழவெடுக்க! அடுத்த ஜென்மத்தில் நீ குருட்டு வண்டாய்த்தான் பிறக்க வேண்டும்" என்று மாமியார்கிழவி பேசி ஓய்ந்ததும் அதன் தொடர்ச்சியாக ஏனைய பெண்கள் தங்கள் பங்காக வசையாகவும், சாபமாகவும் பொழிந்து தள்ளுவார்கள். கமலாதேவிக்கு பலவிதமான கடுமையான, கேவலமான வேலைகளைத் தந்து செய்யச் சொல்வார்கள். வறட்டுத்தனமான சுவையற்ற கமலாதேவியின் உணவுக்கு அந்த வசைமொழிகளின் விளைவாக பெருகும் கண்ணீரே உப்புச் சுவை சேர்த்தது.

படிப்பகம்

www.padippakam.com



அவள் ஏதாவது வேலை காரணமாக தனது வசிப்பிடமான இருட்டு மூலையிலிருந்து வெளியே வந்தால் எல்லோருமாகச் சேர்ந்து அவளை அந்த மூலைக்கே விரட்டி அடிப்பார்கள். அவளுடைய கொள்ளிக் கண்கள் தங்களைப் பாதித்து விடும் என்று உண்மையிலேயே அவர்கள் பயந்தார்கள். கமலாதேவி தன் விதியை நொந்துகொண்டு அந்த இருட்டு மூலைக்கே சென்று படுத்துச் சிறிது கண்ணயர்ந்தால்போதும் அவளை உதைத்து எழுப்பி மீண்டும் கடுமையான வேலைகளை ஏவுவார்கள். அவளது களையிழந்த முகத்தைப் பற்றிப் பழித்துப் பேசுவார்கள். இந்த நிலையிலேயே கோடிக்கணக்கான விதவைப் பெண்கள் இந்தியாவில் உள்ளனர்.

சில ஆண்டுகள் கழிந்தன. அற்பமான உணவும் கடுமையான வேலைகளும் அவளை வாட்டினாலும் காலம் அவளது உடலில் மாற்றங்களை ஏற்படுத்தியது பன்னிரண்டாவது வயதில் பருவம் அவளது முகத்திலும் உடலிலும் புதிய களையைத் தோற்றுவித்தது.

கமலா தேவிக்கு இப்பொழுதுதான் கொடிய சோதனை தோன்றியது. அவளது இறந்துபோன கணவனின் மூத்த சகோதரன் கிருஷ்ணன் அவள்மீது பார்வையை செலுத்தத் தொடங்கினான். அவர்களது குல வழக்கப்படி விதவையான சகோதரனின் மனைவியை உயிருடன் இருக்கும்வேறு சகோதரன் மணந்து கொள்ளலாம். எனவே கிருஷ்ணன் கமலா தேவியை மணந்து கொள்ள விரும்பினான். முறையான சந்ததி விருத்தி ஏற்படும் என்பதாலும், செலவு இல்லாத் திருமணம் என்பதாலும், குடும்பத்தில் அனைவரும் அவனது கருத்தை ஆதரித்ததுடன், கமலா தேவியையும் வற்புறுத்தத் தொடங்கினர். விதவைக் கோலம் நீங்கி சுமங்கலியாக வாழலாம் என்றும் அறிவுறுத்தினர்.

படிப்பகம்

www.padippakam.com



கிருஷ்ணன் அசுத்தமான கொடிய கிழவன். நாற்றம் பிடித்த அவனைத் தொடவேண்டும் என்ற நினைவே கமலாதேவியை நடுநடுங்கச் செய்தது.

கிருஷ்ணனை மணக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அதிகரிக்கவே ஒருநாள் அவள் பொறுக்கமாட்டாமல் "மீண்டும் இப்படி வற்புறுத்தினால் நான் கிணற்றில் விழுந்து செத்து விடுவேன்" என்று கூறிவிட்டாள். பெரும்பாலான இந்து விதவைகள் இந்த வழியைத்தான் பின்பற்றினார்கள் என்பது கமலாதேவிக்குத் தெரியும்.

ஆனால் கமலாதேவி கூறியதைக் கேட்ட அவளது மாமியார் அடுப்படியிலிருந்தபடியே அவளைக் கூப்பிட்டாள். கமலாதேவி அங்குச் சென்றதும் அந்தக் கிழவி அவளது கையைப் பிடித்து அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த கஞ்சித் தண்ணீரில் அமுக்கிவிட்டாள். கை கொப்பளித்து விட்டது.

"நீ தற்கொலை புரிந்து கொண்டால் வீட்டு வேலைகளை யார் பார்ப்பது? இதுவே உனக்குப் பாடமாக இருக்கட்டும். எந்த விதவைப் பெண்ணாவது பெரியவர்கள் வார்த்தையை மதிக்காமல் நடந்து கொண்டதுண்டா? செத்துப்போய் தப்பித்துக் கொள்ளலாம் என்று பார்த்தாயா? அது நடக்காது! நாங்கள் அவ்வளவு சுலபத்தில் உன்னை விட்டு விடுவோமா?" என்று கிழவி கத்தவேறு தொடங்கிவிட்டாள்.

அவர்களிடமிருந்து தற்கொலை செய்து கொண்டுகூடத் தப்ப இயலாது என்பதனை கமலாதேவி உணர்ந்து கொண்டாள். இப்படியே போனால் ஒருநாள் கிருஷ்ணனுக்குத்தான் பலியாவது நிச்சயம் என்பது அவளுக்குப் புரிந்தது.

படிப்பகம்

www.padippakam.com



கமலாதேவியின் அன்றாட வேலைகளில் வீட்டில் சேரும் பசுஞ்சாணத்தை வரட்டியாகத் தட்டிவைப்பதும் ஒன்று. அப்படி அவளால் தட்டப்பட்ட வரட்டிகள் வீட்டின்பின்புறம் மலைபோலக் குவிந்து கிடந்தன.

அப்படி ஒரு நாள் அவள் வரட்டி தட்டிக் கொண்டிருந்தபோது குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் வீட்டிலுள்ளோர் அனைவரும் குழுமியிருக்க ஒரு துண்டுப் பிரசுரத்தை சப்தம் போட்டுப் படித்துக் கொண்டிருப்பது கேட்டது.

"சத்தியயுகத்தில் நமது இந்துப் பெண்கள் தூய்மையும், தீரமும் கொண்டிருந்தனர். அரசி முதல் அடிமைவரை தன் கணவன் இறந்தால் தானும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். தீப்பாய்ந்து புனிதப் பிறவியடையத் தயங்கியதில்லை. ஆனால் நமது பண்டைய நாகரிகத்தின் கொடிய பகைவர்களாகத் தோன்றியுள்ள பிரிட்டிஷார் நமது பெண்மக்களின் இந்த உன்னதமான உரிமையைப் பறித்து விட்டார்கள்.

ஓ விதவைகளே! நீங்கள் உடன்கட்டை 'மட்டும் ஏறுவீர்களாயின் மிகவும் மேலான நற்கதியடையலாமல்லவா? திடமான மனம் கொண்ட நீங்கள் கோழைகளாகி விட்டீர்கள், மேலுலகம் சென்று உங்கள் கணவருடன் வாழும் வாய்ப்பை இழந்து விட்டீர்கள். உடன் கட்டை ஏறும் உங்கள் செயலால் உங்கள் புகுந்த வீடும் பெருமைபெறுகிறது. ஆனால் பிரிட்டிஷார் தங்களது பொறாமைக் குணத்தால் உங்களது ஆத்ம உயர்வைத் தடுத்துவிட்டார்கள். சத்தியயுகம் போய் விட்டதே"!

படிப்பகம்

www.padippakam.com



வரட்டி தட்டியவாறே இதைக் கேட்டுக் கொண்டிருந்த கமலாதேவி யாரும் அறியா வண்ணம் வெளியேறினாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் குடும்பத்தினர் ஏதோ வேலையாக கமலாதேவியைத் தேடி அவளைக் காணாமல் கூச்சலிடத் தொடங்கினர்.

சற்று நேரத்திற்கெல்லாம் கமலாதேவி அவர்கள் முன் தோன்றினாள். உணர்ச்சியற்ற குரலில் "நான் ஆற்றுக்குச் சென்று நீராடி வந்துள்ளேன். இன்று மாலைக்குள் நான் தீப்பாய்ந் சதி செய்து கொள்ளப் போகிறேன். கடவுள்களின் மீது ஆணையிட்டிருக்கிறேன்" என்றாள்.

"என் மகனோடு அவன் மனைவி சேரப்போகும் இந்த நாள் நல்ல நாளாகும். என் குடும்பம் உயர்வு பெறப்போகும் இந்நாள் நல்ல நாளாகும்" என்று மாமியார் கிழவி மிகவும் மகிழ்ந்தாள்.

"ஆனால் இவள் கடைசிவரை இதே உறுதியோடு இருப்பாளா?" என்று குடும்பத்துப் பெண்கள் சிலர் சந்தேகம் எழுப்பியபோது "அவள் கண்களைப் பாருங்கள். அவை எவ்வளவு உறுதியுடன் இருக்கின்றன. அவள் மாறமாட்டாள்" என்று கிழவி அவர்களுக்கு பதிலளித்தாள்.

வீடே மகிழ்ச்சியால் ஆழ்ந்தது. அனைவரும் சொல்லவொண்ணா ஆனந்தம் அடைந்தனர். பரபரவென்று காரியங்களைச் செய்தனர். தீப்பாயும் விதவை அணிய வேண்டிய பட்டும் நூலும் கலந்து நெய்த மஷ்ரூ என்ற ஆடை வாங்கி வரப்பட்டது. ஊர் முழுவதும் செய்தியை பறையறைந்து அறிவித்தனர். கமலாதேவியை அலங்கரித்தனர். விதவையானபின் அவள் அணியாத ஆபரணங்களை அவளுக்கு

படிப்பகம்

www.padippakam.com



அணிவித்தனர். வீட்டிலிருந்து நகைகள் தவிர இரவல் வாங்கியும் அவளுக்கு அணிவித்தனர். பிறகு அவளை ஒரு திறந்த பல்லக்கில் ஏற்றி உட்காரவைத்து கடவுளின் சிலையைத் தூக்கிச் செல்வது போல மெதுவாக நடக்கத் தொடங்கினர்.

மேளதாளங்கள் முழங்க பஜனை கோஷ்டிகள் பாடிக் கொண்டு வர பெருத்த ஆரவாரத்துடன் கிராமமே ஊர்வலமாகச் சென்றது.

கமலாதேவியால் தட்டிக் குவிக்கப்பட்டிருந்த வரட்டியை ஒரு பெரும் சுமையாக ஏற்றிக்கொண்டு ஒரு வண்டியும் பின் தொடர்ந்தது.

"வழக்கமான சுடுகாட்டிற்குச் செல்லவேண்டாம். யாரேனும் வெள்ளைக் காரன் பார்த்துவிடக்கூடும். இரட்டைக் கிணறு அருகே உள்ள தோட்டத்திற்குச் செல்லாம்" என்று ஒரு பெரியவர் கூறவே அது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அந்தத் தோட்டத்தில் மரங்கள் அடர்ந்து நின்றன. கிளைகள் அடர்ந்த ஒரு உயரமான மரத்தின் அடியில் கட்டாந்தரையாகக் காணப்பட்டது.

வரட்டியை அடுக்கிச் சிதையைத் தயார் செய்தபின், கமலாதேவியின் உடலில் பூட்டப்பட்டிருந்த நகைகள் கழற்றப்பட்டு அவள் சிதையில் படுக்கவைக்கப்பட்டாள். அப்போதே அவள் உணர்வுகளற்று சிலைபோல் கிடந்தாள். அவள் முகத்தையும், வலது கையையும் மட்டும் வெளியே தெரியும்படி வைத்துவிட்டு அவளை வரட்டியினால் மூடினர். அவள் கையில் ஒரு பிடி வைக்கோலைக் கொளுத்திக் கொடுத்தனர். அது எரிந்து சாம்பலாய் உதிர்ந்ததும் அவள்

படிப்பகம்

www.padippakam.com



தன் வாயைத் திறந்து தன் சிதைக்கு தீமூட்டுமாறு கூறினாள். அவள் முகத்தையும் மூடி மண்ணெண்ணையையும், பசு நெய்யையும் சிதையில் ஊற்றி தீ வைத்தனர்.

சுற்றி நின்றவர்கள் பெரும் கூச்சலாக ஆரவாரம் செய்தனர். மேளதாளங்களின் ஓசை உரத்து ஒலித்தது. தீயின் கொடுமையால் அவள் உரத்துக் கூச்சலிட்டிருந்தாலும் வெளியே யாருக்கும் கேட்டிராதவாறு அவர்களது வாழ்த்தோசையும், வாத்திய ஓசைகளும் ஓங்கி ஒலித்தன.

"சதிசெய்து கொள்வது சட்டப்படி தடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் நான் ஏன் இதை அனுமதித்தேன் என்றால் இந்தப் பெண் எனது ஊரைச் சேர்ந்தவள் இல்லை. வெகு தூரத்தில் இருந்து இங்கு வந்தவள். ஆகவே இதற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே துரை என்மேல் கோபம் கொள்ளக்கூடாது. என்றாலும் இது தூய்மைமிக்க திருநாளாகும். நமது கிராமத்தின் புகழை அதிகரிக்கும் செயலாகும். கடவுள் அருள்புரிவாராக" என்று கிராமத்தலைவன் தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டான்.

- "இந்துக்களின் சட்டம் பல மனைவிகளை மணம்புரிய இடமளித்தலான் எங்கு தனது மருமகன் வேறு பெண்ணை மணம்புரிந்து கொண்டு விடுவானோ என்று அஞ்சி, பெண்ணைப் பெற்றவர்கள் தமது பெண்களை கணவன் வேண்டிய உடனே மருமகன் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிடுவார்கள்."

- டாக்டர் எஸ். முத்துலட்சுமி ரெட்டி
(சென்னை சட்டசபை நிகழ்ச்சிகள்
மார்ச் 27, 1928 - பக்கம் 43)

படிப்பகம்

www.padippakam.com



(இவர் முதன்முதலாக சென்னை சட்டசபையில் அங்கத்தினராக ஆன பெண்மணி, சென்னை சட்ட மேலவையின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டவர். தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்டார். மருத்துவத் தொழிலிலும், பலசமூகச் சீர்திருத்தப் பணிகளிலும் பெருந்தொண்டாற்றியவர்.)

"இளம் வயதில் மணம் புரியும் வழக்கமே, இந்தியாவில் பெண்கல்விக்குப் பிரதான தடையாகும். பல்வேறு வழிகளிலும் இந்தப் பழக்கம் பல கொடிய தீங்குகளை உண்டாக்குகிறது. இந்தப் பழக்கம் காரணமாகவே இளம் விதவைகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது. நமது நாகரிகத்திற்கு இது பெரும் அவமானமாகும்.

- ஸ்ரீமதி பார்வதி சந்திரசேகர ஐயர்

(பெங்களூர் ஜில்லா போர்டின் முதல் பெண் அங்கத்தினர். இவர் கணவர் மைசூரில் நீதிபதியாகப் பணியாற்றியவர் ஸ்ரீதர்மம், ஆகஸ்ட் 1927)

"பல்லாயிரம் வருஷங்களாக வைதீக பார்ப்பன வகுப்பார் மேற்கொண்டு வரும் இந்து மததர்மத்திற்கு இம்மசோதா முற்றிலும் எதிரானதாகும். வைதீக கொள்கைகளை மீறிய இத்தகைய சட்டங்களை எக்காரணம் கொண்டு நாம் ஆதரிக்கக் கூடாது.

(1927-ஆம் ஆண்டு இந்தியா சட்டசபையில் விவாதிக்கப் பட்ட பாலிய விவாகத்தடை மசோதா குறித்து ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள். கும்பகோணம், -பிப்ரவரி 15, 1928)

"அறிஞர்கள் பலரும், சிறப்பாக வைதீக வகுப்பாரும் இந்த மசோதாவை எதிர்க்கின்றனர். சாஸ்திரங்களை ஆதாரமாகக் காண்பித்து பாலியவிவாகம் மதச்சட்டம் என்றும் கூறுகின்றனர். மேலும் இளம் வயதிலேயே மணம் செய்விப்பதனால் பெண்களின் கற்பு நிலைக்கும் என்றும் கூறுகின்றனர்."

- திருமதி பி.கே. ராய்

படிப்பகம்

www.padippakam.com



(வங்காள மாகாணப் பெண்கள் மாநாட்டில் ஆற்றியஉரை. கல்கத்தா வாராந்திர ஸ்டேட்ஸ்மேன் பத்திரிக்கை - ஜூலை 26 - 1928)

ஒவ்வொரு ஆண்டும் நீதி மன்றத்திற்கு கள்ளத்தனமாய் நடத்திய உடன்கட்டை ஏறும் வழக்குகள் வந்து கொண்டே இருக்கின்றன.....

இவைகளால் பொது மக்களிடையே பெரும் கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. 1927-ல் ஒரு பெண் இவ்விதமாக இறந்தாள். அவள் அந்த ஊருக்கு ஒரு வீரபத்தினியாக ஆகிவிட்டாள். சுற்று வட்டார ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக அந்த இடத்தைச் சென்று பார்த்தனர். இதைத் தவிர தங்கள் வீடுகளிலேயே மண்ணெண்ணையை ஊற்றிக் கொளுத்திக் கொண்டு இறக்கும் நிகழ்ச்சிகளை வங்காளப் பத்திரிக்கைகள் பிரசுரித்துக் கொண்டிருக்கின்றன.

- ஜி,டி, காராட், **I.C.S**

("இந்தியா நிலைமைக்குறிப்பு" என்ற நூலில் - பக்கம் 235 லண்டன் 1928)

1928 நவம்பர் மாதம் முதல் வாரத்தில் காசியில் அகில இந்திய பார்ப்பனர் மாநாடு நடைபெற்றது. அங்கு 300க்கு மேற்பட்ட சாஸ்திரிகளும், பண்டிதர்களும் கூடியிருந்தனர். மாநாட்டில் சமஸ்கிருதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில:-

1 மற்றும் 3 - பெண்களுக்கு 8 வயதிலேயே திருமணம் செய்து விடவேண்டும். தவறினால் ஒன்பதிலாவது, பத்தாவது வயதிலாவது அதுவும் முடியாவிட்டால் பெண்கள் பூப்படையும் முன்பாக திருமணம் செய்து விடவேண்டும். இதனை சட்டம் மூலமாகத் தடை செய்வது முற்றிலும் நேர்மையாகாது.

- டைம்ஸ் ஆப் இந்தியா - பம்பாய்
டிசம்பர் 17, 1928.

படிப்பகம்

www.padippakam.com

# 2

*"பெற்றோர்கள் தங்களது இளம் பெண்களை முதிர்ந்த வயதுடையவர்க்கேனும், கிழவர்கட்கேனும் மணம் புரிந்தளிப்பதில் வருந்துவதில்லை."*

*- டாக்டர் மாலினி பி. சக்தாங்கர அம்மை, குழந்தைகள் மருத்துவம், காமர் ஆல்பிளஸ் மருத்துவமனை, இணக்க வயது ஆராய்ச்சிக் கழகம், - பம்பாயில் பேசியது.*

முகமது அப்துல் என்ற முகமதியத் துறவி, மனிதர்களுக்கு உபதேசம் செய்து கொண்டு, உலகெங்கும் பயணம் மேற்கொண்டிருந்தார். ஆப்கானிஸ்தானத்தின் தெற்கேயுள்ள இந்தியா என்னும் சிலைகளை வணங்கும் நாட்டிற்கு வந்தார். அங்கிருந்த ஒரு மலையில் தொழுகை நடத்திக் கொண்டு வசித்து வரலானார். அவர் அங்கிருப்பதைக் கண்ட முஸ்லிம்கள் அம்மலைச் சாரலை அடைந்து அதையே தமது வசிப்பிடமாகக் கொண்டனர். அப்படி வசிக்கத் தொடங்கியவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இஸ்லாம்பூர் என்ற பெயருடன் அது ஒரு சிறு நகரமாகவே மாறியது.

பல ஆண்டுகள் வரை இஸ்லாமியர்கள் தவிர இந்துக்கள் அந்த ஊரை அணுகத் துணியவில்லை. யாருக்கும் வணங்காத தன்மையும், சிறந்த போர் வீரர்களாகவும் விளங்கிய அந்த முஸ்லிம் மக்கள் பிற மதத்தவரை தம்து நகரில் அணுகவிடவில்லை. துறவி முகமது அப்துலும் இந்துக்களை அந்நகரில் வசிக்க அனுமதித்திருப்பார் என்று சொல்லமுடியாது.

அமைதி, ஒழுக்கம் ஆகிய கொள்கைகளைக் கொண்ட பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் வேரூறின்யதும் இந்துக்களை

படிப்பகம்

www.padippakam.com



இஸ்லாமியர்கள் அடியோடு அழிப்பதைத் தடுக்கவே, அவர்களின் துணைகொண்டு, வட்டிக்குக் கடன் கொடுக்கும் இந்துக்கள் ஒருவர்பின் ஒருவராக அங்கு குடியேறத் தொடங்கினர். முயல்போன்ற கோழைத்தனமும், நரிபோன்ற குணமும், சுடுகாடு போன்ற பேராசையும் கொண்ட இவர்கள் பொருள் சேர்க்கும் ஆசையில் இஸ்லாம்பூரில் குடியேறினர். வட்டிப்பணம் சகல துன்பங்களையும் நீக்கிவிடும் என்பது இவர்களது ஆசை.

பாபு ராமதாசர் என்பவரை ஒரு முஸ்லிம் வணிகன்,அவரது உச்சிக் குடுமியைப் பிடித்து கரகரவென்று சுழற்றினான். ஏனைய முஸ்லிம்களும், தன்னை விட்டு விடும்படி பாபுராமதாசர் கெஞ்சி அழுதபோது அவனைக் கேலி செய்து கைதட்டி மகிழ்ந்தனர்.

“ஓடிப்போய் சேலை கட்டிக் கொண்டுவா! இனிமேல் உன்னை ஒரு ஆண்பிள்ளையென்று சொல்லிக் கொண்டிருந்தால் உன்னுடைய காதுகளை அறுத்துவிடுவோம்” என்று தங்களது தாடிகள் ஆட கேலி செய்து மகிழ்ந்தனர். இத்தகைய காயங்களை ராமதாசர் தனக்குக் கிடைக்கும் வட்டித் தொகைக்காக பொறுத்துக் கொள்ளவே செய்தார். வயலில் விளையும் பொருள்களுக்கு முன்னதாகவே தொகை கொடுத்து மழை குறைந்த சரியாக விளைவு இல்லாத காலங்களில் நிலங்களையே வசப்படுத்திக் கொண்டு பிறகு அவற்றை அதிக விலைக்கு விற்றுவிடுவார்.

ராமதாசரது மனைவி இறந்த பிறகு அவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை. இஸ்லாம்பூரிலிருந்து நூறுமைல் தள்ளியே இவர் ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். அங்கு சென்று பெண்தேடி மணம் புரிவதென்றால் செலவு அதிகமாகும்

படிப்பகம்

www.padippakam.com



என்பதால் தவிர்த்துவிட்டார். அவருக்கு ஊர்மிளை என்று ஒரு மகள் இருந்தாள்.

பிறகு ஒரு சமயத்தில் அதிக செலவில்லாமல் ஒரு பையனை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது.

ஊர்மிளைக்கு பார்வை குறைந்த, காதும் சரியாகக் கேட்காத அத்தை ஒருத்தி இருந்தாள். அவள்தான் ஊர்மிளைக்குக் கல்விபுகட்டும் ஆசிரியராகவும் பாதுகாவலாகவும் இருந்தாள். சிறு குழந்தைகளுக்கு உரிய விளையாட்டோ, சந்தோஷமோ இல்லாமல், சதா தூங்கிவழியும் அத்தை வீட்டிலுள்ள கடவுள்களின் சிலைகளுக்குக் கூறும் மந்திரங்களைக் கேட்டுக்கொண்டு வீட்டின் இருண்ட அறைகளிலும், நடுமுற்றத்திலுமாக அவளது காலம் கழிந்தது.

எப்படியோ ஊர்மிளையின் மனதில் சுயேச்சையான எண்ணங்கள் குடிகொண்டன. அவளுக்குத் தனிமை தந்த வெறுப்பின் காரணமாக அடிக்கடி தன் அத்தையை எதிர்த்துப் பேசத் தொடங்கினாள். அத்தை மனம் நொந்து அடிக்கடி கண்ணீர் சிந்துவாள்.

"எதற்காக இந்த அவலட்சணமான கடவுள்களின் சிலைகளை வணங்கவேண்டும்! அவைகளைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. நாம் கோயிலுக்குப் போகும்போது அங்குள்ள சிலைகளும் அவலட்சணமாகவே இருக்கின்றன. கோயில் நம் வீட்டளவுகூட சுத்தமாக இல்லையே. அனீபானது இஸ்லாத்தில் அவர்கள் கோயிலில் சாமி சிலையே கிடையாதாம். அவர்கள் கோயிலும் சுத்தமாக இருக்குமாம். அவர்களது கடவுள் சிறுமிகள் செய்யும் தவறுகளுக்காக அவர்களைத் தண்டிப்பதில்லையாம்" என்றாள் ஊர்மிளை.

படிப்பகம்

www.padippakam.com



"உன் நாசமாய்ப்போன வாயை மூடு. சாமி காதில் விழுந்துவிடப் போகிறது. நமது வீட்டிற்கு விறகு விற்க வருவது போல வந்து அந்த முஸ்லிம் கிழப்பிசாசு அனீபான் உன் மனதை மாற்றப் பார்க்கிறாள். இனி அவளை இந்த வீட்டிற்குள் நுழைய விடக்கூடாது. இந்து குடும்பப்பெண் தெரிந்து கொள்ளவேண்டியவைகளையெல்லாம் நான் உனக்குச் சொல்லிக் கொடுத்து விடுகிறேன். பிறகு நீயாச்சு உன் புருஷனாச்சு" என்று அத்தை கிழவி சிடுசிடுத்தாள்.

மதப்பற்றும் குடும்பப் பற்றும் உடைய அந்தக் கிழவி ஊர்மிளைக்கு கணவனாக வரப்போகிறவன் எங்கேயிருக்கிறான் என்பது தெரியாமல் பல இரவுகள் அதே கவலையில் தூங்காமல் இருந்திருக்கிறாள். "இன்னும் ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து முடிவு செய்யாமல் இருக்கும் ராமதாசனது நெஞ்சு உரமானதுதான். அவன் என்ன தெய்வக் குற்றம் செய்தானோ! அவனது குலத்தையே அழித்து விடுவதென்று தெய்வம் முடிவு செய்துவிட்டது போல இருக்கிறது. தான் எவ்வளவு அழகி என்பது ஊர்மிளைக்குத் தெரியாது. அழகே பெரிய ஆபத்தாக அல்லவா முடிந்துவிடும். ஆனாலும் இந்த நாட்டில் பெண்கள் எண்ணிக்கை ஆண்களை விடக் குறைவாக அல்லவா இருக்கிறது" என்று பலவாறாக எண்ணி மனம் கலங்குவாள்.

ஊர்மிளைக்கு பன்னிரண்டு வயது நெருங்கும்வரை ராமதாசர் அப்படியே இருந்தார்.

ஒருநாள் ராமதாசர் கடைத்தெருவில் சென்று கொண்டிருந்தபோது அங்கிருந்த ஒருவன் மற்றொருவனைப் பார்த்து "ராமதாசரது மகள் குருடியா? குஷ்டநோய் பிடித்தவளா? பன்னிரண்டு வயதாகியும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை.. அவள் கல்யாணமாகாமல் வயதுக்கு வந்துவிட்டால் ராமதாசரை சாதியிலிருந்து தள்ளிவைக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமல்லவா? அவர் எவ்வளவு பணக்காரராக இருந்தால்தான் என்ன? சாதியிலிருந்து தள்ளி வைத்தால்தான் நம்மிடம் அவர் கடுமையாகப் பணம் வசூல் செய்து கொடுமைப் படுத்தியதற்காக மகிழலாம். அதற்காக நாம் சந்தோஷப்பட்டாலும் கூட அவர் தனக்கு வரப்போகும் அபகீர்த்தியைப் பற்றிக் கவலைப்படவே இல்லையே" என்று பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டார்.

இதைக் கேட்டவுடன் ராமதாசர் திடுக்கிட்டார். மகள் காரணமாக மற்றவர்கள் தன்னைக் கேலி பேசுவதை தவிர்க்க விரும்பினார். தன் மகளைப் பற்றி இதுவரை சிறிதும் நினைக்காமல் இருந்த ராமதாசர் இன்று அவளை அழைத்து, "உன்னை நான் ஏன் பெற்று வளர்த்தேன் என்பதே தெரியவில்லை. உனது கல்யாணத்திற்கு செலவு செய்து நான் அழிந்தே போய் விடுவேன். கொடிய நோய் போல நீ வந்து சேர்ந்திருக்கிறாய். உலகில் எவ்வளவோ பெண்கள், தங்களது தந்தைக்குத் தங்களால் செலவோ, சிரமமோ ஏற்படக்கூடாதென்ற எண்ணத்தில் தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கிறார்களே, உனக்குத் தெரியாதா?" என்று திட்டத் தொடங்கினார்.

"அப்படியானால் எனக்கு எதற்குக் கல்யாணம்?" என்றாள் ஊர்மிளை துணிவுடன்.

"அது நமது குலவழக்கம். கடவுள்களின் கட்டளை. இனியும் உனது கல்யாணத்தைத் தாமதித்தால், உலகத்தில் எனக்குக் கேவலமும், நரகத்தில் சித்திரவதையும் தான் கிடைக்கும்" என்றார் ராமதாசர்.

"முஸ்லிம் பெண்களுக்கு இவ்வளவு சிறுவயதில் கல்யாணம் செய்யப்படுவதில்லையே! அவர்களின் கடவுள் வேறு

படிப்பகம்

www.padippakam.com



விதமாகச் சொல்லியிருப்பதோடு பெண் குழந்தைகள் மீது அன்பாகவும் இருக்கின்றாரே"!

வசைபாடியே, "வாயைமூடு" என்று அதட்டிய ராமதாசர் அவளை தன்முன்னிருந்து விரட்டிவிட்டார்.

பிறகு ராமதாசர் சிந்திக்கத் தொடங்கினார். அவருக்கு ஒரு வழி தோன்றியது. நமது ஜாதியைச் சேர்ந்த நகை வியாபாரி கேசவதத்தர் மனைவியை இழந்தவர். அறுபது வயதைக் கடந்தவர். கைகால் பிடிப்பு வியாதியும், காசநோயும் உள்ளவர். இரண்டொரு வருஷங்களிலேயே இறந்துவிடுவார். அப்படிப்பட்டவருக்கு ஊர்மிளையை மணம் செய்வித்தால் அதற்காக அவரிடமிருந்து பெரிய அளவு தொகை பெறலாமே என்று சிந்தித்து கேசவதத்தருக்கு தூது அனுப்பினார். தூதன் ஊர்மிளையின் அழகு, குணம் போன்றவற்றை எடுத்துக்கூறி அவரது சம்மதத்தையும் பெற்றுவிட்டான்.

விஷயம் கேள்விப்பட்டவுடன் ராமதாசர் 'கடவுள் கருணை காட்டிவிட்டார். என் மகளுக்காக நான் கேசவதத்தரிடம் மூவாயிரம் ரூபாயாவது வாங்குவேன்' என்று எண்ணமிட்டு அன்றிரவு நிம்மதியாகத் தூங்கினார்.

சில நாட்கள் சென்றபின் ராமதாசர் ஊர்மிளையை அழைத்து "கேசவதத்தர் உனக்கேற்ற கணவன். பெரிய பணக்காரர். கடைத் தெருவில் பெரிய நகைக்கடை வைத்திருக்கிறார். அவர் உன்மீது ஆசைகொண்டு உன்னைப் பெண் கேட்டுள்ளார். அவருடைய சொத்தும், அவரிடமுள்ள விலையுயர்ந்த நகைகளும் உனக்கே சொந்தம்" என்று கூறினார்.

"நல்ல கணவன். நிறைய நகைகள்; எல்லாம் நமக்கே" என்ற செய்தி கேட்டதும் ஊர்மிளையின் முகம் மலர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



தனது தொழில் நிமித்தமாக மறுநாள் காலை ராமதாசர் வெளியூர் சென்றார். வட்டி வாங்குவது, புதிதாகக் கடன் கொடுப்பது இப்படிப் பலவேலைகள் அவருக்கு.

தந்தை புறப்பட்டுப் போனபிறகு ஊர்மிளை தன் கிழ அத்தை சரோஜினியிடம் கடைத்தெருவுக்குச் சென்று வேடிக்கை பார்த்து வரலாம் என்று அழைத்தாள். உண்மையில் அவளது எண்ணம் வேறு. தனது சகோதரன் கோபிப்பானே என்று பயந்து முதலில் மறுத்தாலும் ஊர்மிளை மிகவும் வற்புறுத்தியதுடன் தான் முகத்தை நன்றாகவே மூடிக்கொண்டு யார் என்று தெரியாத வண்ணம் அத்தையின் கையைப் பிடித்துக்கொண்டு அவள் பின்னேயே வருவதாகவும் உறுதிகூறி அப்பாவிற்கு எப்படித் தெரியப் போகிறது என்றும் கூறவே இருவரும் புறப்பட்டனர்.

கடைத்தெருவில் ஒவ்வொரு கடையையும் காட்டி இது யாருடையது என்று ஊர்மிளை கேட்டதற்கெல்லாம் பதிலளித்து வந்த சரோஜினி, ஒரு பெரிய நகைக்கடையைக் காட்டி ஊர்மிளை அது யாருடையகடை என்று கேட்டபோது, அதுதான் ஊர்மிளையின் கணவராக வரப்போகும் கேசவதத்தரது கடை என்று கூறி அங்கு அமர்ந்திருந்த கேசவதத்தரையும் காட்டினாள்.

முகமூடியை நன்றாக இழுத்து மூடிக்கொண்டு அவரைப் பார்த்த ஊர்மிளையின் மனதில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போல இருந்தது அவள் கண்ட காட்சி. உடல் எங்கும் ரோமம் அடர்ந்திருக்க, எலும்பும் தோலுமாய், சிங்கப் பற்களும் கொண்ட அந்தக் கிழவனைப் பார்த்தபோது ஒரு விஷச் சிலந்தியைப் பார்ப்பதுபோல இருந்தது அவளுக்கு. அவள் தன் அத்தையிடம் “அதுவா அவர்?” என்றாள்.

படிப்பகம்

www.padippakam.com



"ஆம்" என்றாள் கிழவி.

"இவனையா நான் மணக்க வேண்டும், ஏன்?"

"அது கடவுளின் விருப்பம்"

அப்படியானால் நான் அந்தக் கடவுளையே வெறுக்கிறேன்."

"அப்படிச் சொல்லாதே! கடவுள் உன்னைக் கொன்றே போட்டுவிடுவார்."

"செய்து கொள்ளட்டும்" என்று விம்மலுடன் கூறிய ஊர்மிளை ஒரே ஓட்டமாக ஓடத் தொடங்கினாள். அப்படி ஓடியவள் களைத்துப் போய் முகமது அப்துல் என்னும் துறவியினது மசூதியின் அருகிலுள்ள ஒரு குட்டையில் கால் தடுக்கி விழப் போனாள்.

நிலைகுலைந்து விழுந்த அவள் அப்படியே அந்தக் குட்டையில் தலைகீழாக விழுந்து முழுகிப் போயிருப்பாள். ஆனால், அப்படி ஆகாதவாறு ஒரு முரட்டுக் கரம் அவளைப் பிடித்துக் காப்பாற்றியது. களைப்பும், மயக்கமுமாகத் தன் தோள்மீது சாய்ந்துவிட்ட அவளை அந்த மனிதன் ஆதரவாகப் பற்றி "அழகான பெண்ணே காயம்பட்டதா" என்று விசாரித்தான்.

ஊர்மிளை முகத்தை மூடியிருந்து முகமூடி விலகி விடவே அந்த மனிதனை நன்றாக ஏறெடுத்துப் பார்த்தாள். போர்த் தொழிலில் தேறிய வடமேற்கு எல்லைப்புறத்தைச் சேர்ந்தவன் அந்த வாலிபன் என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவள் அவனிடம் "தாங்கள் பகவான் கிருஷ்ணரா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



"அல்லாவின் புகழ் ஓங்குக. என் பெயர் முகமது கான். என் தந்தைபெயர் ஷேர் அலிகான் என்பதாகும். நான் இந்த ஊருக்குப் புதியவன்" என்று பதிலளித்த அந்த மனிதனை ஊர்மிளை இமைகொட்டாமல் பார்த்தாள்.

"நீங்கள் முஸ்லிமா! அந்தக் கட்டிடம் உங்கள் சாமியின் கோயிலா"?

"ஆம் அது அல்லாவின் இருப்பிடம்" என்று கூறிய அந்த வெளியூர்க்காரனுக்கு வணக்கம் கூறிவிட்டு ஒரு ஓட்டமாக வீட்டிற்கு ஓடிவந்து விட்டாள் ஊர்மிளை.

பல இடங்களில் அலைந்து ஊர்மிளையைக் காணாது அஞ்சி நடுங்கிய சரோஜினி கடைசியாகச் சோர்ந்துபோய் வீடுதிரும்பியபோது ஊர்மிளை தன் படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டதும், மனம் அமைதியடைந்தாலும் கோபம் தாளாது அவளைப் படுக்கையினின்றும் கீழே தள்ளிவிட்டு வாய்க்கு வந்தபடி திட்டத் தொடங்கினாள். அவளது திட்டுக்களைப் பொருட்படுத்தாமல் ஊர்மிளை தனது சிந்தனையிலேயே மூழ்கியிருந்தாள்.

திட்டி ஓய்ந்து களைத்துப் போய் சரோஜினி கண்ணயர்ந்தவுடன் ஊர்மிளை சப்தமிடாமல் எழுந்து சென்று சாமி அறையிலிருந்த கடவுள்கள் சிலைகளை எடுத்து வந்து முற்றத்தில் வைத்து ஒவ்வொன்றையும் நன்றாக அடித்து குப்பையில் போட்டு விட்டாள். "நான் உங்களை வெறுக்கிறேன். காது கேட்கிறதா! நான் சொல்வது புரிகிறதா! நான் உங்களை வெறுக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் என்னை சாக அடித்து விடுங்கள். விஷச் சிலந்தி போலக் காணப்படும் அந்தக் கிழவனை மணப்பதைவிட சாவது

படிப்பகம்

www.padippakam.com



மேலல்லவா?" என்று அந்தச் சாமி சிலைகளைப் பார்த்து ஊர்மிளை புலம்பத் தொடங்கினாள்.

பிறகு கண்ணீர் சிந்தியவாறு, புலம்பிக் கொண்டே வீட்டை விட்டு வெளியேறி பரந்த வெட்டவெளியில் நடக்கத் தொடங்கினாள். முதலில் சிறிது தயங்கினாலும் தனிமையில் செல்லும் எவரையும் பயப்படச்செய்யும் யாருமற்ற வெட்டவெளியில் துணிந்து நடக்கத் தொடங்கினாள். சுண்ணாம்பு அடிக்கப்பட்டு சூரிய ஒளியில் பளிச்சென்று தெரிகின்ற முகமது அப்துல் மசூதியை நோக்கிச் சென்றாள். சிறிது நேரத்தில் காலையில்தான் தடுக்கி விழப்போன குட்டையைத் தாண்டி சற்றுத் தயக்கத்துடன் மசூதியின் உட்புறம் சென்றாள்.

அங்கு காற்றோட்டமான தொழுகை நடத்தும் இடம் அவள் கண்களில் பட்டது. அங்கு காணப்பட்ட தூய்மை அவளது மனத்துடிப்பை அமைதிப்படுத்தியது.

"நான் காலையில் சந்தித்த இளம் பறவையே! நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்ற குரல் கேட்டு நிமிர்ந்த ஊர்மிளையின் எதிரில் தான் காலையில் சந்தித்த வாலிபன் நிற்பதைக் கண்டு மகிழ்ந்தாள். அவனிடம் ஊர்மிளை, "இளம்பெண்களை விஷச் சிலந்திகளிடம் ஒப்படைக்கும் கடவுள்களிடமிருந்து காப்பாற்றும் சக்தி உங்கள் கடவுளிடம் இருக்கிறதா? என்று தெரிந்து கொள்ள இங்கு வந்தேன்"! என்று கூறினாள்.

அவன் புன்னகையுடன் "அவரால் முடியும் நீவா" என்று கூறி அவளது கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.-

•

ராமதாசர் ஊர் திரும்பியது அவருக்கு ஊர்மிளை காணாமல் போய்விட்ட விபரம் சொல்லப்பட்டது. ஆனால்

படிப்பகம்

www.padippakam.com



அவள் எங்கு சென்றாள், என்ன ஆனாள்? என்ற விபரம் மட்டும் யாருக்கும் தெரியவில்லை.

"இவ்வளவு பெரிய பெண்ணாகியும் அவளைக் கல்யாணம் செய்து கொடுக்காமல் இருந்தாயே? அந்த ஏக்கத்தில் அவள் ஏதாவது கிணற்றில் விழுந்து இறந்திருக்க வேண்டும்" என்று சிலரும் "அவளுக்கு ஏதோ கொடிய வியாதி இருந்திருக்க வேண்டும். அதனால்தான் இவ்வளவு பெரிய பெண்ணாகியும் அவளுக்குத் திருமணம் செய்து வைக்காமல் இருந்திருக்கிறீர்? வியாதியின் கொடுமை தாங்காமலும், வெட்கம் காரணமாகவும் அவள்கண் மறைவாகச் சென்று தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும்" என்று சிலருமாக அவரைப் பழித்துப் பேசினர். ஆனால் அத்தைக் கிழவி சரோஜினி, தாங்கள் கடைத்தெரு சென்றதைப் பற்றியோ ஊர்மிளை கேசவதத்தரைப் பார்த்ததைப் பற்றியோ வாயே திறக்கவில்லை.

தன்னிடம் வந்து ஊர்மிளையைப் பற்றிப் பேசுபவர்களிடமெல்லாம் "நான் செய்த பாவம் அவள் எனக்குப் பெண்ணாக வந்து பிறந்தாள். பெண் என்று பிறந்தவுடனேயே அவளைக் கொல்லாமல் விட்டது தான் என் குற்றம். அவளுக்கு எந்த நோயும் இருக்கவில்லை. அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கத்தான் நான் ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். பதினோரு வருஷங்கள் ஒரு குறைவும் இல்லாமல் நன்றாகச் சாப்பிட்டு வளர்ந்த அவள், கொஞ்சம் கூட நன்றியில்லாமல், அவள் திருமணத்தின் மூலம் எனக்கு வரவிருந்த ரொக்கப் பணமான மூவாயிரம் ரூபாய் கிடைக்க வழியில்லாமல் செய்து விட்டு இப்படி ஓடி விட்டாளே! மூவாயிரம் ரூபாய் போய்விட்டதே"! என்று ராமதாசர் புலம்பித் தீர்த்தார்.

அண்டை அயலார்களின் கிண்டல் அதிகமாகப் போன ஒருநாள், ராமதாசர், "கிண்டல் செய்கிறீர்களா கிண்டல்!

படிப்பகம்

www.padippakam.com



நன்றாகச் செய்யுங்கள், இதற்கெல்லாம் கண்டிப்பாக ஒருநாள் நீங்கள் நல்லவிலை கொடுக்க வேண்டியிருக்கும். நான் போலீசில் புகார் செய்கிறேன். என் மகளை யாரோ கடத்திக் கொண்டு போய்விட்டதாக புகார் செய்கிறேன். என் மகளை யார் எங்கு மறைத்து வைத்திருந்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்யும். அதன் பிறகே நான் தூங்குவேன்" என்று சப்தம் போட்டார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த வெளியூர் நபர் ஒருவர் புன்னகையுடன் சென்றார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, காலை நேரத்தில் ராமதாசர் தனது கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபோது தன் முன் நிழலாடுவதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தார். எதிரே, கழுகைப் போன்ற கண்களும், மூக்கும் கொண்ட ஒரு மனிதன் கையில் துப்பாக்கியுடன் தோன்றினான். அவன் தன் செந்நீலத்தாடி அசைய, "ஓய் ராமதாசா! கிழட்டுப் பன்றியே! பிள்ளைகளைத் தின்பவனே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! என் பெயர் ஷேர் அலி. நான் ஆப்ரிதி வகுப்புத் தலைவரது தூதன். எனது தலைவர் எதையும் இரண்டாவது முறை கூறுவது கிடையாது. உனது மகள் இனி உமது மகளல்ல. அவள் உம்மையும் உமது கடவுள்களையும் தலைமுழுகிவிட்டாள். அவளை நபியின் நெறியில் இஸ்லாத்தில் சேர்த்துக் கொண்டுவிட்டோம். அவள் என் மகன் முகமது கானை மணந்துகொள்ளப் போகிறாள். ஆனால் அவள் வயதிற்கு வந்து முழு வளர்ச்சியடைந்த பிறகுதான் கல்யாணம் நடக்கும். அதுவரை அவள் எங்கள் வீட்டுப் பெண்களுடன் வாழ்வாள். ஆப்ரிதி வகுப்பாராகிய நாங்கள் பெண்களையும் வல்லமையுடையவர்களாகவே வளர்த்து வருகிறோம்.

ராமதாசா! உனக்கு எங்கள் மீது கோபம் இருந்தால் உடனே புறப்படு. உன் ஆட்களுடனும், உனது

படிப்பகம்

www.padippakam.com



சொந்தக்காரர்களுடனும் வந்து முடிந்தால் உன் மகளை மீட்டுக்கொள். எங்கள் கோட்டையில் துப்பாக்கி ஏந்திய மனிதர்கள் நூறுபேர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஆட்டு மந்தையைப் போன்ற உங்களை எங்களது பெண்களே கொன்றுபோட்டு விடுவார்கள். தெரிகிறதா! இனியும் அசட்டுத்தனமாக பழிவாங்கவேண்டும் என்றோ, சட்டத்தின் துணையை நாடவேண்டுமென்றோ நீ நினைத்தால் என்ன ஆகும் தெரியுமா?" என்று துப்பாக்கியை ஆட்டியபடி பேசி முடித்தான்.

ராமதாசர் விழித்துப் பார்த்தார். உடனே தன் எதிரில் நின்று கொண்டிருந்த அந்த மனிதன் காலில் சர்வ அங்கமும் தரையில்பட விழுந்து வணங்கியபடியே, "நீங்கள் சொல்வதற்கு அப்படியே உடன்படுகிறேன் பிரபுவே. என் வணக்கத்தைத் தங்கள் எஜமானருக்குத் தெரிவியுங்கள் பிரபுவே. எனக்கு உயிரையும், அமைதியையும் மட்டும் கொடுங்கள், இனி என் மகள் உங்களுடையவளே" என்று நடுங்கிய குரலில் புலம்பினார்.

படிப்பகம்

www.padippakam.com

# 3

***இளம் வயதில் மணம் புரிந்து கொடுத்தாலும் தங்களது பெண்களை வயதிற்கு வருவதற்குள்ளாக மாமனார் வீட்டிற்கு அனுப்பும் பழக்கம் பல மாகாணங்களில் கிடையாது. ஆனால் வங்காளத்தில் அப்படி இல்லை. மாமனார் வீட்டிலிருந்து வரும் அழைப்பை மறுத்து அவர்களது விருப்பத்திற்குப் பெண்ணை அனுப்பாவிட்டால் அவளது கணவனுக்கு வேறு கல்யாணம் செய்து விடுவார்கள். பாலிய விவாகத்தின் கொடுமை வங்காளத்தில் மிக அதிகம்:-***

ஒரு பழைய காலத்திய வங்காள நகரத்தின் மத்தியில் பெண்களுக்கான மருத்துவமனை ஒன்றிருந்தது. அதில் தன்னுடைய தனி அறையில் கடுமையான வேலைகள் காரணமாக களைப்புற்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து ஒய்வெடுத்துக் கொண்டிருந்தாள் அம்மருத்துவமனையின் அறுவை சிகிச்சை டாக்டரான ஜேனட் ஹான்சாக்.

முதல் நாள் நள்ளிரவு வரையும், மீண்டும் இன்று காலைமுதல் அறுவை சிகிச்சைகளும், மகப்பேறு மருத்துவமும் பார்த்ததில் அவள் மிகவும் களைப்படைந்திருந்தாள்.

அவளுக்கு முன்பாக சற்றுமுன்னர் இங்கிலாந்திலிருந்து வந்திருந்த கடிதங்கள் கிடந்தன. அவற்றில் அவளது இளைய சகோதரி எழுதிய கடிதத்தைத் தவிர வேறு எதையும் அவள் பிரித்துப் படிக்க முடியாதவாறு சோர்ந்திருந்தாள். அவள் சகோதரி எழுதியிருந்தாள்

"ஜேனட், உனது மனவலிமை எங்கே போயிற்று? நீ அங்கு பார்க்கும் கொடுமைகளை ஏன் உலகம் முழுவதும் எடுத்துச் சொல்லக்கூடாது? ஒவ்வொரு நாளும் உதவியற்ற

படிப்பகம்

www.padippakam.com



பெண்களின் சகிக்க முடியாத கொடுமைகளை அறிந்தும் அவர்கள் பெண்களா, இல்லையே வயதில் குழந்தைகளல்லவா? அத்தகைய குழந்தை மனைவிகள் குறித்து நீ பேசாமலிருப்பது கோழைத்தனமல்லவா? அன்பான ஜேனட், நீ ஏன் போலீசின் உதவியைக் கேட்கக் கூடாது? இரக்கம் கொண்டாவது தனது ஆட்சியில் நடைபெறும் இக்கொடுமைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தலையிட்டு ஒழிக்காமல் இருப்பது எதனால்"?

"என் அருமைத் தங்கையே! இங்கிலாந்தில் சுகமாக வசிக்கும் என் அன்புத் தங்கையே! உன் தூயமனதிற்கு ஆண்டவன் உன்னை ஆசிர்வதிக்கட்டும்" ஜேனட் தன் மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்.

அவளது ஓய்வையும், தனிமையையும் குலைப்பது போல அவள் முன்னர் அவளது மருத்துவ உதவியாளர் ரூத்நாக்ஸ் வந்து நின்றாள். "உங்களது ஓய்வைக்கெடுப்பது எனக்கு வருத்தமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. ஆனால் தவிர்க்கமுடியவில்லை. ஒரு பெண் வந்திருக்கிறாள். அவள் உங்களைத்தான் பார்க்கவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். தான் பெரிய துன்பத்தில் இருப்பதாகவும், தாமதிக்க நேரமில்லை என்றும் கூறுகிறாள். முன்பு ஒருமுறை நீங்கள் அவளைக் காப்பாற்றியிருப்பதாகவும் இப்போதும் நீங்கள்தான் அவளைக் காப்பாற்ற வேண்டும் என்றும் கூறுகிறாள். பயத்தால் பைத்தியம் பிடித்தவள்போலக் காணப்படுகிறாள். வேறு யாரிடமும் எதுவும் சொல்ல மறுக்கிறாள்" என்று கூறினாள்.

"அவளை கன்சல்டிங் ரூமிற்கு அழைத்து வா" என்று கூறிவிட்டு எழுந்தாள் ஜேனட்.

படிப்பகம்

www.padippakam.com



"ஜேனட், நீங்கள் மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள். இது தினம் தினம் நடைபெறும் விஷயங்கள்தான். நாம் காலின் ஓரத்திலே உள்ள ஈரத்தைத்தான் துடைக்கிறோம். நாம் எவ்வளவு காலம் இப்படி பயனின்றி உழைப்பது? நாம் ஏன் இதனை ஒரேயடியாக ஒழிக்க முயலக்கூடாது? உயரமான இடத்தில் நின்று கொண்டு இப்படிப்பட்ட தீமைகளைப் பற்றி உலகத்திற்கு ஏன் எடுத்துக் கூறக் கூடாது. நாம் ஏன் போலீசின் உதவியை நாடக்கூடாது? ஏன் அரசாங்கம் இதில் தலையிட வேண்டும் என்று நாம் கேட்கக் கூடாது"? என்ற ரூத் நாக்ஸிற்கு ஜேனட் "பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் இங்கு வந்த புதிதில் நானும் இவ்வாறே நினைத்தேன். ஆனால் விஷயத்தின் மறுபுறத்தை நன்கு அறிந்து கொண்டபின் நான் என் சிந்தனையை மாற்றிக் கொண்டேன். கருங்கல் சுவர்களையும், இரும்புவேலிகளையும் எளிதில் தாண்டிவிடலாம். இந்தப் பெண்களின் சிறையைக் கடக்கமுடியாது. பயத்தால், பழக்க வழக்கங்களினால், மூட நம்பிக்கைகளினால், மதத்தால் அந்தச் சிறை கட்டப்பட்டுள்ளது. இப்படி வாழ்ந்தால் வேறு உயர்வுகளை அடையலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் பெருமிதம் அடைகிறார்கள். போலீசாலோ, அரசாலோ இந்தச் சிறையை உடைக்க முடியாது. இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் அவர்களது மதத்தின்பாற்பட்டது. எனவே அவற்றை இவர்கள் மிகவும் உயர்வாகக் கருதுகிறார்கள். அவர்களாக விழிப்படையும் வரையில் நாம் ஓரக்காலில் உள்ள ஈரத்தைத் துடைக்க வேண்டியது தான். நம்மால் முடிந்தது அவர்களது துன்பத்தை ஓரளவு குறைப்பதுதான்" என்றாள்.

"இதில் ஏதாவது பலனுண்டா"?

படிப்பகம்

www.padippakam.com



"பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் கடமையைச் செய்வோம்" என்று கூறிவிட்டு ஜேனட் தன்னைத் தேடி வந்திருக்கும் பெண்ணைப் பார்க்கச் சென்றாள்.

அவளைப் பார்க்க வந்திருந்த பெண்ணை ஜேனட்டிற்கு ஞாபகம் வந்துவிட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் சிக்கலான பிரசவத்திலிருந்து அவளைக் காப்பாற்றி யிருந்தாள். பிரசவத்திற்குப் பிறகு பலவீனம் காரணமாக நீண்ட நாட்கள் மருத்துவமனையிலேயே தங்கியிருந்தாள்.

ஜேனட் தன்னைத் தெரிந்து கொண்டாள் என்பதனை உணர்ந்த அந்தப் பெண் களிப்புற்றாள். என்னைக் காப்பாற்றிய கடவுளின் அருள்பெற்ற இவளது கரங்கள் இவள் பிரசவம் பார்த்துப் பிறந்த என்மகளது துன்பத்தையும் மாற்றி விடும் என்று மகிழ்வெய்தினாள்.

"என்ன கஷ்டம் சொல்" என்று கேட்டுக் கொண்டே அந்தப் பெண்ணின் அருகே இருந்த சிறுமியின் முகமூடியை விலக்கிய ஜேனட், அந்தச் சிறுமியின் முகத்தில் ஒளிர்ந்த களையையும், அறிவுச்சுடரையும் மீறிக் கொண்டு காணப்பட்ட அச்சத்தையும், ஆற்றாமையையும் கண்டு வருந்தியவளாய்,

"உனக்கு என்ன ஆயிற்று"? என்று வினவினாள்.

இதற்குப் பதிலாக அந்தத் தாயே பேசினாள்.

"இவளது சிறிய உருவமே இவளுக்கு துன்பமாய் அமைந்துவிட்டது. இவள் இன்னும் வயதிற்கு வரவில்லை. ஆனால் இவள் புருஷன் இவளை அழைக்கிறான். அவனால் தாமதிக்க முடியாதாம். நாளையே இவளுடன் சேரவேண்டுமாம். பக்கத்திலுள்ள பெரிய வீட்டில் வசிக்கும்,

படிப்பகம்

www.padippakam.com



வட்டித் தொழில் நடத்துபவன் தான் இவளது புருஷன். பருத்த உடல் கொண்ட முரடன். யார் சொல்வதையும் கேட்கமாட்டான். அவன் இவ்வளவு சீக்கிரம் இவளைப் படுக்கைக்கு அழைப்பான் என்று நாங்கள் நினைக்கவில்லை. நாங்கள் இதற்கு இணங்கவில்லையென்றால் ஊரார் எங்களைக் கேலி பேசும் விதமாக அவன் இவளை எங்கள் வீட்டிற்கு அனுப்பி விடுவான். நாங்களும் முயன்று பார்த்தோம். எனது மாமியார் தன் முழு அறிவையும் பயன்படுத்தி முயற்சி செய்தார். நாட்டு மருத்துவச்சியும், என்னென்னவோ செய்து பார்த்தாள். ரத்தம் தான் பெருகி இவள் பலவீனமானாளே தவிர இவள் வயதிற்கு வரவில்லை. இவள் மாமியாரிடம் மிகவும் கெஞ்சி அனுமதி பெற்று இவளை இங்கு அழைத்து வந்திருக்கிறேன். டாக்டரம்மா, எப்படியாவது இவள் வயதிற்கு வருமாறு ஏதாவது செய்யுங்கள். இவளது கணவன் இவளைத் தள்ளிவைத்து விடாமல் காப்பாற்றுங்கள்.”

அவள் கூறியதைக் கேட்டுக் கொண்ட ஜேனட் அவளிடம், “அம்மா எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. உங்களது கணவர் மிகவும் பிரபலமானவர். பலமுறை நான் அவரை மிக கௌரவமான இடங்களில் பார்த்திருக்கிறேன். சிறிது காலத்திற்கு முன்பு அவர் சிறுபெண்களுக்கு மணம் புரிந்து வைத்து விடும் கொடுமையை அழித்துவிடவேண்டும் என்று பேசிய விபரத்தை பத்திரிக்கை வாயிலாகப் படித்துத் தெரிந்து கொண்டேன். உங்களுக்கும் உங்களது அனுபவத்தினாலேயே இதன் தீமைகள் நன்கு தெரிந்திருக்கும். இந்தப் பெண்ணுக்கு இன்னும் எந்த அவயமும் போதிய வளர்ச்சியடையவில்லை. அதற்குள் இவளது கணவன் இவளிடம் சேர எப்படி ஒப்புக் கொண்டீர்கள்? அதுமட்டுமல்லாமல் இவளைப் பெரியவளாக்குவதற்காக அறுத்துக் கொடுமை

படிப்பகம்

www.padippakam.com



செய்திருக்கிறீர்கள். நானும் அதையே செய்து அவளை ஒழித்துவிட வேண்டும் என்று கூறுகிறீர்களா? எதற்காக? உங்கள் நெஞ்சில் கொஞ்சம்கூட இரக்கம் இல்லையா? உங்கள் பெண்ணின்மீது உங்களுக்குக் கொஞ்சம்கூட பாசமில்லையா"? என்றாள்.

"நீங்கள் எங்கள் நிலையைப் புரிந்துகொள்ளவில்லை. நான் இவளது நன்மைக்காகத்தான் இப்படிச் செய்ய முன் வந்தேன். இவள் கணவனால் கை விடப்பட்டால் இவள் நிலைமை என்ன ஆவது? கணவனால் கைவிடப்பட்ட மனைவியைக் கடவுளும் மன்னிக்கமாட்டாரே! எனது கணவன் மேனாட்டினரிடமிருந்து படித்துக்கொண்டு பாலிய விவாகத்தை எதிர்த்து சமயம் கிடைக்கும்போதெல்லாம் மேடைகளில் பேசுகிறார். ஆனால் அவருக்கு என்ன தெரியும்? குல வழக்கங்களைக் கைவிட முடியுமா? விதியை வெல்லமுடியுமா? எங்களால் முடியாது. ஆகவே உதவிசெய்யுங்கள்" என்று அந்தத் தாய் கூறியதைத் கேட்ட ஜேனட் மீண்டும் மீண்டும் அரைமணி நேரத்திற்குமேல் எடுத்துக் கூறி தன்னால் அது முடியாது என்றுகூறி அவர்களை அனுப்பிவைத்தாள்.

இது நடந்து இர்ண்டு நாட்களாயின. அன்று நள்ளிரவில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஜேனட் ஒரு சிறுமியின் வீறிட்டலறிய அழுகுரலைக் கேட்டு சட்டென விழித்துக் கொண்டாள். சப்தம் தெருப்பக்கத்திலிருந்து வந்தது. படுக்கையை விட்டெழுந்த ஜேனட் மருத்துவப்பையை எடுத்துக் கொண்டு ரூத் நாக்ஸையும் அழைத்துக் கொண்டு தெருவிலிறங்கி, ஆங்காங்கே கூடியிருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு நடந்தனர். "நாங்கள் டாக்டர்கள், எங்களுக்கு வழி விடுங்கள்" என்று கூறியவாறு கூட்டத்தை விலக்கிக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com



சென்ற அவர்கள் ஒரு கும்பலின் நடுவில் ஒரு சிறுமி வேதனையுடன் துடித்துக் கொண்டு கிடந்ததைக் கண்டார்கள்.

"இந்தச் சிறுமியை உடனே எங்களது மருத்துவ மனைக்குத் தூக்கி வாருங்கள். அங்கு இவளுக்கு சிகிச்சையளிக்கலாம்" என்று இவர்கள் கூறியதும் அந்தக் கூட்டத்தில் முணுமுணுப்பு ஏற்பட்டது. அங்கிருந்து இரண்டு பேர் அந்தச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு அருகிலிருந்து வீட்டிற்குள் புகுந்து விட்டனர். ஜேனட்டும், ரூத் நாக்ஸும் அவர்களைப் பின்தொடர்ந்து அந்த வீட்டினுள் புகுந்தனர். அந்தச் சிறுமி வலி தாளாது அலறிக்கொண்டே யிருந்தாள். அந்த மனிதர்கள் அவளை அங்கு தரையில் கிடத்தியிருந்தனர்.

ஜேனட் அந்தச் சிறுமியின் அருகிலமர்ந்து அவளைப் பரிசோதித்தாள். அந்தப் பெண்ணுக்கு பத்து வயதிருக்கலாம். மிகவும் மெலிந்திருந்தாள். அவளைப் பரிசோதித்த ஜேனட் "கழுத்து எலும்பு முறிந்துவிட்டது. இனி செய்வதற்கு ஒன்றுமில்லை. எதற்கும் ஒரு ஊசியைப் போடலாம். விரைவில் எல்லாம் முடிந்துவிடும்" என்று கூறிவிட்டு ஊசி மருந்தைச் செலுத்தினாள்.

அங்கிருந்தவர்களில் தனக்குத் தெரிந்த ஒரு மனிதனும் இருப்பதைக் கண்ட ஜேனட், "அரிபாபு, என்ன நடந்தது? இது உன் வீடாயிற்றே?" என்று விசாரித்தாள்.

"இந்தப் பெண் அடுத்த வீட்டுச் செட்டியாரது புது மனைவி. நேற்றுதான் அவர் இவளை தனது வீட்டிற்கு அழைத்து வந்தார். அவர் விரும்பியபடி இவளிடம் அவருக்கு சந்தோஷம் கிடைத்திருக்காது. அதனால் அவர் கோபப்பட்டிருக்கலாம். என்றாலும் மாடி ஜன்னலிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com



இவளைத் தூக்கி வெளியே வீசியிருக்கவேண்டாம். அது புத்திசாலித்தனமல்ல” என்று பதில் கூறிய அரிபாபுவிடம் ஆத்திரத்துடன் ரூத் நாக்ஸ் “புத்திசாலித்தனமில்லையா, எது?” என்று கேட்டாள்.

“எது என்றால் என்ன சொல்வது? இங்கு ஏற்பட்ட களேபாரத்தில் போலீஸ் வந்துவிடுமல்லவா” என்ற அரிபாபுவிடம் ஜேனட் “நீங்கள் ஏன் இவளை நான் சொல்லியபடி மருத்துவமனைக்குத் தூக்கிவராமல் அவசரமாக இந்த வீட்டிற்குள் தூக்கிக் கொண்டு ஓடி வந்தீர்கள்?” என்று கேட்டாள்.

“இதுகூடவா தெரியவில்லை? அங்கும் போலீசார் வந்துவிடுவார்களே”!

“போலீசாருக்கு ஏன் தெரியக் கூடாது” என்று ரூத் நாக்ஸ் சிடுசிடுத்தாள்.

இதைக் கேட்டதும் கூட்டத்தில் பரபரப்பும் முணுமுணுப்பும் ஏற்பட்டது. அரிபாபு அவர்களை அமைதிப்படுத்தி “சகோதரர்களே, இந்த டாக்டர் எனக்கு மிகவும் வேண்டியவர். இந்தியாவிற்குப் புதியவர். நமக்குக் கெடுதலாக ஒன்றையும் நினைக்கவில்லை. நமது பழக்கவழக்கங்கள் எதுவும் இவருக்குத் தெரியாது” என்றுகூறி விட்டு ஜேனட்டிடம் திரும்பி, “அம்மா, நாங்கள் எங்களது வீட்டு ரகசியங்களை வெளியே வரவிடுவதில்லை. மனைவி என்பவள் எமது உடைமைப் பொருள். அவளை நாங்கள் எப்படி நடத்தியபோதிலும் யாரும் அதில் தலையிடுவதை நாங்கள் விரும்புவதில்லை. நண்பனானாலும் சரி, பகைவனானாலும் சரி, அவன் எங்கள் உரிமையில் தலையிட

படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் அனுமதிப்பதில்லை. போலீசாருக்கு எங்களது அந்தரங்கங்கள் தெரிவதில் எமக்கு விருப்பமில்லை. நாங்கள் மிகவும் பொறுமைசாலிகள்தான். ஆனால் நாங்கள் உயர்வாக நினைக்கும் விஷயங்களுக்கு கேடு வந்தால் இங்கு ரத்தஆறு ஓடும்" என்று கூறிக்கொண்டிருந்த போதே கீழே கிடந்த அந்தச் சிறுமியிடமிருந்து ஒரு சன்னமான ஒலி வந்தது. அத்துடன் அவளது உயிரும் பிரிந்தது. மருத்துவர்கள் இருவரும் அந்தச் சிறுமியின் முகத்தைத் துணியால் மூடிவிட்டு வெளியே நடக்கத் தொடங்கினர். வழியில் ஒரு பெண்கள் கூட்டமே அவர்கள் கால்களில் விழுந்து வணங்கியது. அவர்களில் ஒருத்தி கூறினாள், "அம்மா, இதைப் பற்றி போலீசில் நீங்கள் சொல்லி விடவேண்டாம். அப்படி நீங்கள் சொல்லிவிட்டால் எங்கள் கணவன்மார்கள் உங்களை நாங்கள் வந்து பார்த்து சிகிச்சை செய்து கொள்வதைத் தடுத்து விடுவார்கள். எங்களுக்கு என்ன உடம்புக்கு வந்தாலும் உங்களது உதவியைப் பெறமுடியாமல் போய்விடும். இறந்து போன பெண்ணின் கணவனான அந்தச் செட்டி காமவெறி பிடித்தவன். நாள் முழுவதும் காம வெறியைத் தூண்டக்கூடிய மது வகைகளைக் குடித்துக் கொண்டிருந்தான். நல்ல வேளையாக அந்தப் பெண்ணும் இறந்து விட்டாள். இதை நீங்கள் போலீசாரிடம் தெரிவிக்கவேண்டாம். நீங்கள் வணங்கும் தெய்வத்தின்மீது ஆணை."

மருத்துவமனையை அடைந்ததும் ஜேனட், ரூத் நாக்ஸிடம் "இரண்டு நாட்களுக்கு முன்னர் நாம் ஏன் இதையெல்லாம் உயரமான இடத்திலிருந்து கொண்டு உலகிற்குத் தெரிவிக்கக் கூடாது? என்று கேட்டாயே, நினைவிருக்கிறதா? நாம் ஏன் அரசாங்கத்தின் உதவியை நாடக்கூடாது என்று

படிப்பகம்

www.padippakam.com



கேட்டாயே நினைவிருக்கிறதா? இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உனது கருத்து என்ன? இங்குள்ள் பெண்களின் நலத்தைக் கருதியே நாம் மௌனமாக இருக்கவேண்டியுள்ளது. எனக்கு இது பழகி விட்டது. ஒருநாள் கடவுளாகப் பார்த்து இதற்கு ஒருமுடிவு ஏற்படுத்தலாம். அதுவ்ரை நாம் நம் கடமையைச் செய்து கொண்டு போகவேண்டியதுதான்"! என்று கூறினாள்.

'ஜேனட் இன்றும் தன் கடமையைச் செய்து கொண்டுதான் இருக்கிறாள்.

## குறிப்புகள்

*பாலிய விவாகத்தைப் பற்றிச் சிறிது நோக்குவாம்... ....அது நமது குடும்பத்தினாலாவது, தாயினாலாவது, பிறர் எவராலாவது ஏற்படும் குற்றமல்ல. அது உமது குற்றம். அது என் குற்றம். நாம் எதனைச் செய்ய வேண்டாம் என்று கருதுகின்றோமோ, அதனைப் பிறர் நம்மிடம் கட்டாயப்படுத்த முடியாது. இந்தியா முழுவதிலும் பூப்படையும் முன்னதாக என் பெண்ணை நான் மனம் புரிந்து அளிக்கமாட்டேன் என்று கூறும் ஆண்களும், மகளிரும் உளரேல், இது நடைபெறாது என்பது திண்ணம். நீங்கள் ஏன் அஞ்சுகின்றீர்கள்: நீங்கள் பழக்க வழக்கங்களுக்கு அஞ்சுகின்றீர்கள்: நீங்கள் உங்கள் மகளுக்காக அஞ்சுகின்றீர்கள்: மகனுக்காக அஞ்சுகின்றீர்கள். நீங்கள் அச்சத்தின் உருவமே.... மனிதர்கள் தங்கள் மிருக வேட்கைக்கு இலக்காம் சிறிய குழந்தைப் பெண்களின் துன்பத்தினைப் பொருட்படுத்துவது இல்லை; அவர்கட்குரிய தமது கடனையும் செலுத்துவதில்லை - கிருஷ்ணமூர்த்தி; அடையாறு சொற்பெருக்கு; டிசம்பர் 1925.*

www.padippakam.com



"நான் அடிக்கடி பெண்களை, அவர்கள் முழு வளச்சியை அடையும் முன்னரேயே தாய்களாகச் செய்யும் கொடுமையைப்பற்றி மேடைகளில் எடுத்துரைத்திருக்கின்றேன்; இதனால் மனித சமூத்தின் உயிர் நிலைக்கே விளையக்கூடிய தீமையைப் பற்றியும் கூறியிருக்கிறேன். மனிதர்கள் இதனைத் தவறென்று அறிவார்கள்; தவறென்று பொதுவாழ்வில் கூறியும் வருகின்றார்கள். ஆனால் இவர்கள் பிறரை ஏன் இவ்விதமாகச் செய்கின்றீர்கள் என்று கேட்டுக் கொண்டே, தங்கள் பெண்களையே இளமணத்திற் குட்படுத்துகின்றார்கள்; ஏனெனில் பிறர் தூற்றுவார் என்று அஞ்சுவதினால்" டாக்டர் பெசண்டம்மை

பொது மேடைகளில் பல சமூகச் சீர்திருத்த உழைப்பினர் ஊக்கத்துடன் இதனைக் கண்டிக்கிறார்கள். ஆனால் தங்கள் பெண்களையே அவ்விதமாக மணம் செய்து கொடுப்பாரேல், குற்றத்தை மனைவி மீதிலும், தாய்மீதிலும், பாட்டி மீதிலும் சுமத்தி விடுகின்றார்கள். ஆதலின் தங்கைகள், தமக்கைகள், மனைவிகள், தாய்கள், பாட்டிகள், ஆயநாமே இதைப்பற்றி ஊன்றிச் சிந்தித்து, ஆண்மக்கள் நம்மீது குற்றத்தைச் சுமத்தாமல் இருக்கும்படியான வழிகளைக் கண்டுபிடித்தல் வேண்டும். - திருவாங்கூர் மகாராணி, அகில இந்தியப் பெண்கள் மகா நாட்டில் ஆற்றிய தலைமைப் பேருரை; டிசம்பர் 1928.

இந்து மதம் என்பது கடவுள் நெறி; சில இந்துக்களல்லாதோர் கூறுவதுபோல் இது சமூக நெறியன்று. இதிலுள்ள சில விஷயங்கள் அபிமானமுற்ற ஆராய்ச்சியாளர் பலர்

படிப்பகம்

www.padippakam.com



மனதைக் கவர்ந்துள்ளன. ஆனால் இந்திய மக்கட்கு இந்து மதம் தாழ்வையும், தாழ்வுபடுத்துவதற்குரிய உரிமையுமே கற்பித்துள்ளது. - பகத்ராம். இந்து மதம் என்பது என்ன? இந்தியன் விட்னசு; இலக்குமணபுரி, டிசம்பர் 1928.

( பகத்ராம் என்பவர் பிரோசப்பூரில் பிறந்தவர். இவர் ஹிந்து மதத்தின் பெயரால் பெண்கள், குழந்தைகள், தீண்டப்படாதார், மிருகங்கள் முதலிய சீவர்கள் அடையும் கொடுமைகளை நன்கெடுத்துரைக்கும் சீர்திருத்த உழைப்பிற்கு முன்னோடிகளுள் முதன்மை பெற்றவர். )

படிப்பகம்

www.padippakam.com

# 4

*தீண்டாமை இந்து மதத்தைக் கெடுக்கிறது. சிறிதளவு விஷம் பாலில் கலந்தது போல - மகாத்மா காந்தி*

*யுவ இந்தியா, அக்டோபர் 20, 1927 பக்கம் 355.*

ஆப்கானிஸ்தானத்தின் எல்லைப் புறங்களில் போரில் ஈடுபட்டிருந்த போர் வீரர்கள் தங்களது தலைவரது விடுதியில் அமர்ந்து காபி அருந்திக் கொண்டு, பன்னூ, கோகாத், கைபர், முதலிய இடங்களில் தங்கட்கு ஏற்பட்ட அபாயங்கள், துன்பங்கள், வீரச்செயல்கள் மற்றும் வேடிக்கையான சம்பவங்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

"உன் விருப்பம்போல வீரர்களைத்தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றால் நீ எந்த இந்திய வீரர் படைக்குத் தலைவனாக இருக்க விரும்புவாய்"? என்று விருந்தளித்தவர் ஒருவரைக் கேட்டார்.

"இணையற்ற கூர்க்கா படைக்கே நான் தலைமை வகிக்க விரும்புவேன்" என்றார் ஒருவர்.

"கூர்க்கா வகுப்பினர் சண்டையில் ஒப்பற்றவர்கள்தான் - என்றாலும் சிலசில வேலைகளுக்குப் பட்டாணியர்களும் தேவை" என்றார் ஒருவர்.

"நான் வலிமையும், ஒழுக்கமும் கொண்ட சீக்கியர்களையே விரும்புவேன். சீக்கியர்கள் தங்களது

படிப்பகம்

www.padippakam.com



தலைமையின் கீழ் சிறப்பாகப் பணிபுரிவார்கள்” என்றார் மற்றொருவர்.

“நீங்களெல்லோரும் பழைய நினைவுகளிலேயே இருக்கிறீர்கள் நான் மராட்டிய வீரர்களையே தேர்ந்தெடுப்பேன்.”

இப்படியாக ஒவ்வொருவரும் தங்களது எண்ணத்தை வெளிப்படுத்திப் பேசினர்.

“நீங்கள் அனைவருமே கூறியது உண்மையே! ஆனால் நீங்களெல்லோரும் போர் புரியும் படைவீரர்களைப் பற்றியே பேசினீர்கள். ஆனால் ஒருவர்கூட போர்த்தொழிலில் ஈடுபடாத தோட்டிகளைப் பற்றி சிறிதுகூடப் பேசவில்லையே” என்றார் அவர்களது கர்னல்.

அனைவரும் சற்றே திகைத்தனர். அவர்கள் அனைவருமே போரிடுவதில் வல்லவர்களைப் பற்றியே குறிப்பிட்டனர். ஆனால் கர்னலோ புன்னகையுடன் அவர்களைப் பார்த்து, “நாம் இதுவரை நமது வீரச் செயல்களைப் பற்றியே பேசிப்பொழுதைக் கழித்துவிட்டோம். நாம் அனைவருமே நமது படையணியைச் சேர்ந்த போரிடும் வீரர்களைத் தவிர, அத்தியாவசியமான பிற தொழில்களைச் செய்துவரும் வேறு சிலரைப் பற்றிச் சிறிதும் கவலைப் படுவதே இல்லை. முதலில் நானும் அப்படித்தான் இருந்தேன். ஆனால் புகழ்பெறாமல் மறைந்து கிடக்கும் அவர்களது வீரச் செயல்களை அறிந்தபோது என் கண்கள் திறந்தன. நான் ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறுகிறேன். இது உங்களுக்கு சலிப்பாகத் தோன்றலாம். முழுவதும் கேட்ட பிறகு உங்களுக்கு அவ்வாறு தோன்றாது.

படிப்பகம்

www.padippakam.com



இது நாம் மெசபடோமியோ நாட்டில் கூட் என்ற நகரத்தில் நடந்த போரில் நாம் தோல்வியுற்றபோது நடந்தது. அப்போது நான் படைத்தலைவன். எனது படையில் எனது நெருங்கிய பழைய நண்பரான கார்டன் என்பவர் ராணுவ மருத்துவராகப் பணியாற்றி வந்தார். ஐ.எம்.எஸ். பிரிவைச் சேர்ந்த அவர் மிகவும் கருணையுள்ளம் கொண்ட நல்லவர். இந்தியாவின் பல பகுதிகளையும், மொழிகளையும் நன்கறிந்தவர்.

இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் பழக்க வழக்கங்கள் அவர்களின் மத சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டது. எந்தவொரு இந்துவும் தனது கழிவைத் தானே அகற்றுவது கிடையாது. அதை அகற்றுவதற்காக ஒரு பிரிவினர் தீண்டாதார்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள்தான் மனிதக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடுவர். கந்தையுடையுடன், பிறர் கேலிசெய்யும் படியாக நாற்றமெடுத்தவர்களாக உள்ள அவர்கள் படைப் பிரிவுடன் ஆயுத வண்டிகளுக்கு முன்னதாகச் செல்வார்கள். இவர்களை வீரர்கள் திட்டிக்கொண்டே இருப்பார்கள்.

கூட் நகரத்தில் தோல்வியுற்றவுடன் சலிப்படைந்து கடற்கரை ஓரமாக முகாமிட்டிருந்தோம். கடுமையான வெப்பம், வாட்டிக்கொண்டிருந்தது. காற்று தீச்சுவாலை போல வீசியது. வெப்பம் 120 டிகிரியை எட்டியது. உணவுப் பொருள்களும் குறைந்து கொண்டே வந்தன. அத்தோடு பல்வேறு நோய்களும் எம்மைப் பீடித்தது. ராணுவ டாக்டர் கார்டனுக்கு கடுமையான வேலை இருந்து கொண்டிருந்தது. ஒருநாள் கார்டன் என்னைத் தேடி வந்தார். "கர்னல் நான் உங்களிடம் தவிர்க்க முடியாமல் நமது தோட்டிகளைப்பற்றிப் பேச வந்திருக்கிறேன்" என்றார்.

படிப்பகம்

www.padippakam.com



நான் வியப்படைந்தேன். பொறுமை நிறைந்த தோட்டிகளால் இதுவரை எந்தப் பிரச்சினையும் வந்ததில்லை. கார்டன் தொடர்ந்தார். "உங்களுக்கு நம்முடைய தோட்டிகளின் தலைவனைத் தெரியுமல்லவா? நல்ல உயரமானவன். பார்ப்பதற்கு ஒரு மாதிரித் தோற்றமளிப்பான்"!

எனக்கு அவனை நன்றாக நினைவிருந்தது. அழுக்கடைந்த கந்தை ஆடை உடுத்தி, தலையில் முண்டாசுடன் காணப்படுவான். இவன் தோட்டிகளின் தலைவனாகவும், ராணுவ உயர் அதிகாரிகளின் கழிப்பறைகளைச் சுத்தம் செய்பவனாகவும் இருந்தான்.

கர்னல் தொடர்ந்தார். "உங்களுக்கு அவனை நினைவிருக்கக்கூடும். அவன் தன்வேலையை மிகவும் நேர்த்தியாகச் செய்து வந்தான். அவன் ஒரு தோட்டியாக மட்டுமல்லாமல் போர் வீரனாகவும் செயல்பட்டிருக்கிறான் என்று சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். என்றாலும் அவனது செயல்களை நான் கூறுகிறேன் கேளுங்கள்.

சண்டை தொடங்கும் நேரத்தில் அவன் போர்க்கருவிகள் அடங்கிய வண்டியினருகில் கோவேறு கழுதைகளுடன் தான் இருப்பான். ஆனால் சண்டை நடக்கும்போது மெல்ல மெல்ல முன்னேறி, யாராவது இறந்து கிடக்கும் ஒரு வீரனின் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சுடத் தொடங்கி விடுவான். போர் ஓய்ந்தவுடன் தன் இடத்திற்குத் திரும்பி ஒன்றுமே அறியாதவன் போல இருந்துவிடுவான். எனக்கு இதுவரை இந்த விபரம் தெரியாமலிருந்தது. ஒருமுறை போர் ஓய்வு ஏற்பட்டவுடன் சடலங்களை அப்புறப்படுத்தும் போது நான் அங்கிருந்தேன். அங்கு இரு கண்களுக்கும் மத்தியில் குண்டு பாய்ந்த நிலையில் கையில் துப்பாக்கியைப்

www.padippakam.com



பிடித்தபடியே அவன் பிணமாகக் கிடந்தான். நான் நமது சோல்ஜர்களைக் கேட்டபோது, அவர்கள் அவனைப் பற்றிய விபரத்தைக் கூறினார்கள். ஆரம்பத்திலிருந்தே அவன் இவ்வாறு செயல்பட்டு வந்துள்ளான். அவன் இதுவரை பத்து சண்டைகளில் பங்கேற்றுள்ளானாம்.

பிறகு நான் இதை மறந்துவிட்டேன். ஒருநாள் போர்வீரர்கள் தங்கியிருக்கும் அறைகளைப் பார்வையிடச் சென்றேன். அங்கு ஒரு தோட்டி, அவனுக்கு 16 வயதுதான் இருக்கும். அவன் மண்டை பிளந்து விடும்படியான கடுமையான வெயிலில் உட்கார்ந்து கொண்டு பாடியவாறே தன் வெறும் கைகளினாலேயே மலத்தை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான். தோட்டிகள் மேலுலகம் சென்றாலும் நாறுவார்கள் என்பதில் ஆச்சர்யம் என்ன இருக்கிறது!

என் மனம் மிகவும் வேதனையுற்றது. மனிதன் தன் சகோதரனையே எவ்வளவு கேவலமாக, மிருகத்தை விடக் கீழாக மதிக்கிறான் என்பதனை எண்ணினேன். மதத்தின் பெயரால் எவ்வளவு கொடுமையாக நடத்தப்படுகிறார்கள். இவ்வளவு இழிவான தொழிலைச் செய்யும்போதுகூட பாடக்கூடிய மனநிலை இவர்களுக்கு எப்படி ஏற்பட்டது? இவர்களுக்கு ஒரு வழி கண்டு பிடிக்க விரும்பினேன். கண்டும் பிடித்துவிட்டேன். நான் ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறேன். இதனால் கையினால் மலத்தைத் தொடாமலேயே அப்புறப்படுத்திவிடலாம். மண்ணெண்ணெய் டின்னை இரண்டாக வெட்டி, அதில் ஒரு கைப்பிடியைப் பொருத்திவிட்டால் கைப்பிடியைப் பிடித்துத் தூக்கி கழிவை அகற்றிவிடலாம். செலவும் அதிகம் இல்லை. அதுமட்டுமல்ல, தோட்டிகளுக்கு நல்ல உடுப்புகளைத் தயார் செய்து

படிப்பகம்

www.padippakam.com



தரவேண்டும். அவர்களது அழுக்குப்படிந்த கந்தல் உடைகளை அகற்றிவிட்டு இவற்றை அவர்கள் அணிந்து கொள்ளவேண்டும். அவர்கள் தினந்தோறும் குளித்து நாற்றம் நீங்கியவர்களாக வேண்டும். பன்றிக் கூட்டம்போல் அல்லாமல் காலாட்படைகள் போலவே இவர்களும் சீர்ப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இறந்துபோன அந்தக் கிழத் தோட்டியின் மேலுள்ள மரியாதை காரணமாக இவர்களை நான் மனிதர்களாக்க விரும்புகிறேன்."

கார்டனின் உண்மையான அக்கறையை நான் மனதார வரவேற்றாலும் அவரது முயற்சி வெற்றியளிக்குமா என்ற சந்தேகம் எனக்கிருந்தது. என்றாலும் கார்டன் மனம் வருந்தக் கூடும் என்பதால் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவரது திட்டங்களுக்கு நான் ஒப்புதல் அளித்தேன்.

கார்டனும் விரைந்து செயல்பட்டு தனது திட்டங்களை நிறைவேற்றினார். கழிவறையில் பொருத்த மண்ணெண்ணெய் டின்களைத் தயார் செய்ததுடன் தோட்டிகளுக்கான சீருடைகளையும் தயார் செய்தளித்ததுடன், அவர்களுக்கு புதிதாக ஒரு தலைவனையும் நியமித்துவிட்டார்.

அவன் நல்ல திடகாத்திரமானவன். ஐந்தேமுக்காலடி உயரமிருந்த அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். கருத்தடர்ந்த மீசையுடன் சதா புன்னகை செய்த வண்ணம் இருந்த அவனது பெயர் குப்பு என்பதாகும். கார்டன் அவனுக்குக் கால் பந்தாட்டம் கற்றுக் கொடுக்கப் போவதாகக் கூறினார். அவனுடன் ஏனைய தோட்டிகளும் கால்பந்தாட்டம் விளையாடத் தொடங்கினார்கள்.

www.padippakam.com



வெயிற்காலம் முடிந்தவுடன் மீண்டும் கூட் நகரத்தின் மீது படையெடுத்துச் சென்றோம். பாக்தாத் நகரம் வரை பகைவர்களை விரட்டிச் சென்றோம். மாலை ஐந்து மணியிலிருந்து மறுநாள் காலை ஒன்பது மணிவரை முதுகில் சுமையுடன் நடந்து கொண்டேயிருந்தோம். காலாட் படைகளுக்குப் பின்னே ஆயுதங்களைச் சுமந்து வரும் கோவேறு கழுதைகள், வண்டிகள் என்று ஏழுமைல் நீளத்திற்கு எங்களது படை அமைப்பு இருந்தது. காலாட் படைகளுக்குப் பின்னே சீருடை அணிந்த தோட்டிகளின் அணி சோல்ஜர்களைப் போலவே நடைபோட்டு வந்தது. அவர்களது தலைவனான குப்பு ஒரு சார்ஜண்ட் மேஜரைப் போலவே கைவீசி நடந்து வந்தான். புதிய சீருடையில் அவர்கள் கவர்ச்சியாக இருந்தனர். கார்டன் அவர்கள் மனதில் சுயமரியாதையையும், வீரத்தையும் புகுத்திவிட்டார்.

கடைசியாக நாங்கள் துருக்கியர்களை நெருங்கி விட்டோம். மீண்டும் சண்டை தொடங்கியது.

சண்டை தொடங்கியதிலிருந்தே குப்பு துருக்கியர்களின் துப்பாக்கிகளை சேகரித்துக் கொண்டு வந்தான். அவைகளை உடைகள் வைக்கும் இடத்தில் யாருமறியாமல் வைத்து வந்தான். என்றாவது ஒரு நாள் அவை தேவைப்படும் என்பது அவனது உறுதியான நம்பிக்கை. குப்பு தனது தோளிலும் ஒரு துப்பாக்கியைச் சுமந்து கொண்டு திரியத் தொடங்கினான். படைவீரர்களைத் தவிர வேறு யாரும் ஆயுதங்களைத் தொடக் கூடாது என்று சட்டம் இருந்தாலும், அப்போதைய போர் நெருக்கடியில் அனைத்துச் சட்டங்களும் கைவிடப்பட்டன.

ஒருநாள் நாங்கள் டைக்ரீஸ் நதியின் வளைவில் ஒரு புறமிருந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தோம். சண்டை

படிப்பகம்

www.padippakam.com



ஓய்ந்து உணவருந்திக் கொண்டிருந்த நேரத்தில் டாக்டர் கார்டன் தன்னுடைய செல்லப்பிள்ளைகளான தோட்டிகளின் தலைவனான குப்புவைப் பற்றிப் பேசத் தொடங்கினார். அவர் கூறினார், நேற்றிரவு போரில் காயம்பட்டவர்களைத் தேடிக்கொண்டு போர் நடந்த இடத்தில் சுற்றிக் கொண்டிருந்தேன். நமது படையணியின் ஒரு காப்டன் தரையில் இறந்து கிடந்த இடத்தின் அருகே குப்பு தரையில் அமர்ந்துகொண்டு துப்பாக்கியால் ஆற்றின் அக்கரையில் இருந்த கட்டிடத்தின் ஜன்னலைப் பார்த்து சுட்டுக் கொண்டிருந்தான். தான் ஒரு தோட்டி என்பதையே அவன் மறந்துவிட்டிருந்தான். மறைந்து நின்று கொண்டு சுடவேண்டும் என்ற நினைவே அவனுக்கு இல்லை. எதிரிகள் சுட்டகுண்டுகள் அவனுக்கு சற்று தூரத்தில் வெடித்து அவன்மீது மண்ணையும் சேற்றையும் வாரி அடித்துக் கொண்டிருந்தது. நான் நெஞ்சால் ஊர்ந்து அவனருகில் சென்று "முட்டாளே நிறுத்து!" என்று கூவினேன். ஆனால் அவன் அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் சுட்டுக் கொண்டேயிருந்தான். நான் தடுத்தபோது "எதிரே எதிரி இருக்கிறான். நான் அவனைச் சுட்டுத்தள்ள வேண்டும்" என்று கூறினான். நீங்களெல்லாம் இதனை கட்டுப்பாட்டை மீறிய செயல் என்று கருதலாம். ஆனால் நான் ஒரு புழு மனிதனாக உருமாற்றம் கொள்கிறது என்றே கருதினேன்.

டைக்ரீஸ் நதிக்கரையில் ஒரு மாதம் சண்டை நடந்தது. எங்கள் பக்கமும் கடுமையான ஆள்சேதம் ஏற்பட்டிருந்தது. எமது படையில் இருந்த ஒவ்வொருவரது உதவியும் பெரிதும் தேவைப்பட்டது. துருக்கியர்கள் தோல்வியுற்று ஓடிவிட்டார்கள் என்று நாங்கள் கருதிய நேரத்தில் வீரமிக்க அவர்கள் எங்களை மீண்டும் இருபக்கங்களிலும் வளைத்துக் கொண்டு தாக்கத் தொடங்கினர். அவர்களது பீரங்கிகள் எங்களுக்கு மிகவும்

படிப்பகம்

www.padippakam.com



சேதம் விளைவித்துக் கொண்டு வந்தது. எங்களிடம் குண்டுகள் தீர்ந்துவிடும் நிலை. நாங்கள் திகைத்து அஞ்சி நின்ற சமயத்தில் எங்கள் முன் குண்டுகள் நிறைந்த பல பெட்டிகள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. யார் இவற்றைக் கொண்டு வருவது என்று பார்த்தால் குப்பு. அவன் இதுவரை எதிரிகளிடமிருந்து சேகரித்திருந்த குண்டுகள் அடங்கிய பெட்டிகளை எங்கள்முன் கொண்டு குவித்தான்.

டாக்டர் கார்டன் "குப்பு, நீயா"! என்றார் வியப்புடன்.

அவன் "ஆம் துரையே நான்தான்" என்றான். அவனுடைய முகத்தில் ஒரு கம்பீரம் காணப்பட்டது.

"குப்பு, நீ ஒரு சோல்ஜர் அல்லவே, எங்கே போகிறாய்"!

"துரையே, நான் இனி தோட்டியல்ல, இனி எப்போதுமே நான் தோட்டியல்ல! நான் இனிமேல் ஒரு போர்வீரன்" என்று கூறிக்கொண்டே தன் ஆயுதத்துடன் அவன் முன்னேறிப் போனான்.

ஒருவிதமாகக் கடைசியில் நாங்கள் கூட் நகரத்தைக் கைப்பற்றிவிட்டோம். இந்த வெற்றியைக் கொண்டாடும் விதமாக டாக்டர் கார்டன் தனது தோட்டிகளுக்கு ஒரு விருந்தளித்தார்.

அன்றிரவு டாக்டர் கார்டன் என்னிடம் வந்து "கர்னல், உங்களுக்கு குப்புவைத் தான் நன்றாகத் தெரியுமே. அவன் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறான். நாளை அவன் வழக்கு நம்முன் வரவிருக்கிறது. விருந்து முடிந்தவுடன் குப்பு தன் தலையில் கக்கூஸில் பயன்படும் தகரடின்னை இரும்புக் கவசம்போல அணிந்து கொண்டு, தோளில் ஒரு துப்பாக்கியைச்

படிப்பகம்

www.padippakam.com



சுமந்து கொண்டு வாய்க்கு வந்தபடி பாடிக்கொண்டு ஆட ஆரம்பித்துவிட்டான். அவனுக்கு எப்படியோ கிடைத்த ரம்மை அளவுக்கு அதிகமாகக் குடித்திருந்தான். "நான் தோட்டியல்ல, நான் வீரன்" என்று ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தான். எனவே ராணுவ சட்டப்படி, அவன் கைது செய்யப்பட்டிருக்கிறான். சட்டப்படி அவன் செய்தது தவறுதான். ஆனால் நமக்கு நெருக்கடியான நேரத்தில் நம்மிடம் குண்டுகள் தீர்ந்துவிடும் ஆபத்தான தருணத்தில் அவன் தன் உயிரைப் பொருட்படுத்தாமல், எதிரிகளின் குண்டு மழைக்கு அஞ்சாது நமக்கு நெஞ்சொடிய குண்டுகளைக் கொண்டுவந்து தந்தவன். அவன் அவ்வாறு அந்தச் சமயத்தில் உதவாவிட்டால் நமது நிலைமை என்னவாகியிருக்கும்? குடித்துவிட்டுக் கட்டுப்பாட்டை மீறினான் என்று அவனுக்குத் தண்டனை தருவதைவிட அவனுக்கு ஏதாவது விருது தருவதே முறை" என்று கூறினார்.

இவ்வாறு பேசிமுடித்த கர்னல் தன்னுடைய சுங்கானில் புகையிலையை நிரப்பத் தொடங்கினார். அங்கிருந்தவர்களில் ஒருவர் கேட்டார். "பிறகு குப்புவிற்குத் தண்டனை கிடைத்ததா"? என்று கேட்டார். புன்னகை செய்தவாறே கர்னல் கூறினார்.

"நான் தான் முன்பே கூறினேனே, சமயங்களில் சட்டங்கள் கைவிடப்பட்டு மனிதத்தன்மை கௌரவிக்கப்படும் என்று"!

## குறிப்புகள்

***கடந்த பிறவிகளில் இழைத்த பாவங்களின் பயனாய் இப்பிறவியிலும் அவர்கள், இறக்கும் வரையில் தீண்டப்படாத***

படிப்பகம்

www.padippakam.com



வர்களாய்ப் பிறக்கின்றனர் என்று இந்து மதம் போதிக்கின்றது. அவர்கட்கு இறக்கும் வரையில் வேறு விடுதலை கிடையாது. ஹென்றி வைட்ஹெட் பாதிரியார். - இந்தியாவின் ஒதுக்கப் பெற்றவர்களும் கிறிஸ்து மதமும். 1927 பக்கம் 5

மனித உணர்ச்சியையும், மனித ஆற்றலையும் படைத்த ஒரு வகுப்பினரை எந்நாளும் எப்பொழுதும் அறியாமையிலும், அடிமைத் தன்மையிலும், துன்பத்திலும் ஆழ்த்தி வைத்திருப்பதைப் பார்க்கிலும், அல்லது இவ்வாறு தம்மைத் தாமே நினைத்துக் கொள்ள, கொள்ளும்படியான நிலைமையை ஏற்படுத்தி யிருப்பதைப் பார்க்கிலும், உள்ள ஒரு பெரும் கொடுமை உலகில் காண்பது அரிது இவர்கள் தங்கள் நிலைமையிலிருந்து முன்னேற முயற்சிப்பதும் பாவம் ஆகும். வாயற்ற இந்த ஜனக்கோடிகள், நாள்தொறும் மண்ணோடு மண்ணாய்த் தேய்க்கப்படுகின்றார்கள். இழிவாக நடத்தப் படுகின்றார்கள்; மிருகங்களுக்கும், இத்தகைய கொடுமைகளை இழைப்பது கிடையாது. உணவற்று, உடையற்று, மனோதிடம் அற்று, நல்லிருக்கையற்று, பரம்பரை அடிமைத் தனத்தால் சுதந்திரம் அற்று; எந்நேரமும் கெஞ்சும் தன்மையை படைத்தவர்களாய், பசியின் கொடுமையால் கைக்குக் கிட்டியதைப் புசிப்பவர்களாய், தம் உணர்ச்சியிலும், ஆன்ம உணர்ச்சியிலும், மனோ உணர்ச்சியிலும், உடல் உணர்ச்சியிலும், கடையர்களாய் ஒதுக்கப்பெற்று இவர்கள் இறுதி வரையிலும் துன்பத்திற்கே பிறந்தவர்களாய் கையறு நிலையில் இருக்கின்றார்கள் - ராவ்தூர் எம்.சி. ராஜா; ஒடுக்கப்பட்ட இந்துக்கள். பக்கம் 7

தீண்டாமையும், சாதித் தாழ்வும், நமது சமூகக் கட்டுப்பாடுகளால் ஏற்பட்டன; தாழ்த்தப் பட்ட மக்கட்கும் தீண்டப்படாதவர்கட்கும், அரசாங்கம் சில உரிமை அளிப்பதனால், பெரிதும் துன்பத்திற்குள்ளாக்கும் தீண்டாமையும், சாதித் தாழ்வும்

படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறு நீங்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. - சர். அரிசிங் கௌர். இந்தியா சட்டசபை வாதம், பிப்ரவரி 23, 1928, பக்கம் 704.

ஒதுக்கப் பெற்றவர்கட்கு எத்தகைய காப்புச் சட்டங்களாலும் நலனிழைக்க முடியாது; உயர்தர இந்துக்கள் தாங்களே தோட்டித் தொழில் புரிய வேண்டும். இவ்வாறாகவே தாழ்த்தப் பெற்ற மக்கட்குத் தங்கள் கடமையைச் செய்தல் வேண்டும். உயர்தர மக்களே தோட்டித் தொழிலில் இறங்கிய பிறகு, காப்புச் சட்டங்கட்கு அவசியமில்லை. இப்பொழுதுள்ள நிலையில் பொதுக் கிணறுகளையும், பொதுப்பள்ளிக் கூடங்களையும் அவர்கள், சட்டப்படி உபயோகிக்கலாம்; ஆனால் உயர்தர இந்துக்கள் என்று கூறப்படுபவர்கள் இவர்களைத் தடைசெய்து விடுகின்றார்கள்

- மகாத்மா காந்தி இந்தியா ஜூலை 14, 1927, பக்கம் 232.

❄

படிப்பகம்

www.padippakam.com

# 5

***இருபது வயதிற்கு மேற்பட்ட இந்தியர்களில், நூற்றுக்கு. தொன்னூறு நபர்களுக்கு எழுத்து மூலமாக நல்ல பயிற்சிகளை அளிக்க முடியவில்லை.***

***– இந்திய விவசாய ராயல் கமிஷன் அறிக்கை, 1928 பக்கம் 559.***

இந்தச் சம்பவம் மத்திய இந்தியாவில் இருந்த ஒரு சிறிய சமஸ்தானத்தில் நடந்தது. குன்றுகளும், புலிகள் நிறைந்த காடுகளும் கொண்ட அந்த சமஸ்தானம் மக்கள் தொகை மிகவும் குறைவாகவே கொண்டது.

அதன் அரசர் அப்போது நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆங்கில மருத்துவமும், நாட்டு மருத்துவமும் பயனற்றுப் போயின. சோதிடர்கள் வாக்கும், மந்திரதந்திரங்களும் பயனற்றுப் போயின..

அரசருக்கு இரண்டு மனைவிகள். முதல் ராணிக்கு குழந்தைகள் இல்லை. இரண்டாவது ராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து வளர்ந்து வந்தது.

கைம்பெண்ணாகி, இளையராணியின் மகனுக்கு அடங்கி மூலையில் முடங்கிக் கிடப்பதா,என்று எண்ணமிட்ட மூத்த ராணி, யோசனை செய்து அரண்மனை சோதிடனை அழைத்து வ்ரச் செய்து அவனிடம், "உன்னைவிடச் சிறந்த சோதிடனை உனக்குத் தெரியுமா"? என்று கேட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



அரசிக்கு முன் இருந்த திரைமறைவில் நின்று கொண்டிருந்த சோதிடன் "மகாராணி, தங்களது நல்வாழ்விற்காகவே கடவுள் எனக்கு பெரிய ஆற்றலைக் கொடுத்துள்ளார். அப்படியிருக்க என்னைவிட சிறந்த சோதிடன் யார் இருக்கமுடியும்"? என்றான்.

"நீ போ! போய் அரண்மனை வைத்தியனை வரச் சொல்"!

தன்னுடைய பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு வைத்தியன் ஓடிவந்தான். அவன் ஓடிவந்த வேகத்தில் வாங்கிய பெருமூச்சின் சப்தம் திரையையும் கடந்து அரசியை எட்டியது. அவனிடம் அரசி, "உன்னை விடச் சிறந்த வைத்தியனை உனக்குத் தெரியுமா"? என்று கேட்டாள். "மலை நாட்டின் மகாராணியே! நான் உண்மையைக் கூறவேண்டுமென்றால் அப்படி யாரும் இல்லையென்றே கூறுவேன்" என்று வைத்தியன் பதிலளித்தான்.

"அடிவாங்காமல் நீ ஓடிவிடு! ஈனப் பிறவியே! நீ போய் நாவிதனை அனுப்பு" அரசியிடமிருந்து உத்தரவு பிறந்தது.

ஓடோடி வந்து நின்ற நாவிதனிடம் அரசி "அடிமையே! எங்களது குடும்பத்தாருக்காக மணமக்கள் தேட நீ பல இடங்களுக்கும் சென்றிருப்பாய். சென்ற இடங்களில் எங்காவது மந்திர சக்தியில் வல்லமை பெற்ற பெரியவர் எவரையேனும் கண்டதுண்டா?" என்று வினவினாள்.

"நமது இளவரசருக்கு அரசர் உத்தரவுப்படி நான் மணமகளைத் தேடிச் சென்று கொண்டிருந்தபோது ஒரு பெரிய மந்திரவாதியைச் சந்தித்தேன்" என்றான்.

படிப்பகம்

www.padippakam.com



"அப்படியா, அவர் பெரிய மந்திரவாதி என்பதனை நீ எப்படி அறிந்துகொண்டாய்"? என்று அரசி கேட்டாள்.

"கருணை நிரம்பிய எங்கள் அரசியே! அது ஒரு பிரசித்தமான சிறந்த ஸ்தலமாகும். அவ்வூரில் ஓரிடத்தில் அமர்ந்து அவர் மந்திரங்களை ஜெபித்துக் கொண்டிருந்தார். அவரது சிஷ்யர் அவரருகே இருந்தவண்ணம் மக்கள் தரும் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டிருந்தார். மக்கள் அவரைச் சூழ்ந்திருந்தனர். அவர் மக்களிடம் "நான் தீவிரமாக செய்து வந்த யோக சாதனையின் பயனாகக் கடவுள் எனக்கு செம்பை வெள்ளியாக்கவும், வெள்ளியைத் தங்கமாக்கவும் சக்தி அளித்துள்ளார்" என்றார்.

அந்த மக்கள் கூட்டம் அவரிடம் "அந்த சக்தியின் பயனை எங்களுக்கு அருளவேண்டும்" என்று வேண்டினர்.

அவர் அனைவரையும் தன்னைச் சுற்றி உட்காரச் சொல்லிவிட்டு, அவரவர் கையிலுள்ள நாணயங்களை எடுத்துத் தரச் சொன்னார். அனைவரும் அவ்வாறே செய்தனர். அவைகளைப் பெற்றுக் கொண்ட அவர் களிமண்ணைக் கொண்டு உருண்டைகள் செய்து ஒவ்வொரு உருண்டையினுள்ளும் ஒவ்வொரு நாணயத்தை வைத்து அவற்றைத் தன் எதிரே பரப்பி வைத்தார். பிறகு அவர்களிடம் "இப்போது நான் மிகவும் சக்தியுள்ள மந்திரங்களை ஜெபிக்கப் போகிறேன். நீங்களும் மனதை ஒருமைப்படுத்திக்கொண்டு நான் சொல்லும் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு வர வேண்டும். ஜெபம் முடிந்தவுடன் நான் இந்தக் களிமண் உருண்டைகளை உடைப்பேன். செம்பு நாணயம் வெள்ளியாகவும், வெள்ளி நாணயம் தங்கமாகவும் மாறியிருக்கும். அவரவர்க்கு உரியதை அவரவர் எடுத்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ள வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. மந்திரம் ஜெபிக்கும்போது உங்களில் யாரும் கருப்புமுகமுடைய வெள்ளைக் குரங்கை நினைக்கவே கூடாது. அப்படியாராவது நினைத்தால் மந்திரம் பலிக்காது" என்று கூறிவிட்டு மந்திரங்களைக் கூறி முடித்துவிட்டு களிமண் உருண்டைகளை உடைத்தார். அதிலிருந்த நாணயங்கள் எந்தவித மாற்றமும் அடையாமல் அதது இருந்தவிதமாகவே இருந்தன. இதைப் பார்த்த மந்திரவாதி மிகுந்த கோபத்துடன் கூட்டத்தினரைப் பார்த்து, "நாசமாய் போகிறவர்களே! உங்களில் யாரோ நான் நினைக்கக் கூடாது என்று சொன்னதை நினைத்திருக்கிறீர்கள். யார் அவன்? யார் என் மந்திர சக்தியைப் பயனில்லாமல் செய்தவன்" என்று உறுமினார்.

கூட்டத்தில் ஒருவன் மிகுந்த நடுக்கத்துடன் எழுந்து "சுவாமி அந்தக் குற்றத்தைச் செய்தவன் நான்தான். எனது பலவீனத்தால் எவ்வளவு முயன்றும் கருப்பு முகம் கொண்ட வெள்ளைக் குரங்கைப் பற்றிய நினைவை என்னால் அகற்ற முடியவில்லை" என்று கூறினான். அதைக் கேட்டதும் கூட்டத்திலிருந்தவர்கள் அவனைக் கண்டபடி திட்டி தங்கட்குக் கிடைக்கவிருந்த லாபத்தை அவன் கெடுத்துவிட்டான் என்று அவனை அடிக்கவும் ஆரம்பித்தனர். மந்திரவாதியின் சிஷ்யனோ, அந்த நாணயங்களை அப்படியே தங்களது பையில் நிரப்பிக் கொண்டு விட்டான்" என்று நாவிதன் விளக்கமாகக் கூறினான்.

அரசி "உடனே வேகமாகச் செல்லும் எனது ஒட்டகத்தின் மேலேறிச் சென்று அந்த மந்திரவாதியை சீக்கிரம் அழைத்துவா! அரசரது உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்று நாவிதனுக்குக் கட்டளையிட்டாள். அவனும் அரசி கட்டளைப் படி சென்று மந்திரவாதியை அழைத்து வந்தான்.

படிப்பகம்

www.padippakam.com



அரசி அரசரிடம் சென்று "சுவாமி, தங்களது உயிரைக் காத்து உடல் நலத்தை மீட்டுத் தரக்கூடிய வல்லமை கொண்ட பெரிய மந்திரவாதி ஒருவரைக் கண்டுபிடித்து அழைத்து வந்திருக்கிறேன்" என்றாள்.

அரசர் அனுமதி அளிக்கவும் மந்திரவாதி அரசர் முன்சென்று அவரைப் பார்த்துக் கூறினான். "வேந்தே, நான் என் மந்திர சக்தியால் தங்களுடைய விதியைப் பற்றி அறிந்து கொண்டேன். தாங்கள் உயிர் பிழைக்க ஒரேயொரு வழிதான் இருக்கிறது. தங்கட்கு உரிமையுள்ள யாராவது தங்கள் உயிரைத் தங்கட்குத் தானமாகத் தர முன்வந்தால் தாங்கள் நீண்டநாள் வாழலாம்."

உடனே அரசர் தன்னைச் சேர்ந்த அனைவரையும் கூட்டச் சொன்னார். அரசரைச் சார்ந்தவர்களாக சுமார் இருநூறு பேர்களுக்குமேல் வந்து குழுமி அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவர்களில் அரசர், "எனது மக்களே, உங்களில் யாராவது ஒருவர் தங்கள் உயிரை எனக்குத் தர முன்வந்தால் நான் உயிர் பிழைக்கலாம். இல்லாவிட்டால் இறக்கநேரிடும். யார் தருகிறீர்கள்"? என்று கேட்டார்.

அங்கிருந்த அனைவருமே அரசரைக் காட்டிலும் தமது உயிர் பெரிதல்ல என்ற எண்ணத்தில் "நான் தருகிறேன்", "நான் தருகிறேன்" என்று முன்வந்தனர். அது மட்டுமல்லாது அவசியம் ஏற்பட்டால் தாங்கள் அனைவருமே ஒரே சமயத்தில் தங்கள் அத்தனைபேரது உயிரையும் தரத்தயார் என்று கூறினர்.

அரசரின் இரண்டாவது மனைவியோ "நமது கடவுள்களைத் திருப்திப்படுத்த நரபலி கொடுப்பதல்லவா முக்கியம். எனவே எனது மகனை பலியிடுங்கள்" என்று

படிப்பகம்

www.padippakam.com



இளவரசனை அரசர் முன் தள்ளிவிட்டுப் பிறகு துக்கம் தாளாமல் மயங்கிவிழுந்து விட்டாள்.

ஆனால், அங்கிருந்த ஒரு அரண்மனைப் பணிப்பெண், "எல்லாத் தாய்மார்களுக்கும் தங்கள் குழந்தைகள் அருமையானவர்கள்தான். எனவே, இதோ எனது ஏழுவயது மகனை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டினாள். அவள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அன்று இரவு கடுமையான பூஜைகள் முடிந்த பிறகு அந்தப் பணிப் பெண்ணின் மகன் பலியிடப்பட்டான். பிணம் மறைக்கப்பட்டது. மந்திரவாதிக்கு அவன் வேறு ஏதும் கெடுதல் செய்து விடக்கூடாதே என்ற அச்சத்தில் பெரிய அளவில் தங்கக் காசுகளை அள்ளிக் கொடுத்தனர். அவனும் விடை பெற்றுச் சென்றான்.

நரபலியிடப்பட்ட மூன்றாம் நாளே அரசர் மரணமடைந்தார். ஆடம்பரமான சடங்குகளுடன் அரசர் உடல் தகனம் செய்யப்பட்டது. ஆங்கிலேய அரசின் சட்டத்திற்குப் பயந்து அரசரின் உடலுடன் அரசிகளையோ, அரசரின் ஆசை நாயகிகளோ கொளுத்தப்படவில்லை.

அன்று இரவே பிள்ளையைத் தானம் செய்த பணிப் பெண் தன் படுக்கையிலே கொலை செய்யப்பட்டுக் கிடந்தாள்.

நீண்ட நாட்கள் வரை நரபலியிடப்பட்ட விஷயமோ, பணிப் பெண் கொலையோ வெளியே வராத வண்ணம் பாதுகாக்கப்பட்டது. ஒரு சமயம் வேலைக்காரர்களிடையே ஏற்பட்ட சச்சரவின்போது விஷயம் வெளிப்பட்டு அது சமஸ்தானத்திலிருந்த ஆங்கிலேயே அரசப் பிரதிநிதியின் காதுகளுக்கு எட்டியது.

படிப்பகம்

www.padippakam.com



அவர் அரண்மனையிலிருந்து அனைவரையும் வரவழைத்து கடுமையாக விசாரணை செய்து அனைத்து விபரங்களையும் அறிந்து கொண்டார். அதன் பிறகு இதற்குக் காரணமான முதல் அரசி இங்கிருக்கக் கூடாது என்றும், தேவையான பொருளைப் பெற்றுக்கொண்டு, தனது பிறந்த வீட்டிற்காவது, அல்லது வேறு எங்காவது சென்று விடவேண்டும் என்று கட்டளையிட்டார். அரசியும் அவ்வாறே அரண்மனையை விட்டு வெளியேறி விட்டாள்.

இளவரசனுக்குப் பட்டம் கட்டப்பட்டு அவனுக்கு உரிய வயது வரும் வரை அரசுப் பொறுப்பை இரண்டாவது அரசி கவனித்துவரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் என்ன தேடியும் அந்த மகத்தான சக்தி பெற்ற மந்திரவாதியை மட்டும் கண்டுபிடிக்கவே முடியவில்லை!

படிப்பகம்

www.padippakam.com

# 6

***எண்ணிக்கையிலடங்காத பெண்கள், குழந்தைப் பருவம் மாறும் முன்னரே விதவைகளாகி மீளாத்துன்பத்தை அடைகின்றனர். இதனால் ஏற்படும் கெடுதல்களும், துயரமும் சொல்லக் கூடியதல்ல. இதைத் தீர்க்க முடியாதா? இதற்கோர் வழியில்லையா? இத்தகைய கொடுமைக்கும், தேவையற்ற பழக்கத்திற்கும் முடிவே இல்லையா என்று கேட்கின்றனர். சமூக சீர்திருத்தம் மிகவும் கடினமான வேலை. ஏனென்றால் மக்கள் சமூக சீர்திருத்தவாதிகளை கேவலமாகப்பேசி தூற்றுவார்கள்.***

***- செல்வி பார்வதி சந்திரசேகர அய்யர்***
***ஸ்ரீ தர்மம், ஆகஸ்ட் 1927 பக்கம் 149***

கடுமையான வெப்பத்தால் பூமி பாலம் பாலமாக வெடித்துக் கிடக்கும் வங்காளத்தின் ஒரு கிராமம். ஊருக்குச் சற்றுத்தள்ளி மண் சுவர்களால் கட்டப்பட்டு கூரைவேய்ந்த ஒரு சிறுகுடிசை. தரைமுழுவதும் சாணியால் மெழுகப்பட்டிருந்த அந்த குடிசையில் ஜன்னல் என்று எதுவுமிருக்கவில்லை. உள்ளே ஒரு தண்ணீர்ப் பானையும், மேலிருந்து தொங்கிய உறியில் ஒரு கரி மண்டிய பானையும், திருவைக்கல் ஒன்றும் ஒரு கயிற்றுக் கட்டிலும் மட்டுமே இருந்தன. குடிசைக்குரியவளான சீதை என்ற பெயருடைய பிராமண விதவை குடிசையின் வாயிலில் உட்கார்ந்து கொண்டு தனது பழையநினைவுகளில் மூழ்கியிருந்தாள். தசைப்பற்றுச் சிறிதுமில்லாத மெலிந்த உடலும், வற்றிப்போய் ஒட்டிக் கிடந்த கன்னங்களும், எடுப்பாகத் தெரிந்த பற்களும், ஒட்டவெட்டப்

www.padippakam.com



பட்ட தலையுடன் வெள்ளையாடை அணிந்து காணப்பட்டாள் அவள். இருபத்தொன்பது வயதாகும் அவள் பழைய பழக்க வழக்கங்களில் ஊறிப்போனவளாக இருந்தாலும் மனதளவில் அவள் ஒரு குழந்தைதான்.

அதிகாலையிலேயே எழுந்து நீராடி கடவுள் வழிபாடு செய்துவிட்டு குடிசையின் வாசற்படியில் உட்கார்ந்தபடி பொழுது போக்குவதுதான் அவளது வேலை. இறந்து போன தன் கணவன் நல்லகதியடைய வேண்டும் என்பதற்காக கடவுள்களை வேண்டிக் கொண்டு, அதற்காகப் பட்டினி கிடந்து விரதமிருந்து ஒரு மனைவிக்குரிய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருந்தாள்.

அவள் பிறந்த வீடு செல்வ வளமிக்கது. தாய்க்கு மிகவும் செல்லமாக வளர்ந்த அவள், பிறகு பிறந்த ஆண் குழந்தையால் செல்வாக்குக் குறையப்பெற்றாள். அவளது குழந்தைப் பருவத்திலிருந்தே வீட்டிலுள்ளவர்கள் அவளுக்கு சாதிமுறையின் பழக்க வழக்கங்களையும், கணவனிடம் நடந்து கொள்ளும் முறைபற்றியும் அவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தே வந்தனர். அவற்றை மீறி நடந்தால் கடவுள் அவளைக் கடுமையாகத் தண்டிப்பார் என்றும் கூறினர். அத்துடனில்லாது பிள்ளைப் பேற்றிலுள்ள துன்பத்தைப் பற்றியும், சில சமயங்களில் கொடிய நோய் பற்றி உடம்பு புண்ணாகிச் சீரழிவதைப் பற்றியும் விஸ்தாரமாக எடுத்துரைத்தனர். இப்படிப்பட்ட நோய்களைப் பற்றி அவர்கள் கூறுவதையெல்லாம் கேட்ட அவள் பல இரவுகளில் கொடுமையான கனவுகளைக் கண்டு நடுங்கி அலறி விழித்துக் கொள்வது வழக்கமாயிற்று. விடிந்ததும் கடவுளிடம் தனக்கு அப்படிப்பட்ட எந்த நோயும் வந்துவிடக்கூடாது என்று மனமுருகி வேண்டிக் கொள்வாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவர்களது சாதி வழக்கப்படி அவளுக்கு இளம் வயதிலேயே திருமணமாயிற்று. பன்னிரண்டு வயதானபோது அவள் கணவன் வீடு வந்து சேர்ந்தாள். பீமன் என்ற அவளது கணவன் மிகுந்த பருமனான மனிதன். அவளது தந்தையை விட வயதில் மூத்தவன். இதற்கு முன்பு நான்கு மனைவிகளைப் பெற்றிருந்தும் அவர்களுக்குக் குழந்தை இல்லாததால் சீதையை அவன் ஐந்தாவதாக மணந்திருந்தான். அவள் மனமுருகிக் கடவுளிடம் தனக்கு ஒரு குழந்தையை அருளுமாறு வேண்டினாள்.

ஒரு ஆண்டு கழிந்தும் அவளுக்கு கர்ப்பம் தரிக்கவில்லை. வீட்டிலிருந்தவர்கள், "நீ மிகவும் மெலிந்து, உற்சாகம் இல்லாமல் இருக்கிறாய். அழகாகவும் இல்லை. அத்துடன் மலடியாகவும் இருக்கிறாய். எனவே பீமன் உன்னைத் தள்ளிவைத்து விட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வார்" என்று கூறினர்.

ஆனால் ஒருநாள் பீமன் அவளிடம் அவளை காளி கோயிலுக்குப் போய் தங்கியிருந்து நாள் முழுவதும் காளியிடம் குழந்தை வரம் வேண்டி விரதம் இருக்குமாறும், அன்று இரவும் அங்கேயே தங்கியிருந்து வரம் வேண்டுமாறும் அதன்மூலம் காளியின் அருள் பெற்றுத் தன்னை நரகத்திற்குப் போகாமல் காப்பாற்றக் கூடிய ஒரு பிள்ளையைப் பெறுமாறும் கூறி கோயிலுக்கு அனுப்பினான். சீதையும் அவ்வாறே சென்று நாள் முழுவதும் விரதம் இருந்து பிரார்த்தனை செய்து இரவு பூசாரிகள் தனக்கு ஒதுக்கிய இருட்டு அறையில் படுத்திருந்தாள்.

மறுநாள் காலை பூசாரி அவளிடம் இரவு அவளுக்கு ஏதேனும் கனவு வந்ததா என்று கேட்டான். அவள் தனக்கு கனவு ஏதும் வரவில்லையென்றும், ஆனால் நள்ளிரவில் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



உருவம் தன்னிடம் வந்ததாகவும் அந்த உருவத்தின் குரல் பூசாரியின் குரல் போலவே இருந்ததாகவும் தெரிவித்தாள்.

"காளி உனக்குக் கருணை காட்டிவிட்டாள். அவளை வணங்கு. இரவு உன்னிடம் வந்தது கடவுள் தான். இனி நீ உன் வீடு செல்லலாம். உனக்குக் குழந்தை பிறந்ததும் உன் கணவனிடம் கூறி எனக்கு நல்ல சன்மானம் கிடைக்கச் செய்" என்று கூறி அனுப்பிவைத்தான்.

உரியகாலம் முடிந்தவுடன் சீதைக்குக் குழந்தை பிறந்தது. ஆனால் அது ஒரு பெண் குழந்தையாகப் போய்விட்டது.

பல ஆண்டுகள் கழிந்தும் மீண்டும் அவள் கருத்தரிக்க வில்லை. மறுபடியும் ஒருமுறை காளிகோயில் சென்று விரதம் இருந்து இரவு தங்கியும் பலன் கிடைக்கவில்லை. அதுதான் கடவுளின் சித்தம் என்று இருந்துவிட்டாள். அவளுக்கு கடவுளின் அருளில் நிறைய நம்பிக்கை இருந்தது. தனக்கு ஏதும் கொடிய நோயைக் கடவுள் கொடுத்து விடவில்லையே!

பீமன் ஒரு ஆண்குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டான். கொள்ளி வைக்க ஒருபிள்ளை வேண்டுமே!

காளியின் அருளால் கிடைத்த சீதையின் மகளுக்கு வழக்கப்படி குடும்ப பழக்க வழக்கங்கள் போதிக்கப்பட்டு அவளது பதினோராவது வயதில் மணமும் முடிக்கப்பட்டது.

பீமன் காலமானான். சீதை செய்த பாவங்கள் காரணமாகவே அவன் இறந்து போனதாகக் கூறப்பட்டது. எவ்வளவு யோசித்தும் சீதைக்கு தான் செய்த பாவம் என்னவென்பது புரியவில்லை. எனவே, போன ஜென்மங்களில்

படிப்பகம்

www.padippakam.com



செய்த பாவங்களின் காரணமாகவே தன் கணவன் இறந்திருக்க வேண்டும் என்றும், முன் ஜென்மம் என்பதால் அந்தப் பாவங்களின் ஞாபகம் இந்த ஜென்மத்தில் நினைவிற்கு வராததில் வியப்பில்லை என்றும் சீதை முடிவுக்கு வந்தாள்.

அவள் தாலியைப் பறித்துவிட்டு, ஆடை அணிகளைப் பிடிங்கிக் கொண்டு, தலை முடியை ஒட்ட வெட்டி, ஒரு வெள்ளைப்புடவையை மட்டும் அவளுக்குக் கொடுத்து எங்காவது பிச்சை எடுத்துப் பிழைக்கும்படி கூறி பீமனது குடும்பத்தினர் அவளை விரட்டிவிட்டனர்.

ஆனால் கடவுளின் கருணையால் அவளது மருமகன் சாரதி அவளுக்கு இந்தக் குடிசையைக் கட்டிக் கொடுத்து, ஒரு வேளை உணவுக்கும் வழி செய்து தந்ததுடன், அடிக்கடி தன் மகளைச் சென்று சந்திக்கவும், நல்ல நாட்களில் மகளுடன் இருக்கவும் அனுமதியளித்தான்.

சீதை இறந்துபோன தன் கணவனது ஆத்ம சாந்திக்காக, ஒரு விதவை செய்ய வேண்டிய கடமையான ஒருவேளை உணவுடன் பட்டினி கிடந்து, இடைவிடாது பிரார்த்தனை செய்து காலங்கழித்து வந்தாள். ஊர்மக்கள் அனைவருமே இதைப் போன்ற நியதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்தனர்.

அது 1921-ஆம் ஆண்டு. இந்த ஊரிலிருந்து அறுபது மைல்களுக்கு அப்பாலிருந்த கல்கத்தாவில் அரசியல் கிளர்ச்சி நடந்து கொண்டிருந்தது. நகர மக்கள் இதைப்போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டாலும், சிற்றூர்கள் எல்லாம் வழக்கம் போல, தங்களது பழக்கவழக்கங்களை விட்டுவிடாமல் தூங்கிக் கொண்டுதான் இருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



மகாத்மா காந்தியின் கருத்துக்கு மாறுபட்டு எவரேனும் பேசினால் கல்கத்தாவில் அவர்கள் தாக்கப்பட்டனர். காந்தி அகிம்சையைப் போதித்தாலும், பகைமையும், கொலையும் நடந்து கொண்டுதான் இருந்தன.

ஒருநாள் சீதையின் கிராமத்திற்கு காந்திக்குல்லாய் தரித்த இருவர் வந்தனர். அவர்கள் பேசிய பேச்சு கிராமத்து மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கவே அவர்கள் அவ்விருவரையும் பிடித்துத் தங்களது கிராமத் தலைவன் முன் கொண்டு நிறுத்தினர்.

கிராமத்தலைவன் அவர்கள் பேசிய பேச்சைக் கேட்டுவிட்டு "வீணாக ஏன் உளறுகிறீர்கள். ஆங்கிலேயர்கள் வியாபாரம் செய்ய வந்துவிட்டு நாட்டைப் பிடித்துக் கொண்டதாகக் கூறுகிறீர்கள். அதனால் அவர்கள் நாட்டிலிருந்து வரும் துணிகளை எரித்து அவர்களை நாட்டை விட்டு ஒட்ட வேண்டும் என்று கூறுகிறீர்கள். ஆனால் அவர்களால் நாம் எவ்வளவு நன்மைகளை அடைந்திருக்கிறோம் என்று எண்ணிப் பாருங்கள்" என்று கூறி விரட்டிவிட்டான்.

அவர்களிருவரும் கோபத்துடன் திரும்பிக் கொண்டிருந்தபோது சீதையின் குடிசையும் அதன் வாயிலில் வெள்ளைப் புடவை உடுத்திய சீதையும் அவர்கள் பார்வையில் பட்டது. அவர்கள் அவளிடம் "நீ யார்"? என்று கேட்டனர்.

"நான் ஒரு விதவை"!

"தற்போது எங்கே புறப்பட்டுக் கொண்டிருக்கிறாய்"?

சமையலுக்கு வேண்டிய சாமான் வாங்க கடைக்குப் போவதாக சீதை பதில் கூறினாள்.

படிப்பகம்

www.padippakam.com



"நீ கட்டியிருக்கும் இந்த வெள்ளைப் புடவை மான்செஸ்டரிலிருந்து வந்த துணியல்லவா"!

"மான்செஸ்டர் என்றால் என்ன? என்னிடம் இந்த ஒரு புடவைதான் இருக்கிறது."

"மகாத்மா காந்தி கட்டளைப்படி இதை எரித்துவிட வேண்டும் கொடுத்துவிடு."

"மகாத்மா காந்தியா, அது யார்"?

"மகாத்மா காந்தி சொன்னது பலிக்கும். நீ புடவையைக் கொடுக்கமாட்டாய் அல்லவா, பிடி சாபத்தை, உன்னைக் குஷ்டநோய் பிடிக்கட்டும். அது உன் உடம்பு முழுவதையும் அரித்து உன் தசைகளை அழித்து உன் உடம்பைக் குறைக்கட்டும். இப்போதே பார் உன் விரல்களில் குஷ்ட நோய் ஆரம்பித்து விட்டது" என்று அவர்கள் கடுமையான குரலில் சாபமிட்டனர்.

இதைக் கேட்டதும் பயந்து நடுங்கிப்போன சீதை அலறியடித்துக் கொண்டு குடிசைக்குள் ஓடி கதவைச் சாத்திக் கொண்டு புடவையை அவிழ்த்து வெளியே வீசி, "தயவுசெய்து சாபத்தை நீக்கிவிடுங்கள்" என்று கதறினாள். அவர்கள் இருவரும் சிரித்துக்கொண்டே போய்விட்டனர்.

மூன்று நாட்கள் ஆகியும் சீதையின் நடமாட்டத்தைக் காணாததால் ஊரார் அது குறித்துப் பேசத் தொடங்கினர். சீதையின் மகளும் தன் தாயைக் காணோமே என்று தன் கணவனிடம் கேட்க அவன் குடிசையைத் தேடி வந்து "அத்தை உள்ளே இருக்கிறீர்களா?" என்று குரல் கொடுத்தான். பதிலில்லாமல் போகவே "அத்தை உங்களுக்கு உடம்பு

படிப்பகம்

www.padippakam.com



சரியில்லையா" என்று கேட்டுக் கொண்டே குடிசையின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான்.

குடிசையின் ஒரு இருண்ட மூலையில் சீதை நடுநடுங்கிய உடலுடன் எலும்பும், தோலுமாய் தன் விரல்களையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவளது உலர்ந்து போன வாயிலிருந்து "கடவுளே, கடவுளே எனக்கு ஏன் இந்தத் தண்டனை! எனக்குக் குஷ்டம் வந்துவிட்டதே"! என்ற முனகல் மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தது.

சீதையின் மருமகன் முகத்தைத் திருப்பிக்கொண்டு தன் மேலுடையைக் கழற்றி அவளிடம் நீட்டி "இது என்ன அக்கிரமம், இதை உடுத்திக் கொள்ளுங்கள்" என்று கூறினான்.

"காந்தியின் தொண்டர்களாம். அவர்கள் என் புடவையைக் கேட்டார்கள். நான் முதலில் கொடுக்கவில்லை. அவர்கள் எனக்குக் குஷ்டநோய் வரவேண்டுமென்று சபித்து விட்டுப் போய்விட்டார்கள். என் விரல்களில் குஷ்டம் வந்து விட்டதே! கடவுள் என்னைக் கைவிட்டு விட்டாரே!" என்று அழுதாள் சீதை.

சாரதி "நீங்கள் இருங்கள், நான் போய் உங்கள் மகளை அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்று சீதைக்கு மாற்று உடை, உணவு ஏனையபொருட்கள் ஆகியவற்றுடன் தன்னுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்து குடிசைக்குள் நுழைந்தபோது சீதை, அவன் தனக்களித்திருந்த மேலாடையால் தூக்கிட்டுக் கொண்டு பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# 7

*இந்தியாவில் தமிழ்நாட்டுக் கோயில்களில் ஆண்டவனையே மணந்ததாகக் கூறப்படும் பெண்கள் தேவதாசிகள் என்று அழைக்கப்பட்டனர். பொதுவாக இவர்களை விலைமாதர்கள் என்றே கூறுவர். ஒவ்வொரு பெரிய கோவிலிலும் இத்தகைய தேவமாதர்கள் கூட்டம் ஒன்று இருப்பதைக் காணலாம்.*

*-ஜே.ஜி. பிசேர், பொற்கிளை, அடோனில், ஆட்டிஸ், ஆசிர்ஸ், முதற்பகுதி 61-ம் பக்கம்.*

இங்கிலாந்திலிருந்து புதிதாக வந்திருந்த மாகாண கவர்னர், தன் மனைவியுடன் அவள் ஆசைப்பட்டபடி ஒரு பழமையான கோவில் ஒன்றிற்கு விஜயம் செய்தார்.

கோயில் புரோகிதர்கள் அவர்களை மிகுந்த மரியாதையுடன் வரவேற்று, இந்துக்கள் அல்லாதவர்கள் எவ்வளவு தூரம் கோயிலுக்குள் நுழையலாமோ அவ்வளவு தூரம் வரை அழைத்துச் சென்றனர். கவர்னர் மனைவி கோவிலின் அமைப்பையும், சிற்பச் சிறப்புகளையும் பற்றிப் புகழ்ந்து பேசினாள்.

அது மாரியம்மன் கோவில். மாரியம்மனைப் பார்த்ததும் கவர்னரின் மனைவிக்கு வைசூரியின் நினைவு வந்துவிட்டது. கோடையின் வெப்பம் வேறு அவளை எரிச்சலடையச் செய்திருந்தது. அங்கிருந்து நகர்ந்த அவள் இசைக்கருவிகள் ஒலிக்கும் சப்தம் வந்த திசைநோக்கிச் சென்று கல்தூண்கள் நிறுத்தப்பட்ட ஒரு மண்டபத்தையடைந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



அங்கு சிறப்பாக உடையணிந்திருந்த அழகான இளம் வயதுடைய தேவதாசிகள் கூட்டம் ஒன்று இசைக்கு ஏற்ப நடனமாடிக் கொண்டிருந்தது.

கவர்னரின் மனைவி அங்கு வந்ததும் அந்தக் கூட்டத்திலிருந்து ஏழு வயதுடைய, அழகான சரிகை வேலைப்பாடுகள் நிறைந்த ஆடையும், கழுத்திலும் மற்றும் உடல் முழுவதும் ஏராளமான நகைகளும் அணிந்த பெண் ஒருத்தி வந்து, கவர்னரின் மனைவியையே பார்த்துக் கொண்டு நின்றாள். இவள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த பெண் என்பதனை அவளது முகக்குறிப்பிலிருந்தும், அவளது கண்களில் காணப்பட்ட அறிவின் ஒளியிலிருந்தும் கவர்னரின் மனைவி உணர்ந்து கொண்டாள். இருவரும் ஒருவரையொருவர் விழித்துப் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றனர். பிறகு அந்தச் சிறுமி திரும்பிச் சென்று தான் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டாள். கோயில் குருக்கள்களும் கோயிலின் வேறு இடங்களைச் சுற்றிக்காட்டுவதற்காக கவர்னரின் மனைவியை அழைத்துச் சென்றுவிட்டனர்.

அந்தச் சிறுமியின் பெயர் லட்சுமி என்பதாகும். அவளுக்கு 4 வயதாக இருக்கும்போதே அழகிய முகம் கொண்ட பார்ப்பன விதவையான அவளது தாய் காசநோயால் வருந்திக் கொண்டிருந்தாள். "என் கண்ணே எனக்குப் பின் உன் வாழ்க்கை என்னாகும். உனக்கு வரதட்சணை கொடுத்து எப்படி நான் கல்யாணம் செய்து வைக்கப்போகிறேன். கல்யாணமாகாமல் ஒரு பெண்ணிருப்பதைவிட இறப்பது மேலல்லவா!" என்று லட்சுமியைக் கட்டிக் கொண்டு அழுவாள்.

லட்சுமி தாய்க்கு மருத்துவம் பார்த்து வந்த வெள்ளைக்கார மருத்துவச்சி ஒருநாள் லட்சுமியை தன்

படிப்பகம்

www.padippakam.com



வீட்டிற்கு அழைத்துச் சென்றதும், பிறகு ஒரு நாள் தங்களது கோயிலுக்கு அழைத்துச் சென்றதும் லட்சுமிக்கு நினைவிற்கு வந்தது.

ஒரு பெரிய அகலமான, வெளிச்சம் நிரம்பிய இடத்தில் நிறையப் பேர் மண்டியிட்ட வண்ணம் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்த லட்சுமி அந்த வெள்ளைக்கார மருத்துவச்சியிடம் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டாள்.

அதற்கவள், “கர்த்தாவே, எங்களது இருளைப்போக்கி, எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் எம்மைமீட்டு, தங்கள் புத்திரனாகிய யேசு கிறிஸ்துவின் ஆணைப்படி எங்களுக்கு கருணை காட்டுங்கள்” என்று பிரார்த்திப்பதாக லட்சுமிக்குக் கூறினாள்.

லட்சுமியின் தாய்க்கு உடல்நிலை மிகவும் மோசமாயிற்று. கொஞ்சநாட்களாக அந்த வெள்ளை மருத்துவச்சி வரவில்லை. ஒருநாள் விலையுயர்ந்த ஆடை அணிகளை அணிந்திருந்த ஒரு இந்தியப் பெண் - அவள் ஒரு தேவதாசி - லட்சுமியின் தாயைப் பார்க்க வந்தாள். அவள் “உனது காலம் நெருங்கிவிட்டது. நீ லட்சுமியை எனக்குக் கொடுத்துவிடு. நான் அவளைக் கடவுளுக்கு மணம் செய்து வைத்து தேவதாசியாக்கிவிடுகிறேன். பொன்னும் பொருளுமாக அவள் சிறப்பாக வாழ்வாள். நல்ல சிவப்பு நிறமும், களையான அழகிய முகமும் கொண்ட இவள் கால்களில் இங்குள்ள பணக்காரர்கள் விழுந்து கிடக்கும்படி செய்து விடுகின்றேன். உன்னைப் போல இளம் வயதிலேயே விதவையாகி அபசகுனமென்றும், மொட்டைச்சி என்றும் பிறர் பழிக்கும்படி அவள் வாழ்வு அமையாது என்றென்றும் சுமங்கலியாக இருப்பாள்” என்று கூறினாள்.

படிப்பகம்

www.padippakam.com



லட்சுமியின் தாய் சற்று யோசித்துவிட்டு, “எப்படியாவது இவளுக்கு ஒரு வழி செய்யத்தானே வேண்டும். விரைவில் நான் போய்விடுவேன். வேறுவழியில்லை. தவிர கடவுளுக்குப் பொட்டுக் கட்டி வாழ்வதும் புண்ணியகாரியம்தானே. நீ இவளை அழைத்துச் செல்” என்று அனுமதியளித்தாள். வந்தவள் சில பொற்காசுகளை லட்சுமியின் தாயின் கைகளில் கொடுத்துவிட்டு லட்சுமியை அழைத்துக்கொண்டு கிளம்பினாள். தாயைப் பிரியமாட்டேன் என்று அவளது கால்களைக் கட்டிக் கொண்டு அழுத லட்சுமியை வந்தவள் தான் வந்திருந்த மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

ஒரு கோயிலில் லட்சுமியைப் போலவே அழகான சிறுமிகள் பலர் வளர்க்கப்பட்டு வந்தனர். கடவுளுக்குப் பொட்டுக்கட்டுவதற்கென்றே கொண்டு வந்து சேர்க்கப்பட்டவர்கள் அவர்கள். தினமும் அவர்கள் உடலில் தைலம் தடவிக் குளிப்பாட்டப் பட்டு, உணவளித்து வளர்க்கப்பட்டனர். நாட்டியம் பாட்டு முதலியன அவர்களுக்குப் போதிக்கப்பட்டன. எனவேதான் பழமையான இந்திய நாட்டில் தேவதாசிகளே நாட்டியத்திலும், பாட்டிலும் சிறந்து விளங்கினர். கடவுள் மீது பாடப்பட்ட சில பாடல்களைப் பாட லட்சுமி மறுத்தபோது அவளுக்கு சாட்டையடி கொடுத்துப்பாட வைக்கப்பட்டாள்.

அங்கிருந்தவர்களில் 10 வயதான தாரை என்பவள் பணக்காரத் தந்தைக்கு மகளாகப் பிறந்தவள். அவளது தந்தைக்கு ஆண்குழந்தை பிறக்கவேண்டும் என்பதற்காக வேண்டுதல் செய்து கொண்டு இவளுக்குப் பொட்டு கட்டி கோயிலில் விட்டு விட்டனர். ஒருநாள் இரவு லட்சுமியும் தாரையும் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு அலறல் கேட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அதுவலி மிகுதியால் அழும் ஒரு சிறுமியின் குரலாக இருந்தது. தாரை கூறினாள், "அது எசலியின் குரல். அவள் மிகவும் அழகானவள். ஆனால் இன்னும் பக்குவம் பெறவில்லை. ஆனால் குருக்கள் அதுவரைப் பொறுத்திருக்க மறுத்துவிட்டார். ஆனால் என்னை இவர்கள் எதற்கும் வற்புறுத்த முடியாது. என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும்" என்று கூறினாள்.

மறுநாள் அவள் கிணற்றில் பிணமாக மிதந்தாள்.

லட்சுமிக்கு 7வயது நிறைந்தபோது அவளுக்கு நாட்டிய அரங்கேற்றம் நடந்தது. அவளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்த பாடல்களும், அவற்றிற்கான அபிநய பாவங்களும் அவளக்கு வெறுப்பை உண்டாக்கியிருந்தன.

அவளது அரங்கேற்றத்தின்போது அவளது மனக்கண்ணில் தன்னுடைய இளம் வயதில் தான் வெள்ளை மருத்துவப் பெண்ணுடன் அவர்கள் ஆலயத்திற்குச் சென்றதும், அங்கு அவர்கள் முணுமுணுப்பாக பிரார்த்தித்த வார்த்தைகளும் நினைவிற்கு வந்தது. யாரோ தன்னை, அழைப்பதைப் போல உணர்ந்து அவள் ஓடத் தலைப்பட்டாள். திடுக்கிட்ட பிற தேவதாசிகளும் அர்ச்சகர்களும் அவளைப் பின் தொடர்ந்து ஓடினர். அவர்களிடம் பிடிபட்டால் தாசித் தொழிலில் ஈடுபட வேண்டியதுதான். விரைந்து ஓடிய அவள் தன் எதிரே வந்த ஒரு வெள்ளைப் பெண்மணியைக் கட்டிப் பிடித்துச் கொண்டாள்.

அவளைத் தொடர்ந்து வந்தவர்கள், அந்த வெள்ளைக்காரப் பெண்மணியிடம், "இவள் எங்கள் கோயில்தாசி, இவளை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று கேட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



அந்தப் பெண்மணி "இவள் எங்கள் உதவியை நாடி வந்துவிட்டாள். யேசுவின் பெயரால் இவளைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் பொறுப்பு. இவளை உங்களிடம் ஒப்படைக்க இயலாது" என்று உறுதியாகக் கூறிவிட்டாள்.

வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். பின்னர் லட்சுமி கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கப்பட்டாள். அங்கு கோயிலில் நடனமாடவும், பாடவும், எவருக்கும் காமவெறியைத் தணிக்கும் கருவியாகவும் அவள் செயல்பட வேண்டியதில்லை.

அந்த வெள்ளைக்காரப் பெண்மணி இந்த நாள்வரை கோயில்களில் தேவதாசிகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்களை மீட்கும் பணியிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறாள்.

படிப்பகம்

www.padippakam.com

# 8

*உங்கள் வீடுகளில் நாய்கள் வளர்க்கலாம். பசுக்கள் வளர்க்கலாம். நீங்கள் பசுக்களின் கோமியத்தை அருந்தலாம். அவற்றின் சாணியைச் சாப்பிட்டு உங்களது தீவினைகளைப் போக்கிக் கொள்ளலாம். ஆனால் ஒரு தீண்டாதவனின் அருகில் கூட நீங்கள் போகக்கூடாது.*

*- ராவ்பகதூர் எம்.சி. ராஜா,*
*ஒடுக்கப்பட்ட இந்துக்கள், பக்கம் 6, 1925*

"இந்தியாவில் உமது வேலையின்போது நீ எந்த விதத்திலும் இரக்கத்திற்கோ, கோபத்திற்கோ இடம் கொடுத்து விடக்கூடாது. ஒரு மனிதன் இரக்கப்பட்டால் பலவித இன்னல்களை எதிர்கொள்ள நேரிடும். அதைப்போலவே கோபம் கொண்டாலும் தனது பெருமையை இழக்க நேரிடும். ஒரு இந்துவுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது அவர்களது மத நம்பிக்கைகள்தான். அவர்களது மத நம்பிக்கைகளில் நாம் தலையிடக்கூடாது என்று கட்டளையிடப்பட்டுள்ளோம். நாமும் அவ்வாறே உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறோம். பொறுப்புள்ள உத்தியோகத்தை ஏற்குமுன்னர் நான் கூறிய இந்த அறிவுரைகளை நீர் நன்கு மனதில் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்."

ஒரு பெரிய நகரத்தின் மருத்துவ சாலையில் பன்னிரண்டு இந்திய மருத்துவர்களுக்குத் தலைவராகப் பதவி ஏற்கவிருந்த டாக்டர் ஹாப்கூட், தனது மூத்த அதிகாரி தனக்குக் கூறிய மேற்கண்ட அறிவுரைகளுக்கு நன்றி கூறிவிட்டு

www.padippakam.com



அப்படியே நடப்பதாக வாக்களித்து விட்டுப் புறப்பட்டார் என்றாலும் அவர் மனதில் "இரக்கமில்லாத கிழட்டுப் பிணமே! பகுத்தறிவோ பரந்த எண்ணமோ, கருணையோ இல்லாத ஜந்துக்களா நாம்! எல்லாம் ஆண்டவன் செயல் என்று நாம் ஒதுங்கிச் செல்வதால் அல்லவா இந்தியர்கள் மிகவும் துன்பப் படுகிறார்கள்" என்றே சிந்தனை ஓடியது.

வேலை சமயங்களில் இவரது நடவடிக்கைகளைப் பிடிக்காத இவரது உதவியாளர்களான டாக்டர்கள் "கீழ்நாட்டிடமிருந்து மேல்நாட்டார் கற்றுக் கொள்ளவேண்டியது நிறைய இருக்கிறது" என்று கூறினர்.

பொறுமையிழந்த நிலையில் "பொறுமையே மிகவும் முக்கியம்" என்று பதிலளித்தார் ஹாப்கூட்.

ஒருநாள் ஏனைய மருத்துவர்களின் அலட்சியத்தால் இரண்டு நோயாளிகள் இறந்துவிட்டனர். அதைப் பற்றி விசாரித்தபோது, "எப்படியிருந்தாலும், இருவரும் சாகப் போகிறவர்கள்தான். அத்துடன் அவர்கள் கீழ்சாதிக்காரர்கள் தானே"! என்று பதில் வந்தது. அப்படிக் கூறியவர் பட்டமேற்படிப்புப் படித்த பொறுப்பான பதவியிலிருக்கும் டாக்டர் சாட்டர்ஜி என்பவராகும்.

திகைத்துப்போன ஹாப்கூட், "நோயாளிகளில் நாம் சாதி வித்தியாசம் பார்க்கலாமா"? என்று கேட்டார்.

"சாதிக் கொள்கைகள் எல்லா இடத்திற்கும் பொருந்தும். சாதிதான் எங்களுக்கு ஆன்மீக வழிகாட்டி. இதை எங்களிடமிருந்து மேல் நாட்டினர் கற்றுக் கொள்ளும் காலம் வரும்"! என்ற சாட்டர்ஜியின் பதிலால் எரிச்சலடைந்த ஹாப்கூட் தனது மனநிலையைச் சமன் செய்ய விரும்பி தனது குதிரையைக் கொண்டுவரச் சொல்லி சவாரி கிளம்பினார்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் பணியேற்ற நாளிலிருந்தே இவருக்கு எதிர்ப்புகளே மிகுந்திருந்தன. கோடை வெப்பமும், சமீப காலமாக அவருக்கு வந்து கொண்டிருந்த முறைக் காய்ச்சலும் அவரைப் பலவீனமடையச் செய்து கொண்டிருந்தன.

குதிரை சவாரியின் காரணமாக அவரது மனதில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. சாதி பேதங்களினால் ஏற்படும் நல்லவைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதலாமா என்ற வகையில் அவரது சிந்தனை சென்றது. ஒரு செய்தியைக் கேட்டவுடன் அந்தத் தாக்கத்தினால் நமது சிந்தனை மங்கிவிடுகிறது. சிலர் விஷயங்களை மாற்றிக்கூறியும் நம்மைக் குழப்பி விடுகின்றனர். எப்படியிருந்தாலும் ஆதிகாலம் முதல் பெரியவர்கள் வகுத்துத் தந்த நெறிகளின் பெருமை குன்றுவதில்லை. எது சரி எது தவறு என்று எப்படி முடிவு செய்வது? கிருஷ்ணனை விட கிறிஸ்து சொன்னதுதான் சரி என்று எப்படிக் கூறுவது? இந்த வகையில் சிந்தனை செய்து கொண்டே சென்று கொண்டிருந்த அவருக்கு எதிரே ஏர் கலப்பைகளை சுமந்து கொண்டு கருப்பு நிறமனிதர்கள் பலர் வந்து கொண்டிருந்தனர்.

ஹாப்கூட்டின் குதிரைக்குச் சற்று முன்னதாக நடந்து கொண்டிருந்த ஒரு இந்தியர் எதிரே இவர்களைக் கண்டதும் தன் வாயால் ஒரு ஒலி செய்தார். இந்தக் கூச்சலைக் கேட்டதும் அந்தக் கருப்பு மனிதர்கள் அனைவரும் பாதையை விட்டு விலகி உயிருக்குப் பயந்தவர்கள்போல பாதையை ஒட்டியிருந்த சேறும் சகதியுமான சதுப்பு நிலத்தில் குதித்துவிட்டனர். அத்துடன் அவர்களும் தங்கள் வாயால் உரக்க ஒலி செய்தார்கள்.

இந்தியர் தன் வழியே சென்றதும் ஹாப்கூட் வியப்படைந்தவராகத் தன் குதிரையை விட்டிறங்கி, உடலெல்லாம் சேறாக பாதையில் ஏறி நடக்கத் தொடங்கிய

படிப்பகம்

www.padippakam.com



அவர்களை அணுகி, "அவரைக் கண்டதும் நீங்கள் ஏன் பாதையை விட்டுக் கீழிறங்கினீர்கள்? ஏன் ஒரு மாதிரி சப்தம் செய்தீர்கள்"? என்று விசாரித்தார்.

அவர்களில் வயதான கிழவன், "துரையே, நாங்களெல்லாம் தீண்டாதவர்கள். பார்ப்பனர்கள் வருவதைக் கண்டால் நாங்கள் அவர்கள் கண்ணில் படாமல் ஒதுங்கி விடுவதோடு, நாங்கள் அசுத்தம், அசுத்தம் என்று கூச்சலிட வேண்டும். வாயைத் திறந்து கூச்சலிட்டால் அசுத்தம் பரவும் என்பதால் வாயைக் கைகளால் மூடிக் கொண்டு கூச்சலிடுவோம். இப்படிச் செய்யாவிட்டால் கடவுள் எங்களுக்குத் தண்டனை தருவார்"! என்று விபரம் கூறினான்.

"இப்போது நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்"?

"அதோ தெரிகிறதே ஒரு தோப்பு, அதன் நடுவில்தான் எங்களது குடிசைகள் இருக்கின்றன. அங்குதான் போகிறோம்."

அவர்களுடன் தானும் அங்கு வருவதாகக் கூறி ஹாப்கூட் உடன் சென்று அவர்களிடம் அவர்கள் வாழ்க்கை பற்றிய விபரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். கொசுவும், மூட்டைப் பூச்சியும் கடித்து அவரது உடலைப் புண்ணாக்கியது. அவரைச் சுற்றி சேரி ஆடவரும் குழந்தைகளும் கூடிவிட்டனர். பெண்கள் தங்கள் குடிசையில் இடுக்கு வழியே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஹாப்கூட் கேட்டார். "நீங்கள் ஏன் இப்படி உடலெல்லாம் அழுக்காக அருவருக்கும்படி இருக்கிறீர்கள்? ஏன் குளித்து சுத்தமாக இருக்கக் கூடாது"?

படிப்பகம்

www.padippakam.com



"துரை அவர்களே, நாங்கள் குளிக்க எங்கே போவது? எங்களுக்கென்று ஒரு கிணறு இல்லையே"?

"ஊருக்குள் உள்ள கிணறுகளிலிருந்து நீங்கள் ஏன் தண்ணீர் கொண்டு வரக்கூடாது"?

அவையெல்லாம் உயர்ந்த சாதிக்காரர்களின் கிணறுகள். அவற்றின் அருகே கூட நாங்கள் போகக்கூடாது. நாங்கள் கிணற்றுத் தண்ணீரைத் தொட்டால் தண்ணீரும் தீட்டாகி விடும். எங்களை அடித்தே கொன்றுபோடுவார்கள். போன ஜன்மங்களில் செய்த பாவத்தின் பயனாக நாங்கள் தீண்டாத சாதியில் வந்து பிறந்து விட்டோம்."

"ஏன் நீங்களாகவே உங்களுக்கென்று ஒரு கிணறு தோண்டிக் கொள்ளக்கூடாது"?

"அது எப்படி முடியும்! எங்களுக்கென்று பொட்டு நிலம் கூடக் கிடையாதே! இடம் இருந்தால்தானே கிணறு தோண்ட முடியும்"?

"பிறகு உங்களுக்குத் தண்ணீர் எப்படித்தான் கிடைக்கிறது"?

"எங்காவது குண்டு குழிகளில் இருக்கும் தண்ணீரை எடுத்துக் கொள்வோம். பெரும்பாலும் சிறிது தூரத்தில் உள்ள ரயில்வே ஸ்டேஷன் சென்று, ரயில் வரும்போது எஞ்சின் டிரைவரிடம் கெஞ்சிக் கேட்டு தண்ணீர் கொண்டு வருவார்கள் எங்கள் பெண்கள்."

"ஏன் உங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை"!

படிப்பகம்

www.padippakam.com



"அரசாங்கம் பள்ளிகளை ஏற்படுத்தியிருந்தாலும் அவற்றை நிர்வகிப்பது மேல்சாதிக்காரர்கள்தான். அவர்கள் எங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அண்ட விடுவதில்லை."

"உங்களுக்கு தினமும் என்ன கூலி கிடைக்கிறது"?

"நாளொன்றுக்கு இரண்டணா கிடைக்கும்."

"ஆனால் ரயில்வேயில் எப்பொழுதும் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்களே! அவர்கள் ஒரு நாளைக்கு நாலணா தருகிறார்களே"!

"உண்மைதான். ஆனாலும் நாங்கள் அங்கு போக முடியாது. எங்களது எஜமான்கள் பல தலைமுறைகளாக எங்களுக்குக் கடன் கொடுத்து வட்டிக்குமேல் வட்டி சேர்ந்து நாங்கள் அடிமைகளாகவே ஆகிவிட்டோம். வேறு எங்கும் வேலைக்குப் போவதோ, இந்த இடத்தைவிட்டு வேறு இடத்திற்குப் போவதோ முடியாது."

"பார்ப்பனக் குருக்கள், கோயில்களில் ஆண்டவனுக்கு சேவகம் செய்பவர்கள், அவர்கள் கூடவா உங்களைக் கரையேற்ற முயற்சிப்பதில்லை"?

"எங்களுக்கு எவ்வளவு துன்பம் வந்தாலும், எங்களுக்கு என்னகேடு வந்தாலும் அவர்கள் எங்கள் விஷயத்தில் தலையிட மாட்டார்கள். நாங்கள் முன்பிறவிகளில் செய்த பாவங்களின் விளைவாகவே தீண்டாதவர்களாகப் பிறந்திருப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன. கடவுளின் விதி அவ்வாறே கூறுகிறது. எங்களுக்கு ஏதாவது நன்மை செய்தால் அவர்கள் கடுமையான நரகத்திற்குச் செல்ல நேரிடும்."

படிப்பகம்

www.padippakam.com



இதையெல்லாம் கேட்ட ஹாப்கூட் வேதனையும் வெறுப்பும், கோபமுமடைந்தார். அவர்கள் மீது அவருக்குப் பெரிதும் இரக்கம் தோன்றியது.

ஹாப்கூட் தங்கட்காக வருந்துவதைக் கண்ட அவர்கள், "துரையும் நம்மைப்போலவே தீண்டப்படாதவர்தான், என்றாலும் நமக்காக எவ்வளவு மனம் இரங்குகிறார்" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அப்பொழுது ஒரு சிறுவன், "துரை நம்மைப்போல தீண்டாதவர் அல்ல. அன்று இங்கு வந்த கிறிஸ்துவ பாதிரி கூறிய கருணை நிரம்பிய கடவுள்தான் இவர். என்னைப் போன்ற சிறுவர்களுக்கு இரக்கம் காட்டும் கடவுள்" என்று கூறி ஹாப்கூட்டின் கால்களில் விழுந்தான்.

ஹாப்கூட் திடுக்கிட்டு அந்தச் சிறுவனைத் தூக்கி எடுத்தார். அந்தச் சிறுவனுக்கு நல்ல களையான முகம், அவன் கண்களில் அன்புக்கு ஏங்கும் ஏக்கம் பளிச்சிட்டது. அவர் அந்தக் கிழவனிடம் "என்ன சொல்கிறான் இவன்"? என்று கேட்டார்.

கிழவன் "இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கிறிஸ்தவ பாதிரியார் இங்கு வந்திருந்தார். அவர் சொன்னது எல்லாமே எங்கள் நினைவில் இல்லை. ஆனால் அவர் ஒரு புதிய கடவுளைப் பற்றிக் கூறினார். அவர் விரைவில் வருவார் என்றும் குழந்தைகளிடம் அன்பாக இருப்பார் என்றும் கூறினார். அந்தக் கடவுள் நீங்கள்தானா என்று கேட்கிறான்" என்று பதிலளித்தான்.

உலகத்தில் எந்த நாட்டுக்குழந்தைகளும் அனுபவிக்காத துயரத்தை இந்தக் குழந்தைகள் அனுபவிப்பதாக ஹாப்கூட் உணர்ந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் அவர்களிடம், "ஏ, இரக்கத்திற்குரிய மக்களே! ஜாதி, மதபேத பேதங்களால் மனிதர்களாகவே மதிக்கப்படாத உங்களைக் கேட்கிறேன். நீங்கள் என்ன புழுக்களா? உங்களுக்கு நெஞ்சுரம் இல்லையா! ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் இங்கு வந்ததாகக் கூறினீர்களே, நீங்கள் அனைவரும் அவரிடம் சென்று இந்த மிருக்கத்தனமான மதத்தை விட்டுவிட்டு ஏன் கிறிஸ்தவர்களாகி விடக்கூடாது"? என்றார்.

அவர்கள் அனைவரும் முடியாது என்று தலையசைத்தனர்.

"செய்யலாம். ஆனால் எங்களுக்குப் பயமாக இருக்கிறது. கிறிஸ்தவப் பாதிரியார் இங்கு வந்து சென்ற மறுநாளே எங்களது கோயில் அர்ச்சகர்கள் ஒரு ஆளை அனுப்பி நாங்கள் மதம் மாறினால், எங்களது கடவுளின் சாபத்திற்கு ஆளாக நேரிடும் என்றும், வியாதிகளும், பீடைகளும், வந்துசேரும் என்றும் கூறி அனுப்பியுள்ளனர். நாங்கள் மதம் மாறினால் கண்டிப்பாக அது பலிக்கும்" என்று கூறிவிட்டு "ஐயா, தாங்கள் யார்"? என்று ஹாப்கூட்டைக் கேட்டனர்.

"நான் ஒரு டாக்டர். எங்களது கடவுள் கொடுமையானவர் அல்ல. கருணை நிரம்பியவர். ஒரே கடவுள். இரக்கமுள்ளவர்" என்று கூறினார்.

முதலில் பேசிய சிறுவன் மட்டும் "எனக்குப் புரிகிறது. நன்றாகத் தெரிகிறது" என்று முணுமுணுத்தான்.

மறுநாள் ஹாப்கூட் சாட்டர்ஜியிடம் "இந்தியாவில் தீண்டத்தகாதவர்கள் எவ்வளவுபேர் இருப்பார்கள்" என்று விசாரித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



"சரியாகத் தெரியவில்லை. ஆனால் 6கோடிப் பேர் வரை இருக்கலாம். பண்டைக்காலம் முதலே தீண்டப் படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் இவர்கள்" என்று பதிலளித்தார் சாட்டர்ஜி.

ஒருமாதம் சென்றிருக்கும்.

முதல்நாள் நள்ளிரவு வரைக் கடுமையான வேலைகளில் ஆழ்ந்திருந்ததால் மறுநாள் காலையும் சோர்வாக உணர்ந்த ஹாப்கூட் மருத்துவ மனையில் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தபோது, அறுபதடி தூரத்தில் கட்டாந்தரையில் ஒரு உருவம் விழுந்துகிடப்பது தெரிந்தது.

தனது உதவியாளர்களை அழைத்து "ஒரு சிறுவன் விழுந்து கிடப்பது போலத் தெரிகிறதே" என்று விசாரித்தார்.

"ஆமாம் அது ஒரு சிறுவன்தான்", ஒரு உதவியாளர் பதிலளித்தார்.

"அவன் அங்கே கிடப்பதை முன்பே பார்த்து விட்டீர்களா? என்ன கோளாறு என்று பார்த்தீர்களா"?

"பார்த்தோம். அவனுக்குக் கடுமையான ஜுரம் அடித்துக் கொண்டிருக்கிறது."

"ஜுரம் அடிக்கும் ஒரு சிறுவனை கடுமையான வெய்யிலில் அப்படியே போட்டுவிட்டீர்களே! அவனை தூக்கிவரச் செய்து சிகிச்சையளிக்க வேண்டாமா"?

படிப்பகம்

www.padippakam.com



"அவன் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த தாழ்ந்த சாதிச் சிறுவன். அவனை நம்முடைய மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ள இயலாது."

"ஏன் இயலாது! அவன் ஒரு உயர்சாதியைச் சேர்ந்த பையனாக இருந்திருந்தால் அவனை இப்படி விட்டுவிட்டிருப்பீர்களா"? என்று கோபமாகக் கூறிக்கொண்டே அந்தச் சிறுவனை நோக்கிச் சென்றார் ஹாப்கூட்.

அந்தச் சிறுவனுக்கு பன்னிரண்டு வயதிருக்கலாம். உடலில் துணியில்லை. கருமையான நிறம் கொண்ட அவன் காசநோய் கொண்டவனாக இருந்ததுடன், கடுமையான ஜுரத்தினாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

"தம்பி, தம்பி எழுந்திரு" என்று ஹாப்கூட் அவனை எழுப்பினார். அவன் மெதுவாகக் கண்களைத் திறந்து அவரைப் பார்த்தான். பிறகு, "துரையே, ஒரு செய்தியை உங்களிடம் சொல்லதான் நான் இங்கு வந்தேன். இப்பொழுது நாங்களெல்லோரும் கிறிஸ்தவர்கள் ஆகிவிட்டோம். இப்போது உங்கள் கடவுள்தான் எங்கள் கடவுளும். நாங்கள் கிறிஸ்தவர்கள் ஆனதும் எங்களது எஜமானர்கள் எங்கள் குடிசைகளை எரித்துவிட்டு எங்களை விரட்டி விட்டனர். நாங்கள் வேறு எங்காவது போக வேண்டும்" என்று கூறிக் கொண்டிருந்தபோதே மயக்கமாகிச் சாய்ந்து விட்டான்.

ஹாப்கூட் அவனை அப்படியே தூக்கிச் சென்று மருத்துவ மனைக்குள் ஒரு படுக்கையில் படுக்க வைத்துவிட்டு, தனது உதவி மருத்துவர்களைப் பார்த்து, "கோழைகளே, போக்கிரித்தனம் கொண்டவர்களே! நீங்களெல்லாம் டாக்டர்களா! இன்னும் 1000 வருஷம் போனாலும் கூட



படிப்பகம்

www.padippakam.com



நீங்களெல்லாம் டாக்டராக முடியாது. டாக்டர் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா? தீண்டாதவன் என்றால் அவன் மனிதனில்லையா! கேடுகெட்ட நீங்கள் என் முகத்தில் விழிக்காமல் எல்லோரும் இங்கிருந்து போய்விடுங்கள்" என்று கடுமையான கோபத்துடன் சப்தம் போட்டார்.

ஹாப் கூட்டின் கடுமையான சிகிச்சையினால் 15 நாட்களில் அந்தப் பையன் குணமடைந்தான்.

ஒருநாள் அவருக்கு அவரது மேலதிகாரியிடமிருந்து அழைப்பு வந்தது.

"ஹாப்கூட், உங்கள் மீது மருத்துவமனையிலுள்ள இதர மருத்துவர்கள் புகார் எழுதியிருக்கின்றனர். அவர்களை மரியாதை இல்லாமல், மனம் புண்படும்படி கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டியதாகக் குறிப்பிட்டுள்ளனர்" என்று விசாரணையைத் தொடங்கினார் மேலதிகாரி.

ஹாப்கூட் அவரிடம் நடந்தவைகளை அப்படியே விவரித்தார்.

"இதுதான் நடந்ததா" என்று கேட்ட மேலதிகாரி "என்ன ஆனாலும் உங்கள் செய்கை கண்டிக்கத்தக்கதுதான். இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளாதீர்கள். அப்படி மீண்டும் நடந்து கொண்டால் உம்மை டிஸ்மிஸ் செய்யநேரிடும். இந்தப் புகாருக்கு அன்று உங்களுக்குக் கடுமையான ஜுரம் இருந்ததாகவும், அதன் விளைவாக என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசிவிட்டதாகவும் சமாதானம் எழுதிக் கொடுங்கள்" என்று கூறிவிட்டு, "நான் கூறும் இரண்டு செய்திகளைக் கவனமாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இனி அதன்படியே செயல்படுங்கள். ஒன்று உத்தியோக முறையில் இரக்கத்திற்கு மனதில் இடங்கொடுக்கக் கூடாது. இரண்டாவது இந்தியர்கள் மீது நாம் அவர்கள் பழக்கவழக்கங்களுக்காகக் கோபம் கொள்ளக்கூடாது. இந்த இரண்டையும் கடைப் பிடிக்காவிட்டால் நீங்கள் பலவித சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும். அத்துடன் நமது அரசாங்கம் பரந்தமனப் பான்மையுடன் ஆட்சிபுரிவது உங்களுக்குத் தெரியாதா ஹாப்கூட்" என்று அறிவுரையும் கூறினார். ஹாப்கூட் தம் மேலதிகாரி கூறிய பரந்த மனப்பான்மை பற்றிச் சிந்தித்துக் கொண்டே நடக்கத் தொடங்கினார்.

❋

படிப்பகம்

www.padippakam.com

# 9

***இந்தியா ஒரு ஞானபூமி என்பதனை நாம் அனைவரும் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் நம் நாட்டுப் பெண்களை நாம் நடத்தி வருகின்ற முறையில் பார்த்தால் இந்தியா அப்படியில்லை என்றுதான் கூறவேண்டும்.***

***- கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீதர்மம், பக்கம் 37 ஜனவரி, 1925.***

சென்னை மாகாணத்தில் பழமையான கோயில் இருந்த ஒரு நகரத்தில், அந்தக் கோயிலைச் சுற்றியிருந்த நான்கு மாடவீதிகளிலுமிருந்த பிராமண வீடுகளில் ஒன்று. அந்த வீட்டின் மாடியிலிருந்த ஒரு அறைதான் அந்த வீட்டுப் பெண்கள் ஒன்றுசேரும் இடமாக அமைந்திருந்தது. ஜன்னலே அற்ற அந்த அறை இருட்டாக இருந்ததுடன் வற்றல், வடகம், மற்றும் பல பொருட்களையும் சேமித்து வைத்திருந்ததனால் அவற்றிலிருந்து எழும் ஒருவகை நெடியும் கொண்டதாக இருந்தது.

வீட்டின் தலைவனது வயதான தாய், அவனது மனைவி மற்றும் அவனது சகோதரர் இருவரது மனைவிகள், விதவையாகி பிறந்த வீடு வந்து சேர்ந்திருந்த அவனது இரண்டு சகோதரிகள், அவனது பெரிய தந்தை, சிறிய தந்தை மற்றும் அவர்களது குடும்பத்தினருடன், அவனுடைய மகளாகிய சிறுமி அலமேலு இப்படி ஒரு பெரிய கூட்டமே அந்த வீட்டில் வசித்து வந்தது. வீடு முழுவதும் குழந்தைகள் ஓடிக்கொண்டும், ஆடிக் கொண்டும் இருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



குடும்பத்தில் உள்ள பெண்களுக்குப் பெரிய வேலைகள் எதுவுமில்லை. தங்களது கணவனுக்குப் பணிவிடை செய்வது, கடவுளுக்குப் பூஜை செய்து வழிபடுவது, உணவு சமைத்து குனிந்த தலை நிமிராமல் கணவனுக்குப் பரிமாறுவது, தூங்குவது, வெற்றிலை போட்டு மெல்லுவது, நகைகளைப் பற்றியும், உடைகளைப் பற்றியும், கணவனின் அன்பை எப்படிப் பெறுவது என்பது குறித்தும், மந்திர தந்திரங்களைப் பற்றியும் மற்றும் ஊர்வம்புப் பேசியும் காலத்தை ஓட்டி வந்தனர்.

இவர்களில் யாருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. படித்த பெண்ணைத் தன் வீட்டின் மருமகளாக்கிக் கொள்ளத் தாய்க்கிழவி ஒப்புக் கொள்வதில்லை. இவர்களில் யாருக்கும் வெளி உலகத்தைப் பற்றி எதுவுமே தெரியாது.

சுகாதாரமற்ற அந்தச் சூழ்நிலை காரணமாக அங்கிருந்த பெண்கள் சதா இருமிக்கொண்டேயிருந்தனர். ஒரு பெண் ரத்தம் கக்கி இறந்தே போனாள்.

ஒருமுறை அங்குவந்த ஒரு வெள்ளைக்கார பெண்டாக்டர், சூரிய வெளிச்சமோ, நல்ல காற்றோ உள்ளே வராததும், போதிய உடல் உழைப்பு இல்லாததுமே அந்தப் பெண்களின் ஆரோக்கியக் குறைவுக்குக் காரணமென்று கூறியது கிழவியின் கோபத்தைக் கிளப்பி விட்டது. “வெயிலும், வெளிப் பழக்கமும், உழைப்பும் தாழ்ந்த சாதிமக்களுக்குத்தானே வேண்டும், எங்களுக்கு எதற்கு” என்று கூறிவிட்டாள். அதன்பிறகு எந்த ஒரு டாக்டரும் அந்த வீட்டிற்குள் நுழைய அவள் அனுமதித்தது கிடையாது.

படிப்பகம்

www.padippakam.com



பலபெண்கள் நோய் கண்டு இறந்தார்கள். என்றாலும் என்ன, புதிய பெண்கள் மனைவிகளாக வந்து சேர்ந்தார்கள். அந்த அறையும் வீடும் மட்டும் மாறவே இல்லை.

அந்தக் குடும்பத்தில் யாரும் கெட்டவர்கள் அல்ல. வீட்டின் ஆண்கள் தங்களது மனைவிகளை அன்பாகவே நடத்தி வந்தனர். பெண்களும் தங்களது கணவர்களை பக்தியுடனேயே மதித்து வந்தனர். பெண்கள் யாரும் மலடிகளாக இல்லாமல் நிறையக் குழந்தைகளைப் பெற்று வந்தது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தவிர இறந்து போன பெண்களுக்காக யாரும் கவலைப்படுவதும் இல்லை. அவர்கள் புண்ணியவதிகள். விதவையாக வாழ்ந்து அவலப்படாமல் சுமங்கலியாக இறந்து விட்டார்களே! கிழவி தன் பேரப்பிள்ளைகளை சதா கொஞ்சிக் கொண்டே இருப்பாள். அந்தக் குழந்தைகளும் வேண்டியதெல்லாம் கிடைக்கப்பெற்று சந்தோஷமாக இருந்து வந்தனர். அந்தக் குடும்பத்தில் யாரும் எந்த மாறுதல்களையும் விரும்பியது கிடையாது.

அலமேலுவுக்கு அவளது சிறுவயது முதலே வீட்டுப் பெண்கள் பேசிக்கொண்ட ஆண், பெண் உறவுகுறித்த பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு பெண்களின் ஒரே கடமை கணவனுடன் கூடுவதுதான் என்ற எண்ணம் வலுப்பெற்றிருந்தது. கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பது பாவம் என்றும், அப்படியிருந்தால் நரகத்திற்குப் போகவேண்டும் என்றும் நம்பினாள். நாள் தவறாது தனது தாய் தனக்கச் சொல்லிக் கொடுத்திருந்த ஸ்தோத்திரத்தைச் சொல்லித் தனக்கு ஸ்ரீராமனைப்போன்ற ஒருவன் கணவனாக வரவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவளுடைய தமக்கை ராஜம்மாளுக்கு அவளது சிறு வயதிலேயே மிகவும் சிறப்பாக திருமணம் நடந்தேறியிருந்தது. சென்ற ஆண்டுதான் சாந்தி முகூர்த்தம் நடந்து அவள் கணவன் வீடு சென்றிருந்தாள். ஆனால் ஆறே மாதத்தில் அவள் தன் பிறந்தவீடு வந்தபோது அவளது உடல் மிகவும் நலிந்து போயிருந்தாள். அவள் தன் கணவன் வீட்டில் மிகவும் துன்பப் பட்டிருக்க வேண்டும் என்பது நன்கு புரிந்தது. அங்கு தான்பட்ட கஷ்டங்களைப் பற்றி ராஜம்மாள் விசாரித்தபோது, அவளது மெலிந்த விரல்களைப் பிடித்துக் கொண்டு அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள் அலமேலு. "அந்தக் குடும்பத்து ஆண்களே இரக்கமற்றவர்கள். மனைவிகளைக் கொல்லும் கொடியவர்கள்" என்றாள் ராஜம்மாள்.

ராஜம்மாள் சிறிது நாட்களில் கணவன் வீடு அனுப்பப் பட்டாள். அலமேலுவுக்கு கணவன் வீட்டில் அவள்பட்ட, படும் கஷ்டங்கள் நினைவில் தோன்றி மனம் நைந்தாள். இரவில் அந்த நினைவுகளே அவளது கனவில் வந்து அவளைத் துன்புறுத்தின.

ஓராண்டிற்குப் பிறகு மீண்டும் ராஜம்மாள் பிறந்தவீடு வந்தாள். இம்முறை நடக்கக்கூட முடியாதபடி பலவீனப்பட்டுப் போயிருந்தாள். ஒரு காரில் வந்த அவளை வீட்டுப் பெண்கள் தூக்கி எடுத்து வீட்டினுள் கொண்டு சென்றனர். ராஜம்மாளின் நிலை கண்டு அனைவரும் கண்ணீர் வடித்தனர்.

இதையெல்லாம் கண்ட அலமேலு மனதிற்குள் நடுங்கினாள். அவள் மனதில் சதா ஒரு பயம் குடிகொண்டது. அவளது இந்தப் பய உணர்ச்சி குறித்து வீட்டுப்பெண்கள் தங்களுக்குள் பேசிக் கவலைப் பட்டுக்கொண்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



ராஜம்மாள் மீண்டும் தான் அங்குபடும் கஷ்டங்களைக் கண்ணீருடன் விவரித்தாள், வீட்டுப் பெண்களெல்லாம், அந்த வீட்டு ஆண்களின் இரக்கமற்ற குணம் குறித்துப் பேசி ஓய்ந்தனர். அனைத்தையும் அலமேலு கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

ஓரளவு உடல் நலம் தேறியதும் ராஜம்மாளை மீண்டும் கணவன் வீடு அனுப்ப எற்பாடு செய்தனர். அலமேலு தன் பாட்டியிடம், "பாட்டி உங்களுக்கு இரக்கமே இல்லையா! ராஜம்மாள் அவள் வீட்டில் படும் கஷ்டங்களைப் பற்றி அவ்வளவு கூறியும் எப்படி மீண்டும் அங்கு அனுப்பத் துணிந்தீர்கள்"? என்று கேட்டாள்.

"உன் மனதில் இப்படிப்பட்ட எண்ணமே வரக்கூடாது. உனக்கு எதுவும் தெரியாது. நன்றாகக் கேட்டுக் கொள். உலகத்தில் பெண்களுக்குக் கணவனே தெய்வம். அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் விருப்பம்போலத்தான் செயல்பட வேண்டும். அவன் அடித்தாலும் அந்தக் கையைத் தான் முத்தமிட வேண்டும். ஒரு பெண் தன் செயலாலும், பேச்சாலும் கணவனை தெய்வமாகவே போற்ற வேண்டும். இதை மற்றவர்களும் அறியும் வண்ணம் கீழ்ப்படிந்தே நடக்க வேண்டும். நாம் பிராமண சாதியினர். நம் குல வழக்கங்களை நாமே காப்பாற்றா விட்டால் வேறு யார் காப்பாற்றுவார்கள்! ஆகவே என்ன நடந்தாலும் உன் தமக்கை புக்ககம் செல்லத்தான் வேண்டும். அங்கு எது நடந்தாலும் அது அவளது தலைவிதி. அவள் விதியை அவள் அனுபவித்துத்தான் தீரவேண்டும். அவளது விதிக்கு எதிராகச் செயல்பட்டால் நாம் பாவம் செய்தவர்கள் ஆவோம். கடவுள் நம்மைத் தண்டிப்பார்" என்று பாட்டி அலமேலுவுக்கு நீண்ட விளக்கம் தந்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



சிறிது காலத்தில் அலமேலுவுக்கும் திருமணம் நிச்சயமாகியது. தனக்கு வரப்போகும் மாப்பிள்ளை யார் என்று அலமேலு தன் பாட்டியைக் கேட்டாள்.

"அவர் அழகானவர். உன் தந்தையை விட பருமனாக இருப்பார். மிகவும் பணக்காரர். உனக்கு நிறைய நகைகள் போடுவார்" என்ற கிழவியிடம் அலமேலு அது யார் என்று மேலும் கேட்கவே அவள் கூறினாள்.

"உன் அக்கா ராஜம்மாளின் புருஷனது அண்ணன்தான் அவர். நீ அவருக்கு நான்காம்தாரமாகப் போகிறாய்"!

❄

படிப்பகம்

www.padippakam.com

# 10

விதவைகளை எரித்துவிடாதீர்கள். பெண் குழந்தைகளைக் கொன்று விடாதீர்கள். குஷ்டரோகிகளை உயிருடன் புதைத்து விடாதீர்கள்.

- ஜான் லாரன்ஸ் பஞ்சாப் மாநிலத்திற்கு விதிக்கப்பட்ட சட்டம். லார்டு லாரன்ஸின் வரலாறு. பக்கம் 196 லண்டன் 1883. எழுதியவர் ஆர். பி. ஸ்மித்.

அந்த ஜமீன்தார் வயதிலும் வசதியிலும் மிகுந்தவர். இதெல்லாம் கடவுளின் அருளால் பூர்வஜென்மங்களில் செய்த புண்ணியங்களின் காரணமாக தனக்குக் கிடைத்தவை என்று அவர் திடமாக நம்பினார்.

ஜமீன்தார் இளம் வயதில் பெரிய ஊர் சுற்றியாக இருந்தவர். பிரிட்டிஷ் அரசாங்கம் பஞ்சாபில் பலகால்வாய்களை வெட்டி நீர்வளத்தைப் பெருகச் செய்ததனால் புன்செய் நிலங்கள் எல்லாம் நஞ்சை நிலங்களாக மாறி ஜமீன்தாரின் செல்வ நிலையை உயர்த்தியது.

அரசாங்கமே விவசாயிகளுக்கு நேரடியாக விவசாயம் செய்ய அழைப்பு விடுத்தபோது அவர்கள் ஒப்பவில்லை. எனவே ஜமீன்தாரர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். தன்னுடைய இளம்வயதில் ஐம்பது ஏக்கர் நிலங்களைப் பெற்றார் அவர். நாளாவட்டத்தில் அது இருநூற்று ஐம்பது ஏக்கர்களாக உயர்ந்தது.

www.padippakam.com



ஜமீன்தார் தன் மகனைப் படிக்கவைத்து வக்கீலாக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு அப்படியே அதை நிறைவேற்றவும் செய்தார். அவனுக்குச் மிகச்சிறப்பாகத் திருமணமும் செய்து வைத்தார். அவருடைய மகன் தனபதிராய் பெற்றோருக்குக் கீழ்ப்படியும் குணமுள்ள நல்லவர். சிறந்த புத்திசாலி. ஒருநாள் ஜமீன்தார் தன் மகனை அழைத்து "உனக்கு நல்லயோக ஜாதகம். இனிமேல் நீ கோர்ட் அமைந்திருக்கும் ஊருக்குச் சென்று குடியேறி தொழிலைத் தொடங்கு. நீயே விவகாரங்களை உண்டு பண்ணி உனக்கு வழக்குகள் வருமாறு பார்த்துக்கொள். உனக்குப் புகழும் பொருளும் வரவேண்டும். வேறொரு விஷயமும் நான் உனக்குச் சொல்லவேண்டும். உனது மனைவி தற்போது கர்ப்பமாக இருக்கிறாள். அவளுக்குப் பெண்குழந்தை பிறக்காமல் பார்த்துக்கொள். அப்படிப் பெண்ணாகப் பிறந்துவிட்டால் மருத்துவம் பார்க்கும் பெண்ணிடம் சொல்லி அவளது கடமையைச் செய்துவிடச் சொல். நாம் ஜமீன் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். பெண் பிறந்தால் அதற்குத் திருமணம் செய்து வைக்க நமது தகுதிக்கு ஏற்ப பெரும் செலவு செய்ய வேண்டும். நமது குடும்பத்தில் உனது திருமணத்தினால் ஏற்பட்ட கடனே இன்னும் அடைபட வில்லை. எனவே, கவனமாக நடந்து கொள்" என்று அறிவுரை கூறினார்.

தந்தையின் விருப்பப்படியே தனபதிராயும் அவர் குறிப்பிட்ட ஊரில் குடியேறி கோர்ட்டில் வாதாடத்தொடங்கினார். நல்ல வருவாயும் வரத்தொடங்கியது.

அவருடைய மனைவி ரோஜா மொட்டுவுக்கு பிரசவமாகியது. பிறந்தது பெண் என்பதால் தனபதிராய் கட்டளைப்படி மருத்துவச்சி தனது கடமையைச் சரிவரச் செய்து முடித்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



பல மாதங்கள் கழிந்தது. ரோஜாமொட்டு மீண்டும் கருத்தரித்தாள். இப்போதெல்லாம் ரோஜாமொட்டு சதா பூஜை அறையிலேயே பழியாகக் கிடந்து மீண்டும் தனக்கு ஒரு பெண் குழந்தையைத் தந்துவிடவேண்டாம் என்று விரதமிருந்து பிரார்த்தனை செய்து வந்தாள். மீண்டும் மீண்டும் மனைவி ஒரு பெண் குழந்தையையே பெறுபவளாக இருந்தால் அவள் எவ்வளவு பாவியாக இருக்க வேண்டும். தொடர்ந்து பெண்ணையே பெறும் மனைவியைக் கணவன் தள்ளி வைத்துவிட்டு வேறொரு பெண்ணை மணந்து கொள்ளவும் முடியுமே! எனவே அவள் பேறு காலத்தை மிகவும் அச்சத்துடன் எதிர்நோக்கியிருந்தாள். அவளுடைய பிரசவத்திற்காக வீட்டில் இருந்த ஒரு இருட்டான அறை தயார் நிலையில் இருந்தது. அவளைக் கவனித்து வந்த மருத்துவச்சியிடம் தனபதிராய்,” குழந்தை பெண்ணாகப் பிறந்து விட்டால், நீ புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவேண்டும்” என்று எச்சரிப்பது போலக் கூறினார். இந்த மருத்துவச்சி புதியவள், சற்றே அறிவிலும் குறைந்தவள் என்றாலும் தனபதிராய் கூறியதன் பொருளைப் புரிந்து கொண்டாள்.

அன்று சப்கலெக்டர் அந்த நகருக்கு வருகை தருவதாக இருந்தார். அவரை வரவேற்க நகரசபை அங்கத்தினர்களுடன் தனபதிராயும் காத்திருந்தார். வெள்ளையரான சப் கலெக்டரின் தயவு கிடைத்தால் தனக்குப் பட்டம் பதவிகள் கிடைப்பதற்கு உதவியாக இருக்குமே என்ற நினைப்பு அவருக்கு.

சப் கலெக்டர் வந்தபோதே அவர் முகத்தில் கோபத்தின் குறி காணப்பட்டது. அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவருமே அவர் இங்கு வருவதற்கு முன்னரே தங்களைப் பற்றிய புகார் ஏதும் அவருக்குப் போயிருக்கக் கூடுமோ, அதன் காரணமாகவே கோபமாக இருக்கிறாரோ, என்று அஞ்சினர்.

படிப்பகம்

www.padippakam.com



அப்போது ஒரு போலீஸ் அதிகாரி அவர்களில் சிலரிடம் ரகசியமாக "சப் கலெக்டர் துரை கோபமாக இருக்கும் காரணத்தை அவரது வேலையாள் ஒருவன் மூலம் நான் தெரிந்து கொண்டேன். நமது ஜில்லா மிகவும் பெரியது. சப் கலெக்டர் 3 நாட்களாகத் தொடர்ந்து ஒவ்வொரு ஊராகச் சென்று கடமைகளைச் செய்து வருகிறார். அந்தக் களைப்பு வேறு. ஆனால் அவரது கோபத்திற்கு இது காரணமல்ல. நேற்று ஒரு ஊரில் கணக்குகளைச் சரிபார்த்தபோது அங்கு கடந்தமாதம் ஐம்பத்தியிரண்டு குழந்தைகள் பிறந்ததாகவும், அதில் ஆண் குழந்தைகள் நாற்பத்தி ஒன்று என்றும், பெண் குழந்தைகள் பதினொன்று என்றும் குறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். அவர் ஊர்த்தலைவனிடம் "இது எப்படி சாத்தியம்"? என்று கேட்டார். அவன் "இதெல்லாம் கடவுள் செயல்" என்று பதில் கூறினான். உடனே அவர் கணக்குப் புத்தகங்களை மூடிவைத்துவிட்டு "நான் உங்கள் ஊரைச் சுற்றிப் பார்க்கவேண்டும்" என்று கூறிவிட்டுக் கிளம்பிவிட்டார். ஊரைச் சுற்றி வரும்போது ஊருக்கு வெளியே ஓரிடத்திலிருந்து கொடிய நாற்றம் வருவதைக் கண்டு மூக்கை மூடிக் கொண்டு அங்கு சென்றார். அங்குக் காடாக மண்டிக் கிடந்த புதர்களையும், செடிகளையும் வெட்டச் செய்தார். அங்கு அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது. பிறந்த குழந்தைகளின் சிதைந்த எலும்புகளும், நரிகளும், நாய்களும் தின்று புழு பூச்சிகள் அரித்ததுமான குழந்தைகளின் உடல்களும் அங்கு கிடந்தன. அதைக் கண்டு பெரும்கோபம் கொண்ட அவர், "இரக்கமற்ற பாவிகளே! இதைப் போல எவ்வளவு பெண் சிசுக்களைக் கொன்றிருக்கிறீர்கள்? மிருகங்களை விடக் கேவலமாக நடந்து கொண்டிருக்கிறீர்களே! நீங்களெல்லாம் எப்படிக் கடைத் தேறப் போகிறீர்கள்? உங்களைப் போன்ற வெட்கங்கெட்ட ஈரமற்ற பாவிகளை நான் எங்கும்

படிப்பகம்

www.padippakam.com



கண்டதில்லை" என்று திட்டிவிட்டு நேரே இங்கு வந்துள்ளதாகத் தெவிரித்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த தனபதிராய் யாருமறியாமல், ரகசியமாகத்தன் வீட்டிற்கு விரைந்தார். அங்கு எதிர்ப்பட்ட மருத்துவச்சியிடம் குழந்தை பிறந்துவிட்டதா என்று பரபரப்புடன் கேட்டார். குழந்தை பிறந்து விட்டதாகவும், பிறந்தது பெண் என்றும், ஆகவே அவர் கட்டளைப் படியே செய்துவிட்டதாகவும் மருத்துவச்சி கூறினாள். தனபதிராய் பதைத்துப்போனவராய் அவளிடம் விபரம் கேட்டார். அவள் குழந்தையை ஒரு துணியால் மூடி வீட்டிற்குச் சற்றுத் தள்ளியிருக்கும் ஒரு புதருக்குள் வீசிவிட்டதாகக் கூறினாள். தனபதி ராய் அவளைக் கண்டபடி திட்டி, உடனே போய் அந்தக் குழந்தைக்கு உயிர் இருக்கிறதா என்று பார்த்து அதைத்தூக்கி வரச் சொல்லித் துரத்தினார். மருத்துவச்சி அவ்வாறே செய்தாள். நல்லவேளையாக குழந்தை இன்னும் உயிருடன் இருந்தது. மருத்துவச்சியிடம் அவர் குழந்தையை எப்படியாவது காப்பாற்றிவிடும்படி கேட்டுக் கொண்டு சப் க்லெக்டரைப் பார்க்க விரைந்தார்.

சிலநாட்கள் சென்றன. சப்கலெக்டர் காம்ப் முடிந்து ஊர் திரும்பினார்.

ஒருநாள் ரோஜாமொட்டு குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த தன் கணவனது காலில் விழுந்து வணங்கி "என் குழந்தைக்கு உயிர்கொடுத்த தெய்வம் நீங்கள்" என்று நன்றியுடன் கூறினாள். தனபதிராய் அவளது தலையில் எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு, "என் குடும்பத்தை நாசமாக்க வந்த குடிகேடியே! நான் எவ்வளவு சம்பாதித்து நல்ல பெயர் எடுத்து என்ன புண்ணியம்!

www.padippakam.com



என் வாதத் திறமையால் நல்லபெயர் வாங்கித்தான் என்ன பயன்? உன்னால் என் நண்பர்கள் எல்லோரும் என்னை இவன் பெரும் பாவம் செய்திருக்கிறாள். அதனால் தான் இவனுக்கு பெண்ணாகவே பிறக்கிறது என்றல்லவா பழித்துக் கூறுவார்கள். என் தந்தையும் தனது சொத்தை எனக்குத்தர மாட்டாரே" என்று கர்ஜித்தார்.

குழந்தையை உயிரோடு விட்டு வைத்திருப்பதும் எதிர்காலத்தில் கஷ்டத்தைத் தரும். கொன்றுவிடுவது என்றாலும் இனி அது முடியாது. குழந்தை பிறந்து அதுபெண் என்பது வெளியே தெரிந்துவிட்ட நிலையில், இனி அதைக்கொலை செய்தால் பொறாமைகொண்ட சக வக்கீல்கள் எவராவது பிரச்சினைகளைக் கிளப்பக்கூடும். தனபதிராய் தவித்துக் கொண்டிருந்தார்.

தனது தந்தைக்கு தனக்கொரு குழந்தை பிறந்திருப்பதாக தகவல் அனுப்பியிருந்தாரே தவிர என்ன குழந்தை என்று தெரிவிக்கவில்லை. தனது தந்தையை நேரில் சந்திக்கு முன்னர் தனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்துவிடாதா என்ற நப்பாசை அவருக்கு. அல்லது அதற்குள் தந்தை இறந்து போனாலும் போகக்கூடுமே என்ற சபலம் வேறு.

குழந்தையைப் பார்க்கும்போது, அதன் புன்னகை மற்றும் செயல்களைப் பார்க்கும்போது அவரது மனதில் உற்சாகம் தலைகாட்டும். ஆனால் உடனே தன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேறுபுறம் சென்று விடுவார்.

இரண்டாண்டுகள் சென்றன. கிழ ஜமீன்தார் தன் மகன், மருமகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்க்கவேண்டும் என்றும் உடனே புறப்பட்டு வருமாறும் தகவல் அனுப்பினார்.

படிப்பகம்

www.padippakam.com



ரோஜா மொட்டு குழந்தையை நன்கு அலங்கரித்து அழைத்துச் சென்றாள். குழந்தையின் அழகைப் பார்த்தாவது கிழவரது மனதில் இரக்கம் தோன்றாதா என்று நினைத்தாள் அவள்.

ஆனால் பிறந்தது பெண் என்று தெரிந்ததும் கிழ ஜமீன்தார் கொதித்துப் போய்விட்டார். ஏன் தன் கட்டளைப்படி செயல்படவில்லை என்று கடிந்து கொண்டார். தனபதிராய் அவரிடம் சப் கலெக்டர் விஷயத்தைப் பற்றிக் கூறினார். ஆனால் கிழ ஜமீன்தாரோ, "சப் கலெக்டர் பற்றி என்னிடமே கூறுகிறாயா! தந்தையின் சொல்லை மதிக்காதவன் நீ. பெண் பிறந்ததற்கு நீதான் பொறுப்பாளி. இந்தப் பெண்ணால் நீ கடன்காரனாவதை என்னால் சகிக்கமுடியாது. இந்தத் தொல்லையை நீயே போக்கிக் கொள்ளவேண்டும். உடனே இதைத் தூக்கிக் கொண்டு நமது கோதுமை வயலுக்குப் போ. அந்த மண்வெட்டியையும் அரிவாளையும் எடுத்துக் கொண்டு சென்று வெட்டி குழிவெட்டிப் புதைத்துவிட்டுவா" என்று கடுமையாகக் கட்டளையிட்டார்.

தந்தை சொல்லை மீறியறியாத தனபதிராய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மண்வெட்டி அரிவாளுடன் கோதுமை வயல் நோக்கி நடக்கத் தொடங்கினார்.

தோளில் கிடந்த குழந்தையின் உடம்பிலிருந்து வெளிப்பட்ட இனிய சுகந்தம் தனபதிராயின் மனதைச் சலனப்படுத்தியது. அதன் பிஞ்சு விரல்கள் அவரின் முகத்தை வருடி கிளுகிளுப்பூட்டின. என்றாலும் மனதைக் கல்லாக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

படிப்பகம்

www.padippakam.com



வயலை அடைந்து குழந்தையை இறக்கிவிட்டுவிட்டு குழிவெட்டத் தொடங்கினார். குழிவெட்டி முடித்துவிட்டு நிமிர்ந்தபோது குழந்தை தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அதனுடைய தளர்நடையும், இனிய பார்வையும், அவரது மனதை வேதனைப் படுத்தியது. குழந்தையின் வாஞ்சையான பார்வை அவர் மனதில் ஒரு பெரிய மாற்றத்தைத் தோற்றுவித்தது. சட்டென்று தாவிக் குழந்தையைத் தூக்கியணைத்தபடி, உச்சி முகர்ந்து, "என் செல்வமே! இந்தச் சொத்து முழுதும் போனால் போகட்டும். நான் சம்பாதித்து உனக்குச் சிறப்பாகத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்று கூறியபடி கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக்கொண்டு, நடக்கத் தொடங்கினார்.

❋



படிப்பகம்

www.padippakam.com

# 11

மனித உயிர்கள் சமம் என்று கருதுவதைப் போலவே மற்ற எல்லா ஜீவன்களின் உயிர்களும், உயர்வானதே என்று கருதுவது இந்து மதம். இந்து மதக் கோட்பாட்டின்படி, பசுவை வணங்குவதால், மக்களிடையே ஜீவகாருண்ய உணர்வு பரவுகின்றது.

- மகாத்மா காந்தி, யுவ இந்தியா.

அது ஒரு கிழப்பசு. சாம்பல் நிறம் கொண்டது. அழகான எகிப்திய இளவரசியின் கண்களைப் போன்றிருக்கும் அதனுடைய கண்கள் சதா சிந்தனையில் தோய்ந்திருப்பது போலக் காணப்படும். அதன் கழுத்தில் நீலவண்ண மணிகள் கோர்க்கப்பட்ட மாலை போடப்பட்டிருந்தது.

அந்தப்பசு மிகவும் மெலிந்து எலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. அது ஒரு நாட்டுப்பசு. கறவை காலத்திலேயே இரண்டு ஆழாக்கு பால் மட்டுமே தந்து கொண்டிருந்தது. அதுவும் தற்போது நின்றுபோய் மரத்துப்போய் விட்டிருந்தது.

பசுவின் சொந்தக்காரர் செல்வவளமுள்ள விவசாயி. அவர் பசுவுக்கு சிறிது வைக்கோலும், தவிடு, பருத்திக் கொட்டையும் தருவதுண்டு. மற்ற கறவைப் பசுக்களைப் போலவே இதனையும் தெய்வமாகவே வழிபட்டு வந்தார். பகலில் இந்தப் பசுவையும் மேய்ச்சலுக்கு அனுப்புவதுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



மேய்ச்சல்நிலம் ஒரு வெட்டவெளி. அங்கு மரங்களோ, புதர்களோ, புல்வெளிகளோ கிடையாது. வெப்பத்தால் வறண்டு கிடக்கும் வெறும் கட்டாந்தரை. சற்றுத் தூரத்தில் பாறைகளின்மீது ஓரளவு புல் பூண்டுகள் உண்டு. ஆனால் மற்ற மாடுகளைப் போல இந்தக் கிழட்டுப் பசுவால் மேலே ஏறிச் சென்று மேயமுடிவதில்லை. எனவே திரும்பும்போது வழியில் கிடக்கும் குப்பைக் கூளங்களை மேயும்.

இப்படி மேய்ச்சலும் இல்லாமல் வயதாகிவாடும் மாடுகளைக் கொன்றுவிட முடியாது. அப்படிச் செய்தால் கொடிய நரகத்திற்குச் செல்ல நேரிடும் என்ற பயம் மக்களுக்கு இருந்தது. அந்தப் பாவத்தை போக்கவேண்டுமென்றால் பெரிய செலவில் பிராயச் சித்தம் செய்யவேண்டும்.

கோடைக்காலம், கிழட்டுப் பசு பல நாட்களாக மேய்ச்சல் கிடைக்காமல் பட்டினியால் வாடியது. ஒருநாள் மேய்ச்சலிலிருந்து திரும்பியபோது தள்ளாடியவாறே வந்து ஓரிடத்தில் விழுந்துவிட்டது. அதுகீழே விழுந்தவுடன், பசியால் வாடிமெலிந்து எலும்பும் தோலுமாக இருந்த தெரு நாய்கள் அந்தப் பசுவின்மீது பாய்ந்து கடித்துக் குதற ஆரம்பித்தன. உயிருடன் அந்தப் பசு துடித்துக் கொண்டிருந்தபோதே நாய்கள் அதன் சதையைப் பிய்த்துத் தின்னத் தொடங்கின.

அப்போது யதேச்சையாக குதிரைமீது அங்குவந்த ஜில்லா அதிகாரி டென்னிஸ் சல்லிவன் என்பவர் நாய்களை விரட்டினார். ஆனால் ஒரு பெண் நாய் மட்டும் சட்டென்று பாய்ந்து அந்தப் பசுவின் தொண்டையைக் கவ்வி சதையைப் பிய்த்துக் கொண்டோடியது. பசுவின் கழுத்திலிருந்த நீல வண்ண மணிமாலை அறுந்து தரையில் மணிகள் சிதறின.

படிப்பகம்

www.padippakam.com



அன்றிரவு டென்னிசுக்கு தூக்கமே வரவில்லை. உடல் மெலிந்து செயலற்றுக் கிடந்த பசுவும், பசிவெறியுடன் பாய்ந்து பிடுங்கிய நாய்களும் அவரது நினைவில் வந்து கொண்டே இருந்தன.

பிரிட்டிஷ் இந்தியாவில் ஒருகோடியே நாற்பத்தியேழு லட்சம் மாடுகள் இருக்கின்றன. மேய்ச்சல் நிலங்களும் நிறைய இருக்கின்றன. ஆனால் அவை பெரும்பாலும் வறண்டு போய் புல் இல்லாமல் காய்ந்து கிடக்கின்றன. மாடுகளின் மேய்ச்சலுக்குப் புல் வளர்க்க வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை. இங்கு கோடிக்கணக்கான குழந்தைகள் பாலுக்கு ஏங்கிக் கொண்டிருக்கின்றன. மாடுகளும் மேய்ச்சலின்றி வாடுகின்றன. என்றாலும், குழந்தைகளும், மாடுகளும் புதிது புதிதாகப் பிறந்து கொண்டுதான் இருக்கின்றன.

குழந்தைகளைக் கொன்றாலும் கொல்வார்கள். ஆனால் இந்த இந்துக்கள் பசுக்களை மட்டும் கொல்லமாட்டார்கள். அது உணவின்றி நாளுக்கு நாள் மெலிந்து வாடி கொஞ்சம் கொஞ்சமாக துன்பப்பட்டுச் சாவதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதற்கு அதன் தலைவிதிதான் காரணம் என்பார்கள். டென்னிசனின் மனதில் இவ்வாறு யோசனைகள் ஓடின.

மறுநாள் அவர் ஊர்த்தலைவர்களை அழைத்துப் பேசினார். தான் முன்தினம் கண்ட காட்சியை விவரித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



அதற்கவர்கள் அது அதனதன் தலைவிதி. "முன் ஜென்மங்களில் செய்த பாவத்தின்பலன்" என்று பதில் கூறினர்.

அவர் அவர்களிடம், "தெரு நாய்களினால் கேடு அதிகமாகிறது. உணவு கிடைக்காமல் அவை வெறிபிடித்து அலைகின்றன. வெறிபிடித்த நாய்கள் மனிதர்களைக் கடித்து அவர்களுக்கும் வெறிநோய் ஏற்பட்டு இறந்து விடுகின்றனர். இந்தமாதம் மட்டும் ஒன்பதுபேர் நாய்க்கடியால் இறந்துள்ளனர். எனவே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். நான் இந்தத் தெரு நாய்களைக் கொன்று விடுகின்றேன். அதனால் எனக்கு பாவம் வராது. அப்படியே வந்தாலும் பரவாயில்லை, நான் ஏற்றுக் கொள்கிறேன்; என்ன சொல்கிறீர்கள்"? என்று கேட்டார்.

அவர்கள் யோசனை செய்துவிட்டு அவரது செயல்களுக்கு அவரே பொறுப்பு என்று கூறிவிட்டனர்.

எனவே டென்னிஸ் தோட்டிகள் மூலம் தெரு நாய்களுக்கு விஷம் கலந்த சோற்றை வைக்க ஏற்பாடு செய்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், அவர் நாய்களைப் பற்றி விசாரித்தபோது, நாய்கள் எப்போதும் போலவே தெருக்களில் திரிந்து கொண்டிருப்பது தெரிய வந்தது. தோட்டிகளை அழைத்து விசாரித்தபோது,தாங்கள் விஷம் கலந்த சோற்றை வைத்தவுடன் சிலர் அதற்கு மாற்று மருந்துள்ள சோற்றை நாய்களுக்குக் கொடுத்து அவற்றைக் காப்பாற்றி விட்டதாகக் கூறினர்.

படிப்பகம்

www.padippakam.com



ஊர்த்தலைவரை அழைத்து விசாரித்தபோது மாற்று மருந்து அளித்த விபரத்தை ஒப்புக் கொண்டார். நாய்களுக்கு விஷம் கொடுத்த பாவம் டென்னிஸையே சேரும் என்றாலும் கூட, விஷயம் தெரிந்து ஒன்றும் செய்யாமலிருந்தால் அந்தப் பாவத்தில் தங்களுக்கும் பங்கு வருமென்றும், அதனைத் தீர்க்க பெரிய அளவில் செலவு செய்து பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்றும், காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி, பாவம் தீர்க்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் நரகத்திற்குச் செல்ல நேரிடும் என்றும் குருக்கள் கூறியதாகக் கூறியதுடன், நாய்கள் சாகவேண்டும் என்று விதியிருந்தால் முதலில் விஷம் கொடுத்த உடனேயே நாய்கள் இறந்திருக்க வேண்டுமே யென்றும் கூறித் தங்களது செயலை நியாயப்படுத்தினார்.

டென்னிஸ் பதிலே பேசாது தன் வழியே சென்றார். வழியில் அவர் பார்வையில் கிழட்டுப் பசு நாய்களால் குதறப்பட்டு இறந்த இடத்தில் நீலநிறமணிகளுடன் அந்தப் பசுவின் எலும்புகளும் சிதறிக் கிடந்தது பட்டது.

## குறிப்புகள்

*மாச்சரியம் என்று கூறுங்கள், மதத்தின் உயர்ந்த நோக்கம் என்று கூறுங்கள். எப்படிக் கூறினாலும் பசுவின் தெய்வீகத் தன்மை இந்துக்களின் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கிறது.*

*- திவான் பகதூர் பண்டித ஜே. எல். பார்க்கவா*

படிப்பகம்

www.padippakam.com



*சட்டசபை விவாதங்கள், புத்தகம் 1 பக்கம் 530, 1921,*

*பசுக்கள் பால் சுரந்து கொண்டிருக்கும்வரை அதன் உரிமையாளர்கள் அவற்றிற்கு தவிடும், பிண்ணாக்கும், பருத்திக் கொட்டையும் கொடுப்பர். அவைகள் பால் மரத்தவுடன் அவைகளை மேய்ச்சலுக்கு விரட்டிவிடுவார்கள்.*

*- அரசாங்க விவசாயக் கமிஷன் அறிக்கை பக்கம் 196, 1928.*

*நாய்களை நாம் அடித்து உதைத்து விரட்டுகிறோம். அவைகளது எலும்புகள் தோலைத்துருத்திக் கொண்டு வெளியே தெரிந்தாலும், ஒரு தெரு நாயை நாம் கொன்று விட்டால் உடனே ஊரார் கூக்குரல் எழுப்புகின்றனர்.*

*- மகாத்மா காந்தி, யுவ இந்தியா, பக்கம் 384*

*4.11.1926.*

❋

படிப்பகம்

www.padippakam.com

# 12

*எளிதில் உணர்ச்சி வசப்படாதவர்கள்கூட இந்தியாவில் பெண்கள் ஆண்களால் நடத்தப்படும் முறையைக் கண்டு இரக்கப்படுவார்கள்.*

*- கேக்வார் மகாராணி சிமானோசாகேப்.*
*அகில இந்திய பெண்கள் கல்விச் சீர்திருத்த மாநாடு, புனா, ஜனவரி 5 To 8, 1927.*

"உன்னுடைய கடிதங்களின் பெருமையை நீ குறைத்து மதிப்பிட்டு விடாதே. உனது கடிதங்களில் நீ குறிப்பிடும் சின்ன விஷயங்கள்கூட கடுமையான பசியிலிருப்பவனுக்குக் கிடைத்த உணவைப்போலவும், தாகத்தினால் சாகும் நிலையில் உள்ள ஒருவனுக்குக் கிடைக்கும் தண்ணீர் போலவும் இருக்கின்றன. இங்கு நான் அனுபவிக்கும் தனிமை மிகவும் கொடுமையானதாகும். இங்கு எனக்குக் கடுமையான வேலைகள் இல்லை. எந்தவிதமான கஷ்டங்களும் இல்லை. பொருளாதாரக் கஷ்டங்களும் இல்லை. ஆனால் தனிமை இருக்கிறது. நான் இங்கு யாருடைய நன்மைக்காகவும், உயர்வுக்காகவும் உழைக்கிறேனோ அவர்கள் கூட எனது தனிமையின் கொடுமையை உணர்ந்தவர்கள் அல்லர்."

எழுதுவதைச் சற்று நிறுத்திவிட்டு, டாக்டர் கன்சிடான் சுகார், மருத்துவமனையில் தனது அறையில் இருந்தவாறு ஜன்னல் வழியாக வெளியே பார்வையைச் செலுத்தினாள். வெளியே நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்ட சிறுமிகளும் பெண்களும் சூழ்மியிருந்தனர். சுகாதாரமான வாழ்க்கை முறை

படிப்பகம்

www.padippakam.com



இல்லாததாலும், விழிப்புணர்ச்சி இல்லாததாலும், கொடுமைக்கு உள்ளாவதாலும் அவர்களைப் பீடிக்கும் நோய்க்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காகத் தன்னிடம் வரும் அவர்களைப் பற்றிய தனது நம்பிக்கைகள் பொய்த்து விட்டதாகவே அவள் கருதினாள்.

சுகார் தொடர்ந்து எழுதத் தொடங்கினாள். "எனது மாதச் சம்பளம் ரூ. 162 ஆகும். இதில் 15 ரூபாய் எனது பென்ஷனுக்காகப் பிடித்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் நான் பிரைவேட்டாக பிராக்டிஸ் செய்தால் மாதம் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கலாம். ஆனால், இந்த அற்ப சம்பளத்திற்கு நான் ஏன் பொது மருத்துவமனையில் பணிபுரிய வேண்டும் என்று நீ நினைக்கலாம். இங்குள்ள பெண்கள்கூட நான் அவர்களுக்குப் பணிபுரியவே இங்கு வேலை செய்வதை உணர மாட்டார்கள்.

நேற்று சரத்சந்திர, பானர்ஜியின் மனைவி அளித்த ஒரு விருந்தில் கலந்து கொண்டேன். அங்கு வந்திருந்த பெண்களில் சிலர், எனக்குப் புரியாது என்ற எண்ணத்தில் தங்களது மொழியில், "பல வருஷங்களாக இந்த மருத்துவமனையில் வேலை செய்யும் இவள், அங்கிருந்து பெரிய அளவில் சுருட்டியிருப்பாள்" என்று என்னைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆனால் சரத்சந்திர பானர்ஜியின் மனைவி என்னைப் பற்றி நன்கறிந்தவர். நன்கு படித்தவர். அவர் அவர்களுக்கு என்னைப் பற்றி விளக்கியிருக்கக்கூடும்.

எனக்கு இங்கு தினந்தோறும் மனச் சங்கடத்தைத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சிகள் நடந்தவண்ணமே இருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



நேற்று நான் பணியில் இருந்தபோது வெளியே பெரும் கூச்சலும், ஒரு சிறு பெண்ணின் அலறலும் கேட்டன. நான் உடனே வெளியே சென்று பார்த்தேன். ஒரு குரங்கு அந்தப் பெண்ணைக் கடித்துக் கொண்டிருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் கால் ஒடிந்து வந்த அந்தப் பெண்ணுக்கு கட்டுப் போட்டு இங்கு படுக்கவைத்திருந்தேன். அந்தச் சிறுமி ஒரு மாம்பழத்தைத் தின்று கொண்டிருந்திருக்கிறாள். அருகிலிருந்த மரத்திலிருந்து அதைப் பார்த்த அந்தக் குரங்கு ஓடிவந்து பழத்தைப் பிடுங்க முயற்சித்திருக்கிறது. சிறுமி பழத்தை விடாமல் மறைக்கப் பார்த்திருக்கிறாள். கோபம் கொண்ட குரங்கு அவளைப் பத்து பன்னிரண்டு இடங்களில் நன்றாகக் கடித்துவிட்டது. நாங்கள் சென்று விரட்டியதும் அந்தக் குரங்கும் வேறு சில குரங்குகளும் மேலேறி மருத்துவமனையில் ஓடுகளைப் பிரித்து எரியத் தொடங்கின. ஆபரேஷன் தியேட்டர் ஓடுகள் அடியோடு நாசமாகிவிட்டன. சிலநாட்களுக்கு முன்பு நான் என் சொந்த செலவில் அவற்றைச் செப்பனிட்டிருந்தேன்.

அந்தக் குரங்குகளை ஏன் சுட்டுக் கொன்றுவிடக் கூடாதென்று நீ கேட்பாய். குரங்குகள் இந்துக்களின் கடவுள். நான் குரங்குகளைச் சுட்டுக் கொன்றால் பலத்த கண்டனத்திற்கு ஆளாவேன். இந்துக்கள் மருத்துவமனையின் வாசலைக்கூட மிதிக்கமாட்டார்கள். இப்போதும் பெரும்பாலும் இங்கு வருபவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாரும், ஓரளவு படித்தவர்களும் மட்டுமே. எதிர்காலத்திலாவது அனைவருக்கும் மருத்துவமனை பயன்பட வேண்டுமென்று நான் கருதினால் குரங்குகள் விஷயத்தில் தலையிடக்கூடாது.

வேறொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். இந்து ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர் தனது மனைவிக்காக

படிப்பகம்

www.padippakam.com



ஒரு தனி அறைவேண்டும் என்று கேட்டிருந்தார். எமது மருத்துவமனையில் பிற நோயாளிகளுடன் கலக்காமல், தாமே சமையல் முதலியவற்றைச் செய்து கொண்டு தங்கி சிகிச்சை பெறக்கூடிய தனி அறைகள் உண்டு. அதற்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வாடகையாகும்.

கணபதி தாசர் என்ற அந்த அரசாங்க உத்தியோகஸ்தரது மனைவிக்கு ஒரு அறை ஒதுக்கித்தரப் பட்டது. அவளுக்குப் பதினைந்து வயதிருக்கும். அவளைப் பரிசோதித்தபோது நான் திடுக்கிட்டேன். அவள் வயதுக்கு வந்தவள் அல்ல. அவளது உறுப்புக் கிழிந்துபோய் இருந்தது. நான் அதனைச் சுத்தம் செய்து தையல்போட்டு படுக்கையில் படுக்க வைத்தேன்.

அங்கிருந்த அவளுடைய மாமியார், "ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வாடகையா! இது தவிர மருத்துவச் செலவு, டாக்டர் செலவெல்லாம் இருக்கிறதே! இந்தச் சிறுக்கிக்கு இவ்வளவு செலவு செய்வதா! எப்பொழுது பார்த்தாலும் இவளுக்கு ஏதாவது உடம்புக்கு வந்து கொண்டேயிருக்கிறதே! இதுவரை இவள் ஒரு குழந்தையைக் கூடப் பெறவில்லை. இவளுக்காக என்மகன் எவ்வளவு செலவு செய்கிறான். அவனது பெருந்தன்மையும், பொறுமையும் யாருக்கு வரும்! இவள் அவனை நன்றாக மயக்கி வைத்திருக்கிறாள். இவள் வீட்டிற்கு வரட்டும் பேசிக்கொள்கிறேன்" என்று திட்டிக்கொண்டே இருந்தாள்.

நான் அவளைக் கண்டித்து, மருத்துவமனையில் அவளும் தங்கி, அவளது மருமகளை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும் என்று கட்டளையிட்டேன். அவளும் ஒப்புக் கொண்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



அந்தப் பெண் என்னிடம் தனக்குக் குழந்தைப் பிறக்குமா என்று கேட்டாள். அதற்குத் தற்போது வாய்ப்பில்லை என்று கூறத் தயங்கியபடி நான் இருந்ததும் அவள் விஷயத்தைப் புரிந்து கொண்டாள். அவள் என்னிடம் இனிமேல் என்னை என் கணவருடன் அனுப்பிவிடாதீர்கள். என்னால் தாங்க முடியவில்லை, ஏதாவது விஷம் கொடுத்து என்னைக் கொன்றுவிடுங்கள் என்று கெஞ்சினாள். நான் அவளுக்கு ஆறுதல் கூறி அவளுக்குத் தூக்க மருந்தைக் கொடுத்துத் தூங்கச் செய்து விட்டு வந்துவிட்டேன்.

இங்கிலாந்தில் உள்ளவர்களில் சிலர் இந்துக்களின் உயர்ந்த தத்துவங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள். அவர்கள் இங்கு வந்து தங்கி இந்த உயர்ந்த தத்துவங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்துமத தர்மப்படி, மநு வகுத்த நீதிப்படி ஒரு பெண் கணவனின் ஒரு உடைமை. ஆடு, மாடுகளைப் போல ஒரு உடைமை. அவ்வளவுதான். கணவன் தன் மனைவியை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். உயிருக்குப் போராடிக் கொண்டு மருத்துவமனையில் இருக்கும்போதுகூட அவன் நினைத்தால் அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடலாம்.

தேநீர் வந்து ஆறிக் கொண்டிக்கிறது. அதைக் குடித்து விட்டு எனது வேலையைத் தொடரப் போகவேண்டும். எனவே முடித்துக் கொள்கிறேன்" என்று எழுதிக் கடிதத்தை முடித்தாள் தான்சிடான் சுகார்

மறுநாள் காலை டாக்டர் சுகார் அந்தப் பெண்ணைப் பார்க்க அந்த அறைக்குச் சென்றபோது அவள் இருந்த

படிப்பகம்

www.padippakam.com



நிலையைக் கண்டு திடுக்கிட்டாள். அந்தப் பெண்ணின் மாமியாரை அழைத்து, "இரவு இங்கு என்ன நடந்தது? மறைக்காமல் சொல்" என்று அதட்டினாள்.

"என்ன நடந்துவிட்டது. அவள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்" என்று கிழவி அலட்சியமாய் பதிலளித்தாள்.

"அவள் இங்கு வந்தபோது மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தாள். நான் கிழிந்திருந்த இடத்தில் தையல் போட்டு சரி செய்திருந்தேன். இப்பொழுது மீண்டும் கிழிந்து போயுள்ளது. இது ஒரு ஆண் மகனால்தான் நடந்திருக்க வேண்டும். நீதான் இங்கு தங்கியிருந்தாய். உண்மையில் நடந்ததை மறைக்காமல் சொல்" என்று மீண்டும் அதட்டினாள் டாக்டர் சுகார்

கிழவி ஆத்திரத்துடன் "வேறு யார் இங்கு வருவார்கள்! என் மகன், அவளது கணவன்தான் இரவு வந்தான். காவலர்களுக்குக் காசு கொடுத்துவிட்டு யாருக்கும் தெரியாமல் வந்தான். அவனுக்கு அவள் தேவைப்பட்டாள். எனவே இரவு வந்து அவளை அனுபவித்துவிட்டுக் காலையிலேயே போய்விட்டான்" என்று அலட்சியமாக பதிலளித்தாள்.

டாக்டர் சுகார் ஒன்றும் சொல்லத் தோன்றாது தன் இடத்திற்குத் திரும்பினாள். சட்டென்று ஒரு எண்ணம் தோன்றவே தான் வருவதாகச் சரத்சந்திர பானர்ஜியின் மனைவிக்குத் தகவல் அனுப்பிவிட்டு அவர்கள் வீட்டிற்குச் சென்றாள்.

பானர்ஜியின் வீடு மேல்நாட்டு நாகரிக முறைப்படி நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. பானர்ஜியின் மனைவியும் அழகாக உயர்தர உடைகள் அணிந்து காட்சியளித்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவளிடம் டாக்டர் சுகார் அந்தப் பெண்ணுக்கு நடந்த கொடுமைகளைப் பற்றி விரிவாகக்கூறி இதற்கு எப்படியாவது உதவும்படி கோரினாள். டாக்டர் கூறியதனைத்தையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த திருமதி பானர்ஜி, "டாக்டர் உங்களுக்குத் தெரியாது. ஆனால் மேல்நாடுகளில் சுற்றுப்பயணம் செய்திருக்கும் நான் உங்கள் மனநிலையை நன்கு அறிவேன். எங்களது பழமையான நாகரிகங்களும், சிறப்பான மதக்கோட்பாடுகளும், உயர்ந்த கொள்கைகளும், பக்திச் சிறப்பும் உங்களுக்குப் புரியாது. நான் சொல்வதை நன்றாகக் கேளுங்கள். ஒரு இந்துப் பெண் எப்பவுமே இரக்கப்படும் நிலையில் இல்லை, அந்தப் பெண்ணின் கணவன், தன் மனைவியை விட்டு வேறு பெண்களிடம் செல்லவில்லை. அவளுக்கு உடல் நலம் இல்லாமலிருந்தால் கூட அவன் இன்பம் அனுபவிக்க தன் மனைவியிடம்தான் வந்தான். இது அவள் மீது அவனுக்கு இருக்கும் அன்பைத்தானே காட்டுகிறது. அவளும் ஒரு உத்தமி. ஆகவேதான் தன் கணவனுக்கு இடம் கொடுத்தாள்" என்று விளக்கம் கூறினாள்.

டாக்டர் பதிலே கூறாது தன் இருப்பிடம் திரும்பினாள்.

❋

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியப் பெண்களுக்கு நூலாசிரியையின் அறிவுரை

*நமது நோக்கங்கள் நிறைவேற வேண்டுமானால் அதற்குப் பயன்தரும் வழிகளில் நாம் உழைக்க வேண்டும். இந்தியாவில் நடக்கும் சிறிய, பெரிய கூட்டங்கள் தங்களுடைய சிறந்த கொள்கைகளை பிரகடனப்படுத்துவதுடன் முடிந்து விடுகின்றன. அழகான வார்த்தைகளில் விவாதங்களும், அத்தகைய தீர்மானங்களுடனும் முடிவடைகின்றன. அதனால் தான் ஐம்பது ஆண்டு காலமாக நாம் முயற்சி செய்தும் கூட, இன்றைய வரை பெண்கல்வி விஷயத்தில் நாம் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறோம்.*

*- பேகம் சாகிப் போபால், அகில இந்தியப்*
*பெண்கள் மாநாட்டில் துவக்க உரை*
*பிப்ரவரி, 1928, டில்லி*

என்னுடைய முதல் புத்தகத்திற்கு நான் தந்துள்ள பெயர் உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அன்னை இந்தியா தெய்வீகம் நிரம்பிய நாடு என்று கூறுவீர்கள். உங்களது உயர்ந்து நாகரிகம் மக்களின் முதிர்ச்சியின் விளைவே என்று கூறுவீர்கள். ஆனால் உங்கள் உயர்ந்த நாகரிகத்தின் பயனாக உங்களுக்குக் கிடைக்கும் உண்மையான பலன்களை விளக்கிக் கூறும்எனது நூலக்கு இந்தப் பெயரே சரி என்று கூறுவேன்.

இந்தப் பெயரை நான் ஒரு நோக்கத்துடனேயே வைத்தேன். மேடைகளில் ஏறி வாய் வீரம் பேசும் தன்மை கொண்ட உங்கள் ஆண்மக்கள் தாங்கள் சமூகத்தின் தாயான

படிப்பகம்

www.padippakam.com



பெண்களுக்கு இழைக்கும் கேடுகளை சீர்தூக்கிப் பார்ப்பதுடன், அவர்களுடைய தேசபத்தியையும், அறிவையும் தூண்டிவிட வேண்டும் என்பதே என் விருப்பம்.

இந்த காலகட்டத்தில் எந்தவொரு நாடும் அது அதன் பெண்களை எந்த நிலையில் வைத்திருக்கிறதோ, அதே அளவில்தான் மற்றைய நாட்டினர் அந்த நாட்டினை மதிப்பார்கள். எந்த நாடாக இருந்தாலும் அது தன்னுடைய உழைப்பினாலன்றி, தான் மனதில் கொண்டிருக்கும் உயர்ந்த நோக்கங்களால் மட்டுமே தன் பெருமையை நிலை நிறுத்திவிட முடியாது.

உங்களுடைய பழமையான சாஸ்திரங்கள் கூறுவது எதுவாக இருந்தாலும், அவைகள் சாஸ்திரங்கள் என்பதனாலும், அவைகள் அழகாகக் கூறப்பட்டிருக்கிறது என்பதனாலும் மட்டும் அவற்றிற்குயாரும் மதிப்பளித்துவிட மாட்டார்கள். அவைகளால் உங்களின் நிலை என்ன, அவற்றால் நீங்கள் அடைந்த பலன்கள் என்ன என்றே ஆராய்ந்து பார்த்து உங்களது சாஸ்திர உயர்வு தாழ்வுகளைப்பற்றி மதிப்பிடுவார்கள்.

உங்களது நாகரிகம் எமது நாகரிகத்தோடு ஒத்துப்போய் எங்களை மகிழ்விக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. உங்களை எங்களது நாகரிகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கப் போவதுமில்லை. ஆனால் மனித சமூகத்திற்கு அடிப்படையான சில நன்மைகள் எல்லா நாட்டிற்கும் பொருந்துவதாகவே இருக்கின்றன. இத்தகைய பொதுவான நன்மைகள் உங்களது நாகரிகத்தில் இருக்கிறதா என்பதனை ஆராய்ந்து பார்போம். தற்போது உங்களுக்கிருக்கும் உண்மையான நிலைமையை நீங்கள் மாற்றிக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ளாவிட்டால், உங்களைப் பற்றி நாங்கள் கொண்டுள்ள கருத்துக்களில் மாற்றமேற்படாது.

நீங்கள் எமது மேல் நாட்டு நாகரிகத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை. நீங்கள் எவ்வளவு அடிமைகளாக இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு எமது அமெரிக்க நாட்டுப் பெண்களுக்கு சுதந்திரம் இருக்கிறது. அத்தகைய சுதந்திரத்தை எமது பெரும்பாலான பெண்மக்கள் தங்களது குடும்ப நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டாலும் ஒருசிறு பகுதியினர் இந்த சுதந்திரத்தைத் தீயவழிகளில் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதனை நான் மறுக்கவில்லை. இத்தகைய பெண்களைப் பற்றி மட்டுமே நீங்கள் அடிக்கடி கேள்விப்படுகிறீர்கள்.

பலநூற்றாண்டுகளாக நீங்கள் அடிமைகளாகவே வாழ்ந்ததன் பலனாக உங்களுக்கு ஒரு பெரும் நன்மையும் கிடைத்திருக்கிறது. இதனால் நீங்கள் அடங்கி நடக்கக் கற்றுக் கொண்டுள்ளீர்கள். அதனால் மனதில் உறுதியும் நல்லொழுக்கமும் ஏற்படுகின்றன. இத்தகைய தன்மை உங்களது ஆண்களைக் காட்டிலும் உங்களிடம் சிறப்பாக அமைந்திருக்கிறது. இந்த உறுதியைத் தற்போது நீங்கள் உங்களது ஆண்கள் சார்பாக வெளிப்படுத்த வேண்டும்.

எப்படியாவது உங்கள் கட்டுக்களை அறுத்துக் கொண்டு வெளியேறும் மனவலிமை உங்களுக்கு வரவேண்டும். உங்களுக்காகப் புதிய சட்டங்களை உருவாக்கிக்கொண்டு புதிய ஒளியைப் பெறவேண்டும். இந்திய ஆண்கள் தங்களது குழந்தைப் பருவம்முதல் உங்களது பாதுகாப்பில்தான்

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறார்கள். மனதின் தூய்மையைப் பற்றியும், பெண்கள்பால் அவர்கள் காட்ட வேண்டிய மேலான அன்பைப் பற்றியும் பதிய வைக்கவேண்டும்.

நூற்றுக்குத் தொன்னூறு பேர் கிராமங்களில் வாழ்பவர்களாக இருக்கும் ஒரு சமூகத்தில், ஆண்கள் எவ்வளவுதான் அழகாகப் பேசினாலும் கூட, பெண் பள்ளி ஆசிரியையாகவோ, மருத்துவராகவோ வெளியே வந்து நடமாட அஞ்சும் நிலையிலேயே ஆண்களின் நடவடிக்கைகள் இருக்கும் ஒரு சமூகத்தில் உங்கள் நாட்டிற்கு நல்லது செய்ய வேண்டுமானால், நீங்கள் பெரிய புரட்சியே செய்ய வேடியவர்களாக இருக்கின்றீர்கள்.

உங்களது நாட்டிற்கு பிற நாட்டவர்கள் சில நன்மைகளைச் செய்வார்கள் என்று நீங்கள் காலம் காலமாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பிரம்மசமாகளையும், நெஞ்சில் இரக்கமில்லாமல் உங்களால் வெறுக்கப்பட்டு கிறிஸ்துவர்களாக மதம்மாறிய தீண்டாதவர்களையும் எதிர்பார்த்து இருந்துவிட்டீர்கள், எத்தனை காலம்தான் இப்படி எதிர்பார்ப்பீர்கள்?

உங்கள் நாட்டிலிலுள்ள பல்வேறு மொழிகளிலும் எழுதப்படிக்கத்தெரிந்த பெண்களின் எண்ணிக்கை இரண்டு சதவீதம்தான், இதற்குக் காரணம் உங்களது பண்டைய மதக்கோட்பாடுகளேயாகும். எழுதப்படிக்கத்தெரியதவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்க உங்கள் உதவியின்றி முடியாது. எழுதப்படிக்கத் தெரிந்து இரண்டு சதவீதத்தினரான உங்கள் மீதுதான் மற்றவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பு சுமந்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



உங்களது பழக்க வழக்கங்களை உதறித் தள்ளிவிட்டு பெருந்தன்மையோடு இந்தியப் பெண்களின் நலத்திற்காகப் பாடுபட்ட ஒருவர் இருந்தார். பண்டித ரமாபாய் என்ற பெயர் கொண்ட பார்ப்பனக் கைம்பெண்ணான இவர், தன்சாதியின் பெருமகளையெல்லாம் கைவிட்டு விட்டு அமெரிக்கா சென்று, தனது நாடு தனக்கு மறுத்த உதவியை வேண்டினார்.

"என் நாட்டினர் பெண்கல்விக்கு எதிரியாக இருப்பதால் அவர்களுடைய உதவியை அறிவுரையாகவோ, பொருளாதார நீதியாகவோ எதிர்பார்க்க இயலவில்லை. இது குறித்து உயர்சாதி இந்துக்களிடம் பேசுவதில் பயனில்லை. அவர்கள் என்னைக் கேலி செய்கிறார்கள், அல்லது மௌனமாக இருந்து விடுகிறார்கள் பெற்றோர்களே, உங்களது குழந்தைகளையும் அவர்கள் வயதே உடைய எமது இந்தியக் குழந்தைகளின் நிலைமையையும் ஒப்பிட்டுப்பாருங்கள். இந்தியக் குழந்தைகள் பண்டைய பழக்க வழக்கங்கள் என்னும் பலிபீடத்தில் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் எமது நாட்டிலுள்ள கணக்கற்ற விதவைப் பெண்களை அவர்களைக் கொடுமைப்படுத்துபவர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டாமா என்று சிந்தியுங்கள்! அவர்களிடமிருந்து நெஞ்சைப்பிளக்கும் விம்மலொலி எழுகிறது. ஆயிரக்கணக்கான பால்ய விதவைகள் விடுதலையே இல்லாமல் இறந்து போகின்றனர். வேறுசிலரோ தடம்மாறிச் சென்று அதனால் ஏற்பட்ட அவமானம் காரணமாக நசுங்கிப் போகின்றனர். அமெரிக்கர்களாகிய நீங்கள் ஒரு பொது

படிப்பகம்

www.padippakam.com



நல உணர்வோடு, அவர்களது அடிமைத் தனத்தையும், அவர்கள் படும் கொடுமைகளையும் நீக்கக் கூடாதா! மனித சமுதாயத்தின் மீது அன்பு கொண்ட உங்களது காதுகளில் இந்தியப் பெண்களின் அழுகுரல் லேசாகக் கேட்டாலும் உங்கள் மனதில் இரக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை நான் கூறிக் கொள்கிறேன்"! ஒன்று அவர் முறையிட்டார்.

பிறகு அவர் இந்தியா திரும்பி பெண்களின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார். இது நடந்து நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. அவர் இறந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன. அவர் இறக்கும் வரை கூறிய வார்த்தைகள் உங்களைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆகிவிட்டது. இன்றைக்கும் உங்களது பெண்களின் உயர்வுக்காக நீங்கள் வெளிநாட்டு உதவியைத் தானே எதிர்பார்க்கிறீர்கள்!

பண்டிதரமாபாய் அரை நூற்றாண்டுக்காலம் உழைத்துவிட்டு 1922-ல் காலமானார். இந்தியப் பெண்களுக்காக உழைத்த ஒரு இந்தியப் பெண்ணைப் பற்றி இரண்டாண்டுகளுக்கு முன்னர் மகாத்மாகாந்தி,

"இந்தியப் பெண்கள் தங்கட்கு கிடைக்கும் தீமைகளை எதிர்க்கும் வலிமையற்றிருக்கிறார்கள். இதற்கு ஆண்களே காரணம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆண்களைமட்டும் குறைகூறி விட்டுப்பெண்கள் சும்மா இருந்து விடலாமா! தங்களது குழந்தைகளான பெண்களையும் ஆண்களையும் சரியாக உருவாக்க உழைப்பது இவர்களது கடமையாகும். பெண்கள் தாங்கள் படித்த படிப்பையெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



கல்யாணமான பிறகு, மறந்து கணவனுக்கு இன்பம் தரும் கருவியாவதா? நலிந்து போன குழந்தைகளைப் பெறுவதுதான் வாழ்வா! பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமென்றால் அவர்கள் இதற்காகப் போராடலாம். பாலிய விவாகமான பெண்களிடமும் பாலிய விதவைகளிடமும் சென்று அவர்களுக்காக உழைக்கக்கூடிய வீரப்பெண்கள் எங்கே? பாலிய விவாகம் ஒழிந்துபோகும் வரை , வயது வந்தபிறகு, தங்கட்குப் பிடித்தவனையே மணம் செய்து கொள்வோம் என்று மனவலிமை வரும்வரை அவர்களுக்காக உழைக்கக் கூடிய "வீரப்பெண்கள் எங்கே"? என்று கூறியுள்ளார்.

மகாத்மாகாந்தியின் கண்டனத்தில் இந்துப் பெண்களைக் கண்டிப்பதில் எந்த விதமான நீதியோ நேர்மையோ இல்லை. பல நூற்றாண்டுகளாக அடிமையாக இருந்தவர்களை குறைகூறமுடியாது. ஆனால் அவர்களிடமிருந்து மாறுபட்டு, கல்வி கற்ற நீங்கள், மிகச் சிலரான நீங்கள், எப்பொழுது உங்கள் ஆண்கள் உங்களுக்கு விடுதலையளிக்க மறுக்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொண்டீர்களோ அப்போதே போரில் ஒரு பகுதி வெற்றி பெற்று விட்டதாகவே அர்த்தம்.

பல நூற்றாண்டுகளாகவே உங்கள் கற்பு, உங்கள் அறிவு ஆகியவை புகழ்ந்துரைக்கப்பட்டு வந்திருக்கிறது. உங்களது வீரச் செயல்கள் உலகத்தையே வியக்கச் செய்திருக்கிறது. உங்களது பெண்கள் தங்கள் கணவனுடன் உடன் கட்டை ஏறியிருக்கின்றனர். அப்படிப்பட்ட நீங்கள், உங்கள் குழந்தைகளுக்காக எவ்வளவு இடையூறு வந்தாலும் நீங்கள் பின்வாங்க மாட்டீர்கள் என்றாலும் எச்சரிக்கையாக இருங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



உங்களைக் கரையேற்றும் உங்களது முயற்சியை வீண்பேச்சில் செலவிட்டு விடாதீர்கள். அழகான சொளுற்களிலும், கவர்ச்சிகரமான தீர்மானங்களாலும், பயனற்ற சட்டதிட்டங்களாலும் உங்களது மனோவலிமையை இழந்து விடாதீர்கள் உங்களது நாட்டின் தட்பவெப்ப நிலைமீதும், தேசிய அடிமைத்தனத்தின் மீதும், தேசிய வறுமைமீதும் பழி சுமத்தி உங்கள் முயற்சியில் சுணங்கி விடாதீர்கள். பண்டிதராமாபாய் இதற்கெல்லாம் பின் வாங்கவில்லை.

பழக்க வழக்கங்களிலும், தேகவலுவிலும் அறிவிலும் முதிர்ந்த தாய்கள் தயாராகும் வரை அவர்களுக்கு, லட்சிய நோக்கோடு கூடிய பிள்ளைகள் பிறப்பது இயலாது. இந்தியாவும் தலை நிமிர்ந்து சுதந்திர நாடாவதும் இயலாது.

உங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை மறைத்து, உங்களது தத்துவங்களின் கொடுமைகளை மறைத்து, உங்களது தத்துவங்களின் உயர்வைப் பற்றியும், ஞானமார்க்கத்தின் பெருமையையும் சாஸ்திரங்களின் உயர்வையும், இதிகாசங்களின் அழகைப்பற்றியும் எடுத்துரைக்க உங்கள் நாட்டிலிருந்து சிலர் எமது நாட்டிற்கு வருகிறார்கள். அவர்களது மொழிகளைக் கேட்டு இங்கும் சிலர் ஏமாறுகிறார்கள்.

அவர்களால் எங்கள் உதவியை நீங்கள் பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது.

உங்களுடைய ஆண்கள் செய்துள்ள சீர்திருத்தப் பணிகளைப் பாராட்டுமாறு எங்களுக்குக் கூறப்படுவதுண்டு. உங்களது குறைபாடுகள், அந்தக் குறைகளைப்போக்கிக் கொள்ள நீங்கள் எடுக்கும் முயற்சி அகியவற்றைப்

படிப்பகம்

www.padippakam.com



பார்க்கும்போது, இங்கு நடைபெறும் சீர்திருத்தப் பணிகள் கொஞ்சமும் பாராட்டக் கூடியதில்லை. இதற்காக உங்களது ஆண்களைப் பாராட்டுவதென்றால் அதுகேலி செய்வதாகவே அமையும்.

நான் இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ள பன்னிரண்டு சம்பவங்களும் உண்மையில் நடந்தவைகளாகும். உங்களில் பலருக்கு இவை தெரியாத விஷயங்களாக இருக்கலாம்.

ஏனெனில் பரந்துபட்ட உங்களது நாட்டில் பல பகுதிகளில் நடப்பது உங்களது கவனத்திற்கு வராமலிருந்திருக்கலாம். ஆனால் இவை உண்மையான விஷயங்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே எனது புத்தகத்தைப் பார்த்து ஆத்திரம் கொள்வதில் பயனில்லை. இன்னும் உங்களுக்கு மேல் நாட்டிலிருந்தே உதவி தேவைப்படுகிறது. எனவே உங்களது குறைபாடுகளை நாங்கள் நன்கு தெரிந்து கொள்வது அவசியம்.

எனது 'புத்தகங்கள் உங்களைப் பற்றி அவதூறு கூறுவதாகச் சொல்பவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும் உங்களுக்கு நன்மை செய்பவர்கள் அல்லர். புண்ணை பூ கொண்டு மறைத்து வைப்பவர்கள் எப்படி நண்பர்களாக முடியும்!

சிறிது காலமாக உங்கள் நாட்டிலிலுள்ள உங்கள் பெண்கள் சீர்திருத்த வேலைகளில் இறங்கி உழைத்து வருவதை அறிந்து அமெரிக்கர்களாகிய நாங்கள் மகிழ்கிறோம். கொடுமைகளைச் சகித்துக் கொண்டு போவதைவிட

படிப்பகம்

www.padippakam.com



நேர்மையான வலிமையான ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்காக உழைப்பது சிறப்பானதாகும்.

மேல் நாட்டினராகிய நாங்கள் உங்களுடன் வெளிப்படையான, சூதில்லாத நண்பர்களாக இருப்பதே நல்லது. சூரிய ஒளியால் கெடுதல் வந்துவிடாது, தீமையே அதனால் அழிகிறது.

பொய் சொல்லி மற்றவர்களின் பாராட்டைப் பெறுவது வீணாகும். ஒருவர் மற்றவரது உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். இதனால் உண்டாகும் மனப்பண்புகள் இயல்பானவை. நம் இருவருக்குமே குறைகளும் உண்டு, குணங்களும் உண்டு. பரஸ்பரம் நாம் அவைகளை அறிந்து கொண்டு, ஒருவருக்கொருவர் துணையாய் இருக்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

மருதம் பதிப்பகம்
202, கடைவீதி,
ஒரத்தநாடு–614 625

படிப்பகம்